


# அச்சுதம்

## 7ம் வருட நிறைவு மலரும் பரிசளிப்பு விழா மலரும்

## 2008 / 2009

தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயம்

திருகோணமலை

1823

2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுதம்

## 7ம் வருட நிறைவு மலரும்
## பரிசளிப்பு விழா மலரும்
## 2008/2009

## தி/ பெருந்தெரு விக்நேஸ்வர
## மகா வித்தியாலயம்
## திருகோணமலை

## 1823 -2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

திருக்கோணமலையினிலே பல்கலை
ஈந்திடும் விக்நேஸ்வரமே
(திருக்கோணமலையினிலே)

திரு தரும் கல்வியும் திகழ் ஒளி பரப்பிட
மாணவர் மாண்பும் உயர்ந்தே ஓங்கிட
ஒளிதரு நிலையமாம் பெரும்புகழ் ஈட்டிடும்
உருவினில் அமைந்த ஒளி தரும் கூடமாம்
(திருக்கோணமலையினிலே)

சிவப்பு நிறத்தில் செம்மையும் காட்டி
மஞ்சள் நிறத்தில் மங்களம் போற்றி
வெண்மை ஊட்டி தூய்மை கூட்டி
அன்பும் பண்பும் அறிவும் பெருக்கும்
(திருக்கோணமலையினிலே)

நால்வகைச் சமயமும் நயமுடன் கற்று
நற்றமிழ் அறிவையும் சிறப்புடன் பெற்று
நீதிகற்று நேர்மை ஏற்று
சேவையாற்றும் செந்தமிழ்க் கூடமாம்
(திருக்கோணமலையினிலே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Motto

## மகுட வாக்கியம்

"அன்பும் அறனும் பண்பும் பெறுக"

# Vision

## நோக்கக்கூற்று

"நவீன தொழில் நுட்ப உலகிற்கு
முகம் கொடுக்கக்கூடிய
அறிவும், அறனும், சிறந்த பண்பும்
கொண்ட சமூகம்"

# Mission

## பணிக்கூற்று

"நவீன கல்வி உத்திகள் மூலம்
எதிர்காலத்தின் சவால்களுக்கு ஏற்ப
மேம்பாடடைந்த ஓர் சமூகத்தை
அர்ப்பணிப்புடன் உருவாக்குதல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from the Secretary



It's a great delight to sent congratulatory message to the school Prize Giving of T/Peruntheru Vigneswara M.V which illuminate the educational field in the city of Trincomalee as the oldest school of the city.

It is in deed education which stimulate a good condition of life. It creates cultured, intellectual society. It has a massive responsibility to elevate mankind, morality and mutual understanding in the society during school life.

Life in society is a reflection of the experience gained in the school. Hence, school involves in the formation of building the character of student besides imparting knowledge and to train themselves to take up responsibility in order to adopt themselves to the environment at present and future.

It is obvious that in the recent past, T/Peruntheru Vigneswara M.V. is leading in every field, in curricular and also in co-curricular activities.

I wish the principal and staff the best and congratulate them for being the good example of progressiveness in the educational sector.

I am happy to know T/Peruntheru Vigneswara M.V. is publishing it's school magazine "ACHCHUTHAM" and I wish the committee members for their efficient cooperation and endurance.

Thanking You,

Mr. H.K.U.K. Weerawardana
Secretary,
Ministery of Education, Cultural Affairs,
Land, Land Development & Transport,
Eastern Provience - Trincomalee.
02.05.2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



திருகோணமலை பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயத்தின் 187வது ஆண்டின் பயணத்தில் நடைபெறும் பரிசளிப்பு விழாவினையொட்டி வெயிடப்படும் 'அச்சுதம்' சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துக்களை வழங்குவதில் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

திருகோணமலை மாவட்டத்தில் நீண்ட வரலாற்றை கொண்ட ஒரு கல்விக் கூடமாக இயங்கிவரும் இப்பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளிலும், இணைக்கல்விச் செயற்பாடுகளிலும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருவதனை நாம் அவதானிக்கின்றோம். நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள இப்பாடசாலை சாமானிய மக்களின் பிள்ளைகளின் கல்விக்கு வழிகாட்டும் அதே வேளையில் எவரையும் வரவேற்று உபசரிக்கும் உயர்ந்த பண்பைக் கொண்ட ஒரு நிறுவனமாகவும் இயங்கிக் கொண்டிருப்பது பாராட்டப்படவேண்டியதாகும்.

மாணவர்களின் பல்வேறு திறன்களையும் விருத்தி செய்வதற்கான களத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியது பாடசாலைகளினது பொறுப்பாகும். மாணவர்களது மொழித்திறனையும், படைப்பாற்றலையும் வளர்ப்பதற்கு பாடசாலைச் சஞ்சிகைகள் பெரும் பங்காற்றமுடியும். அவ்வகையில் இப்பாடசாலையிலிருந்து தொடர்ச்சியாக வெளிவரும் 'அச்சுதம்' எனும் சஞ்சிகை குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியதாகும்.

ஒரு பாடசாலை வெறும் பரீட்சை நோக்குகளை மாத்திரமே கருத்திற்கொண்டு இயங்கும் பொழுது பயன்தரு கல்வி நிறுவனமாக விளங்க முடியாது. மாறிவரும் சமூகத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்த பிரஜைகளை உருவாக்க வேண்டியது பாடசாலைகளின் பணியாகும். ஆகவே கல்வியின் நவீன சிந்தனைக்கேற்ப மாணவர் சமுதாயத்தை வழிநடத்துவதற்கு ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவை அவசியமானதாகும்.

அவ்வாறாக மாணவர்களின் வளர்ச்சி குறித்து அக்கறையுடன் செயற்படும் ஆசிரியர்களையும், அதிபரையும் இப்பாடசாலையில் எம்மால் காணமுடிகின்றது. இவர்களை நான் பாராட்ட விரும்புகின்றேன்.

விக்நேஸ்வர மகாவித்தியாலயம் வரலாற்றில் மேலும் சீரிய தடங்களைப் பதித்துச் செல்ல எமது வாழ்த்துக்கள்.

திரு. சி. தண்டாயுதபாணி
பிரதிச்செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
காணி காணி அபிவிருத்தி, போக்குவரத்து அமைச்சு
கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.
02.05.2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



தமிழும் சமயமும் வளர்த்து, தூய நெறி வழுவாது வாழ்ந்த சான்றோரினால் செழுமைப்படுத்தப்பட்ட திருகோணமலையிலே சிறப்புடன் கல்விப் பணியாற்றிவரும் தி/ பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவை முன்னிட்டு வெளிவரும் 'அச்சுதம்' மலரிற்கு வாழ்த்துக்களை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

பாடசாலையில் மாணவர்கள் தம் கல்விப் பயணத்தின் இலக்கை அடைவதற்கு செயல்முறையுடன் கூடிய கற்றற்சூழலும், காட்சிநிலை அனுபவங்களும் அவசியமாகின்றன. ஒவ்வொரு மாணவரிடமும் தனித்துவமான பண்புகளும் உள்ளார்ந்த திறமைகளும், ஆற்றல்களும் காணப்படுகின்றன. இவ்வாறான ஆற்றல்களை வெளிக்கொண்டு வரக்கூடிய சந்தர்ப்பங்களை மாணவர்கட்கு வழங்குவதும், அவர்களின் எதிர்கால வாழ்வை சிறப்பாக வடிவமைக்கக்கூடிய கற்றல் அனுபவங்களை வழங்குவதும் ஆசிரியர்களின் தலையாய கடமையாகும். ஏனெனில் இவை தனியாளின் நுண்மதி வளர்ச்சியில் அதிக பங்களிப்பை வழங்குகின்றன.

எம் முன்னோரால் எமக்கு அளிக்கப்பட்ட சமய நெறிகளையும், கல்வி, கலாசார சமூக விழுமியங்களையும் பேணிக் காப்பதும், அவற்றை எதிர்கால சந்ததிக்கு எடுத்துரைப்பதும் கூட பாடசாலையின் கடமையாகின்றது. ஒவ்வொரு பாடசாலையும் தனக்கெனத் தனியான பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. அந்த வகையில் இவ்வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து அர்ப்பணிப்புடன் முன்னெடுத்துச் செல்லும் கல்விச் செயற்பாடுகளை மனதாரப் பாராட்டுகின்றேன். அத்துடன் 'அச்சுதம்' எனும் மலரானது இப்பாடசாலை மாணவர்களின் மிகச்சிறந்த வெற்றிகளையும் சாதனைகளையும் ஏந்தி வரும் மலராக மாத்திரமன்றி, எதிர்காலத்தின் சிறந்த சிற்பிகளையும், சாதனையாளர்களையும் உருவாக்குகின்ற உன்னத பணியினையும் மேற்கொள்ள வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

திருமதி. எஸ்.கே. ஆனந்தராஜா
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் ஆசியுரை



மலர்ந்திருக்கும் இவ்வாண்டில் எமது வித்தியாலயத்தின் 187வது ஆண்டின் பயணத்திலே "அச்சுதம்" பரிசளிப்பு விழா மலரானது மலர்ந்திருப்பதையிட்டு மனம் மகிழ்கின்றேன்.

"ஒரு பண்பாடோ, சமயமோ நிறுவனமோ நிலைத்திருக்க வேண்டுமாயின் காலத்துக்கு காலம் தோன்றும் மாறுதல்களுக்கும், தேவைகளுக்கும் முகங்கொடுக்கும் ஆற்றல் பெற்றதாய் அது இருத்தல் வேண்டும். பழைய பெருமைகளிலும், சாதனைகளிலும் தன்னை இழந்து விடாது உகந்தவற்றைப் பேணி முன்னைய காலங்களில் ஈட்டிய அனுபவங்களை துணையாகக் கொள்வதோடு எதிர்கால வளர்ச்சிக்கு வேண்டிய புதிய முயற்சிகளிலும் முனைந்து நிற்க வேண்டும். "மாறுதல் இந்த ஜகத்தின் முதலாவது விதி" என்கின்றார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

ஆகவே மாற்றம் ஒன்றே மனித சமூகத்தை மாற்றியமைக்கும் உறுதி உடையது. நம்பிக்கையுடன் எம்மை நாடி வரும் மாணவச் செல்வங்களுக்கு நாம் புதிய கருத்துக்களையும், வல்லமைகளையும் தேடி வளர்க்கும் ஆற்றல் நிறைந்தவர்களாக்கி அவர்களை வையகத்தில் வாழ்வாங்கு வாழ வளப்படுத்த வேண்டும் என்பதே எனது பேரவா ஆகும்.

எமது வித்தியாலயத்தின் மாணவர்களின் ஆக்கத்திறனுக்கும், தேடலுக்கும் கிரகித்தலுக்கும் வழிவகுக்கும் "அச்சுதம்" சஞ்சிகை தனது 7வது ஆண்டின் நிறைவினை கொண்டாடும் இவ்வேளையில் எனது நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு மேலும் ஆண்டுதோறும் அரிய இப்பணி தொடர இறை ஆசியையும் வேண்டிநிற்கின்றேன்.

இன்றைய காலப்போக்கிற்கு ஏற்ப அரிய பல ஆக்கங்களை தாங்கிய இப்பரிசளிப்பு விழாமலர் சிறப்புறுவதற்கு ஓயாது உழைத்திட்ட ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் எனது நன்றி கலந்த பாராட்டுக்களை தெரிவிப்பதோடு "என்றும் இம்மலர் வாடாத மலராக மணம் வீச" எனது உளமார்ந்த நல்வாழ்த்துக்களை அள்ளி வழங்குகின்றேன்.

திரு. ந. இராஜநாதன்
அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபரின் ஆசியுரை



"தெட்சண கைலாயம்" எனப் போற்றப்படும் திருகோணமலையில் தொன்மையும் சிறப்பும்மிக்க எமது வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா "அச்சுதம்" மலருக்கு ஆசியுரை வழங்குவதில் அகம் மகிழ்கின்றேன்.

எமது வித்தியாலயமானது 187வது ஆண்டு வளர்ச்சிப்பாதையில் பயணம் செய்யும் இவ்வேளையில் பல சாதனைகளையும், வெற்றிப்படிகளையும் நிலை நாட்டி தனக்கென சிறப்புடன் விளங்குவதை நினைக்கையில் உளம் மகிழ்கின்றது.

"பாடசாலையானது சமூகத்தின் எதிர்பார்ப்புக்களையும் தேவைகளையும் நிறைவு செய்வதற்காக கருமமாற்றும் இன்றியமையாத நிறுவனமாகும். எமது சமூகத்தின் தேவைக்காக பாடசாலை வாசல்கள் திறந்திருக்க வேண்டும். அதற்கமைய எமது பாடசாலையானது எப்பொழுதும் பல்வேறு சூழ்நிலைகளிலும், பல்வேறுபட்ட சூழலிலும் இருந்து வரும் மாணவர்களின் வாழ்க்கையில் அறியாமை எனும் இருள்நீக்கி அறிவொளி ஏற்றி வைக்கின்றது. "என்றும் அழியாச் செல்வமாகிய கல்வியை அடைய வேண்டுமென உறுதியுடன் சமூகத்திற்காக உழைத்து வருகின்றது.

இவ்வேளையில் பல்துறை சார்ந்த ஆக்கங்களை உள்ளடக்கி புத்துணர்வை ஊட்டும் வகையில் வெளிவரும் இவ் "அச்சுதம்" விழா மலருக்கு ஆசிகளை வழங்குவதுடன் இவ்வரிய முயற்சிக்கு உறுதுணை நின்ற ஆசிரியர்ளையும் மாணவர்களையும் உளமார பாராட்டி என் இனிய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. சீ. மதியழகன்
பிரதி அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் இதயத்திலிருந்து



தேவாரப் பாடல்பெற்ற கோணேஸ்வரப் பெருமான் அமர்ந்திருக்கும் திருமலை நகரத்தின் மத்தியிலே கவின் நிலையுடன் விளங்கும் தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகாவித்தியாலயம் தனது 187வது ஆண்டிலே பயணம் செய்யும் வேளையில் "அச்சுதம்" சஞ்சிகையின் 7வது ஆண்டின் நிறைவினையும், பரிசளிப்பு விழாவினையும் முன்னிட்டு இச்சிறப்பு மலர் வெளியிடப்படுகின்றது.

எமது அதிபரின் ஆக்கபூர்வமான தூரநோக்கு சிந்தனையுடன் மாணவர்களின் தமிழ் மொழித்திறனை வளப்படுத்தும் நோக்கில் எழுத்தாக்க சிந்தனைக்கு வித்திட்ட சஞ்சிகை "அச்சுதம்" ஆகும். கன்னி முயற்சியாக இச்சஞ்சிகையை 27.03.2003ம் ஆண்டு வெளியிட்டோம்.

"அச்சுதம்" என்பது அறுகும் அரிசியும் கூடிய கலவையாகும். இவை அழிவற்றவை, உயிரினங்களை வாழவைப்பதோடு மங்கள நிகழ்விலும் வாழ்த்துக் கூறுபவை. அத்தோடு 'அ' கரம் முதல் எழுத்தாக விளங்குவதோடு இறைவனின் திருநாமத்தையும் நினைவுபடுத்துகின்றது. இத்தகைய சிறப்புக்களை தன்னகத்தே கொண்டு மாணவர்களின் ஆக்கங்களுக்கு களம் அமைத்து உறுதுணை புரிந்து வருகின்றது. இன்று ஆல் போல் தளைத்து அறுகுபோல் வேரூன்றி தனது ஏழாவது ஆண்டில் மூன்றாவது பரிசளிப்பு விழா சிறப்பு மலராக மலர்ந்துள்ளது மகிழ்வுக்குரிய விடயமாகும்.

"வாடாமலராய்" என்றும் சிறப்புடன் விளங்கும் வகையில் இம் மலரை மலரச் செய்வதில் எமக்கு பக்கபலமாக இருந்து அயராது உழைத்த உள்ளங்களுக்கும் ஆக்கங்களை நல்கிய அறிஞர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் என்றும் எமது மனமார்ந்த நன்றிகளை நயமுடனே நவில்கின்றோம்.

உறக்கும் துணையதோர் ஆலம் வித்தீண்டி
இறப்ப நிழற்பயந்தா அங் - கறப்பயனும்
தான் சிறிதாயினும் தக்கார் கைப்பட்டகால்
வான் சிறிதாப் போர்த்து விடும்

(38 பாடல் நாலடியார்)

திருமதி. வ. வசிகரன்
இதழாசிரியர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

## தலைவர்

திரு. நா. இராஜநாதன்

(வித்தியாலய அதிபர்)

## உபதலைவர்

திரு. சீ. மதியழகன்

(பிரதி அதிபர்)

## செயலாளர்

திரு. நே. சிவநேசன்

## இதழாசிரியர்

திருமதி. வ. வசிகரன்

## உறுதுணையாளர்

திருமதி. க. தேன்மொழி

திருமதி. ம.மு. ஹசன்

திருமதி. வி. யோகீஸ்வரன்

திருமதி. சி. சந்திரசேகரம்

செல்வி. ச. ரதீஸ்வரி

திரு. அ. ஹரிகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Principal




**Mr. N. Rajanathan (SLPS - I)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/ பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலய பரிசளிப்பு விழா தொடர்பான அதிபர் அறிக்கை



கிழக்கிலங்கையின் வரலாற்றுப் புகழ்மிக்க தேவாரப் பாடல் பெற்ற திருத்தலத்தில் அமர்ந்திருக்கும் கோண நாதரின் அருளாட்சியும் அன்னை பத்திரகாளியின் அருள் கடாட்சமும் பெற்று விளங்கும் இயற்கை அழகு கொட்டிக்கிடக்கும் திருகோணமலையின் நகரத்தின் பிரதான வீதியில் மிகத் தொன்மையான வரலாற்றைக் கொண்டு சீரிய கல்விப் பணியினை சிரத்தையுடன் ஆற்றி வரும் கலைக்கூடமாக எங்கள் விக்நேஸ்வர மகாவித்தியாலயம் அமைந்துள்ளது.

"தி/ விக்நேஸ்வர மகாவித்தியாலயம்" என்ற பெயருக்கு ஏற்றாற் போல் பாடசாலை வாயிலிலே வீற்றிருந்து வழிகாட்டும் முதல்வராக விக்நேஸ்வரப் பெருமானையும் கலைகளை அள்ளி வழங்கிட கலைவாணியையும் உறுதுணையாக கொண்டு" அடையா நெடுங்கதவும் அஞ்சேல் என்ற சொல்லும்" உடையதாக நாள்தோறும் நாடிவரும் கல்விச் சமூகத்திற்கு அருள் ஒளியினை வழங்குகின்றன.

அதிலும் அரிதாகப் பெற்ற மானிட வாழ்வின் மேம்பாட்டிற்காக அறியாமை என்னும் இருளை நீக்கி அறிவொளி கொடுக்கும் எமது வித்தியாலயம் மனித வாழ்விற்கு மிக இன்றியமையாத "அன்பும் அறனும் பண்பும் பெறுக" என்ற மகுட வாசகத்தையும் (Motto) நவீன கல்வி உத்திகள் மூலம் எதிர்காலத்தின் சவால்களுக்கு ஏற்ப மேம்பாடடைந்த ஓர் சமூகத்தை அர்ப்பணிப்புடன் உருவாக்குதல் என்ற பணிக் கூற்றினையும் (Mission) நவீன தொழில்நுட்ப உலகிற்கு முகம் கொடுக்க கூடிய அறிவும் அறனும் சிறந்த பண்பும் கொண்ட சமூகம் (Vision) என்ற நோக்க கூற்றினையும் கொண்டு எமது பாடசாலை தனது கல்விப் பணியினை சோராது ஆற்றி வருகின்றது.

இவ்வினிய வேளையிலே எமது வித்தியாலயம் 187வது அகவையில் காலடி பதிக்கின்ற இத்தருணத்தில் எமது பாடசாலையில் வெளியிடப்படும் "அச்சுதம்" சஞ்சிகையின் 7வது நிறைவினையும் 2008-2009 வரையுள்ள இரண்டு ஆண்டுகளுக்கான பரிசளிப்பு விழாவினையும் இணைத்து இன்று பெருவிழாவாக கொண்டாடுவதில் அளவிலா ஆனந்தம் அடைகின்றேன்.

அந்தி மாலைப் பொழுதில் உங்கள் முன்னிலையில் எமது பாடசாலையின் ஆரம்பம். அதன் வளர்ச்சிப் போக்கு இன்றைய நிலை பற்றி முக்கியமானவற்றை எடுத்துக் கூறலாம் என நினைக்கின்றேன். மெதடிஸ்த திருச்சபையினால் 1823இல் "ஜோசப் பொட்" அவர்களின் தலைமையின் கீழ் எமது பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு காலச்சுழற்சியில் அதன் வளர்ச்சிப் போக்கு உள்வாங்கிக் கொண்ட மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப 8.5.1979 இல் மகாவித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டு 21.07.1981 தொடக்கம் உயர்தர கலையும் 1996 தொடக்கம் வர்த்தக வகுப்புகளுடன் தற்பொழுது 775 மாணவர்களையும் 36 ஆசிரியர்களையும் 3 ஊழியர்களையும் கொண்டு மகத்தான பணியினை மாண்புடன் ஆற்றி வருகின்றது.

உளம் பூரிக்கும் இவ்வேளையில் பாடசாலையின் வளர்ச்சிக்கு இதுவரை காலமும் தம்மை இணைத்து தூண்களாக நின்று உறுதுணை புரிந்த அதிபர்கள் நினைவு கூறப்படவேண்டியவர்கள் என்றும் எம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றிக்குரியவர்கள் அந்த வகையில் திரு. ம. முருகுப்பிள்ளை, திரு. சி. சின்னையா உபாத்தியாயர், பண்டிதர் சபாபதி, ஆசிரியமணி திரு. ம. சிதம்பரப்பிள்ளை, திரு. எஸ். கே. செல்வநாயினார், திரு. எஸ். கனகசபை, திரு. எஸ். மார்க்கண்டு, திரு. சி. நடராஜா, திரு. க. ஜீவரெட்ணம், திரு. எஸ். பாலசுப்பிரமணியம், திரு. எஸ். திருச்செல்வம், திரு. எஸ். சந்திரகாந்தன், திரு. கு. கோணாமலை ஆகியோர் ஆவார்கள். இவர்களைத் தொடர்ந்து எனது சேவை தொடர்கின்றது. மேலும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து ஓய்வுபெற்றும் இடமாற்றம் பெற்றும் சென்றுள்ள ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

"முன்னோக்கு' என்ற காலத்தின் தேவைக்கேற்ப நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் வெற்றியுடன் எதிர்கொள்ள எமது கல்விச் சமூகத்தை நாம் தயார்படுத்துகின்றோம், வளப்படுத்துகின்றோம், வழிகாட்டுகின்றோம். அந்த வகையில் இன்று நவீன தொழிநுட்ப உலகிற்கும், சவால்களுக்கும் மாணவர்கள் முகங் கொடுக்கத்தக்க வகையில் அவர்களுக்கு தேவையான சகல பௌதீக வளங்களுடனும் விஞ்ஞான ஆய்வு கூடச் செயற்பாடுகள், நூலக செயற்பாடுகள், "அச்சுதம்" சஞ்சிகை ஆக்கத்திறன் வெளியீட்டு செயற்பாடுகள், கணினி தொழில்நுட்பக் கல்வி கற்கை முறை செயற்பாடுகள் யாவும் ஆசிரியர்களால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. இச் செயற்பாடுகளில் அவர்களின் வளர்ச்சிப் போக்கினையும் நாம் உற்று நோக்க முடிகின்றது.

1) 2008ஆம் ஆண்டிற்கான புத்தாக்கப் போட்டியில்
   தரம் - 11 சேர்ந்த செல்வன் ச. வியூகாந் ஜனாதிபதி விருதைப் பெற்றுள்ளார்.

2) 2009 ஆம் ஆண்டிற்கான விஞ்ஞான வினா விடைப் போட்டியில் மாகாணமட்டத்தில் தரம் 6ஐச் சேர்ந்த செல்வன் S. மயூரன் ம. சஞ்சயன் தங்கப் பதக்கத்தை வென்றெடுத்துள்ளனர்.

3) வலயமட்டத்தில் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற விஞ்ஞான ஆய்வுகூடப் போட்டியில் 2007, 2008, 2009 ஆகிய ஆண்டுகளில் தொடர்ந்தும் முதலாம் இடத்தை எமது வித்தியாலயம் பெற்றுவந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

4) மாகாணமட்டத்தில் நடைபெற்ற ஆசிரியர்களுக்கான "கணினி மென்பொருள் ஆக்கப் போட்டியில்" விஞ்ஞான பாடத்தில் திருமதி. வ. இராஜேந்திரன் 2008 இல. 3ம் இடத்தையும், 2009ஆம் ஆண்டில் - 2ம் இடத்தையும் பெற்றுள்ளார்.
   இந்நிகழ்வுகளில் வெற்றிபெற்ற மாணவர்களையும் ஆசிரியரையும் வாழ்த்தி வழிநடத்திய ஆசிரியர்களுக்கும் நன்றி கூறி மேலும் தொடர்ந்து உயர்வு பெற வாழ்த்துகின்றேன்.

நாம் வெற்றிப்பாதையை நோக்கி பயணம் செய்கின்றோம் என்பதனை மாணவர்களின் கடந்த கால பரீட்சை பெறுபேறுகள் பறை சாற்றுகின்றன. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் க.பொ.த. சாதாரணதரம் (G.C.E. O/L) க.பொ.த உயர்தரப் பரீட்சை (G.C.E.A/L) முடிவுகள் பல்கலைக்கழக அனுமதிகள், எடுத்துக்காட்டுகின்றன.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்

செல்வன் கு. தனுஷ்ராஜ்
செல்வன் ம. சஞ்ஜீவன்
செல்வன் பி. பிதூஷன்
செல்வி. அ. வஷீமா
செல்வன் ஆ. சுஜீவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வன் மு.ஜி.றி. முஹம்மது ஜிப்றிஇப்ரான்

இத்தோடு பதின்மூன்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழகம் சென்றோர் விபரம்.

| | |
|---|---|
| செல்வன் தே. அன்ரனிகியூபேட் | A, 2B வர்த்தகப் பிரிவு |
| செல்வன் அ. ரூபகாந்தன் | 2A, B வர்த்தகப் பிரிவு |
| செல்வன் த. தேவநேசன் | 2A, B வர்த்தகப்பிரிவு |
| செல்வி க. அனுஜா | A, 2B வர்த்தகப்பிரிவு |
| செல்வி இ. ரஜீந்தா | A, B, C கலைப்பிரிவு |
| செல்வன் அ. அலிபஸ்ரி | A, 2B வர்த்தகப்பிரிவு |
| செல்வன் சு. பிரதீபன் | 2A, B வர்த்தகப்பிரிவு |
| செல்வன் இ. ஸ்ரீதரன் | A, B,C வர்த்தகப்பிரிவு |
| செல்வன் தெ. சிராச் | A, 2C வர்த்தகப்பிரிவு |
| செல்வி. சி. மானல் | 3B கலைப்பிரிவு |
| செல்வி. சு. லக்சுமி | 3B வர்த்தகப்பிரிவு |
| செல்வன். அ. சிவப்பிரியன் | 3B வர்த்தகப்பிரிவு |

இத்தோடு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவரகள் அனைவரும் திறமையான சித்தியை பெற்றுள்ளனர். இவர்கள் அனைவரையும் என்றும் பாராட்டுகின்றேன். அத்தோடு க.பொ.த சாதாரணதர பரீட்சையில் (2009) சிறந்த பெறுபேறாக செல்வன் செல்வேந்திரன் சஜித்குமார் 7A, B, C பெற்று எமது பாடசாலைக்கும் எமக்கும் பெற்றோருக்கும் பெருமையினை பெற்றுத்தந்துள்ளார். அவரையும் உளமார உவகையுடன் பாராட்டுவதோடு க.பொ.த உயர்தர கல்வியை தொடர்வதற்கு தகுதி பெற்றுள்ள அனைத்து மாணவர்களையும் பாராட்டுகின்றேன்.

இத்தோடு ஒவ்வொரு வருடமும் நடைபெறும் தமிழ் மொழித்தினப்போட்டிகள் ஆங்கில மொழித்தினப் போட்டிகள், இல்ல மெய்வல்லுனர் போட்டிகள், சைவ வினாவிடைப் போட்டிகள், ஓவியப் போட்டிகள் யாவற்றிலும் கலந்து கொண்டு மாணவர்கள் சாதனை படைத்துள்ளார்கள். அத்தோடு 2008 தமிழ் மொழித்தினப் போட்டியில் பாடசாலை மட்டம் தொடக்கம் மாகாணமட்டம் வரை பல போட்டிகளைச் சந்தித்து எமது மாணவர்கள் வெற்றிபெற்று வந்துள்ளனர். வில்லுப்பாட்டு நிகழ்வு, காவடி நடனம், நாட்டிய நாடகம் என்பன இவற்றை எமக்கு பறைசாற்றுகின்றன. முதன் முறையாக தேசியமட்ட போட்டிக்கு "காவடி நடனம்" செல்லவிருக்கின்றது என்பது மகிழ்ச்சி தரும் பெருமைக்குரிய விடயமாகும். இம்முறை மாகாணமட்ட போட்டிகளில் மொத்தமாக 30 மாணவர்கள் பங்குபற்றியுள்ளனர் என்பது சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. இந்நிகழ்வுக்கு பொறுப்பாக செயற்பட்ட ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் மீண்டும் நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவற்றோடு மாணவர்கள் மத்தியில் சமய விழுமியங்களையும் பண்பாட்டு பாரம்பரியங்களையும் பேணிக்காக்கும் நோக்கில் வருடந்தோறும் நவராத்திரிவிழா, குருபூசைத்தினம், மீலாத் விழா, ஒளிவிழா என்பன கொண்டாடப்படுகின்றன.

மேலும் மாணவர்களின் தலைமைத்துவ பண்பு, கட்டொழுங்கு, சமூகத்திற்கு சேவையாற்றும் பண்பு என்பவற்றை கட்டியெழுப்பும் வகையில் கட்டொழுங்குக் குழு, சாரணர் இயக்கம், குருளைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரணர், பெண்கள் சாரணியம், இன்ரக் கழகம், மாணவர் ஒன்றியம் என்பன இயங்குகின்றன.

மேலும் ஆசிரியர் நலன் புரிச்சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பன பாடசாலையின் வளர்ச்சியில் "தோளோடு தோள்" நின்று உதவி வழங்கி வருகின்றன.

இவைமட்டுமன்றி எமது பாடசாலையில் "JICA" செயற்றிட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் கணித பாட "100 பெட்டி" கணித செய்கையில் மாணவர்களின் விரைவுத்திறன், ஞாபகசக்தி என்பன அதிகரிப்பதுடன் கணித பாட பெறுபேற்றிலும் மாற்றத்தை கண்டுள்ளோம் என்பதை மகிழ்வுடன் கூறி JICA செயற்றிட்டத்திற்கும் நன்றியினை தெரிவிக்கின்றேன்.

இத்தோடு எமது பாடசாலையில் மாற்று வலுவுள்ள மாணவர்களுக்கான செயற்பாடுகள் செவ்வனே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இச் செயற்பாட்டிற்குள் இணைந்த மாணவர்களின் நடத்தை கோலங்களில் முன்னேற்றகரமான செயற்பாடுகளை அவதானிக்க முடிகின்றது. அவர்கள் தற்பொழுது ஏனைய மாணவர்களோடும் ஆசிரியர்களோடும் உறவுகளை வளர்த்து செல்லுமளவிற்கு உளவளர்ச்சியினையும் மகிழ்வினையும் பெற்று விளங்குகின்றனர் என்பது குறிப்பாக சுட்டிக்காட்ட வேண்டிய விடயமாகும். இச் செயற்பாட்டிற்கு பொறுப்பாக சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

"மூளையில் சில விடயங்களை திணிப்பது மாத்திரம் கல்வி ஆகாது" என்ற சுவாமி விவேகானந்தரின் கூற்றுக்கிணங்க நீங்கள் எம்மிடம் ஒப்படைத்த மாணவச் செல்வங்களை அவர்களுடைய எதிர்கால சிறந்த வாழ்விற்கும் நாட்டிற்கும் உகந்த வகையில் அவர்களை வழிநடத்தி உங்களிடம் ஒப்படைப்பதற்காக நாம் அனைவரும் ஒவ்வொரு வேளையிலும் சளைக்காது எமது செயற்பாடுகளை முன்னெடுப்போம் என்று உங்களுடன் உறுதி கூறிக்கொள்கின்றேன்.

அதே வேளை என்றும் எங்களோடு இணைந்து பாடசாலையின் வளர்ச்சிக்காகத் துணை நின்று உதவிய, உதவுகின்ற, உதவும் உள்ளங்கள் அனைவரையும் பாராட்டி உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

கருமமு முட்படாப் போகமுந் துவ்வாத்
தருமமுந் தக்கார்க்கே செய்யா - ஒரு நிலையே
முட்டின்றி மூன்று முடியுமேல் - அஃதென்ப
பட்டினம் பெற்ற கலம்

நன்றி

நா. இராஜநாதன்
அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதி அதிபர்




திரு. சீ. மதியழகன்
SLPS - 2- I

பகுதித் தலைவர்
(சிரேஸ்ட பிரிவு)



திருமதி. என். குணசேகரம்

பகுதித் தலைவர்
(கனிஷ்ட பிரிவு)



திருமதி. ச. இராஜதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 187 வருடச் சுவடுகள்......

பூமிப் பந்தில் இறைவன் வரைந்து வைத்த ஓவியங்களாக நாடுகளும் அவற்றின் எழில்களும் அமைந்துள்ளன. இந்த ஓவியங்களில் காலக் கவிஞன் எழுதுகின்ற கவிதைகளாக நாடுகளின் வரலாறுகள் மிளிர்கின்றன. இந்து சமுத்திரத்தின் அலைகரங்களில் தவழும் முத்தென விளங்கும் இலங்கைத் திருநாட்டிற்கும் தொன்று தொட்டு இன்று வரை பல்வேறுபட்ட வரலாறுகள் உண்டு. கேந்திர முக்கியத்துவமுடைய அமைவிடத்தைக் கொண்டிருப்பதனால் அந்நியராட்சிக்கு உட்பட்டமையும் அதன் தாக்கத்தை இன்று வரை கொண்டுள்ளமையும் இலங்கையின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

அந்நியர்களது ஆட்சிக்காலத்தில் இலங்கையின் நிர்வாகம், பொருளாதாரம், சமயம், கல்வி போன்ற துறைகளில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சமயத்திலும் கல்வியிலும் ஏற்பட்ட மாற்றங்கள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவையாகக் காணப்பட்டன. ஏனெனில் இலங்கையை ஆண்ட ஐரோப்பியர்கள் தமது சமயத்தைப் பரப்புவதற்கான ஓர் ஊடகமாகவே கல்வியைப் பயன்படுத்தியுள்ளனர். சமயத்தைப் பரப்பும் பொருட்டுப் பல்வேறுபட்ட கிறிஸ்தவ மதச் சபைகள் இலங்கையில் செயற்பட்டு வந்துள்ளன. இவற்றுள் லண்டன் மிஷனரிச் சபை, பப்ரிஸ்ற் சபை, மெதடிஸ்த சபை, சேச் மிஷனரிச் சபை, அமெரிக்க மிஷன் ஆகிய சபைகள் குறிப்பிடத்தக்கவையாகும். இலங்கையில் பரவலாகப் பாடசாலைகளை ஸ்தாபித்து இற்றை வரையும் கல்வி வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற சபையாக மெதடிஸ்த திருச்சபை விளங்குகின்றது. இன்று இச்சபை சார்பாக பணியாற்றுவதற்காக கலாநிதி தோமஸ்கோக் அவர்களின் தலைமையில் ஆறு பேர் கொண்ட குழுவொன்று 1813ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ம் திகதியன்று தமது கடல் வழிப் பயணத்தை ஆரம்பித்தது. ஆயினும் இலங்கையை அடையமுன்னரே 1814 ஆம் ஆண்டு மே மாதம் 2ஆம் திகதி, கலாநிதி தோமஸ் கோக் அவர்கள் கப்பலிலேயே மரணித்து இறைவனுக்குள் அடைக்கலமானார். இறைபணிக்கெனத் தம்மை அர்ப்பணித்த அவரது திருப்பணிக் குழுவினர் இத்துயரெனும் தடையினால் தளர்ந்து விடாது பயணத்தைத் தொடர்ந்து 1814 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 29ஆம் திகதி இலங்கையின் காலிக் கரையோரத்தை வந்தடைந்தனர். அன்றிலிருந்தே இலங்கையில் மெதடிஸ்த திருச்சபையின் வரலாறு தோற்றம் பெற்றது.

மெதடிஸ்த திருச்சபை இலங்கையின் கரையோரப் பகுதிகளிலேயே தனது ஆரம்ப காலப் பணிகளைச் செயற்படுத்தியது. கரையோரப் பிரதேசங்களில் அமைந்துள்ள நகரங்களுள் திருகோணமலை அதிமுக்கியத்துவம் பெற்ற நகரமாகக் கருதப்படுகின்றது. வரலாற்று முக்கியத்துவம் மட்டுமன்றி உலகப் புகழ்பெற்ற இயற்கைத் துறைமுகத்தைக் கொண்டுள்ளமையால் பொருளாதார முக்கியத்துவம் உடையதாகவும் திருகோணமலை விளங்குகின்றது. கிழக்கிலங்கையின் தலைநகராகக் கருதப்படும் திருக்கோணமலையில் 1817ஆம் ஆண்டு "சாமுவேல்பிரோட் பென்ற்" எனும் திருச்சபைக் குருவானவரால் இறைபணிகள் ஆரம்பிக்கப்பட்டன. மெதடிஸ்தத் திருச்சபையின் பல்வேறு பணிகளில் மெதடிஸ்த ஆலயங்களை ஸ்தாபித்தமையும் மெதடிஸ்த திருச்சபைப் பாடசாலைகளை ஆரம்பித்தமையும் தலையாய பணிகளாகக் கருதப்படுகின்றன. திருகோணமலையில் தற்போது பெரிய கடை என அழைக்கப்படும் பகுதியில் அமைந்துள்ள 179 ஆண்டுகள் பழமை வாய்ந்த மெதடிஸ்த ஆலயத்துக்கான அடிக்கல் 1818இல் நாட்டப்பட்டு 1821 ஆம் ஆண்டு கட்டிடப் பணிகள் பூர்த்தியடைந்து ஆலயம் முழுமை பெற்றது.

1821ஆம் ஆண்டு, திருகோணமலைக்குரிய திருப்பணியாளராக "றொபர்ட் கார்வர்" அவர்கள் நியமிக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து 1822இல் "ஜோசப் பொட்" அவர்கள் நியமிக்கப்பட்டார். இவர்களது காலத்தில், அதாவது 1820 இற்கும் 1823இற்கும் இடைப்பட்ட காலத்தில் திருக்கோணமலையில் மூன்று பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றுள் ஒரு ஆங்கிலப் பாடசாலை திருச்சபை இயங்கிய வீட்டிலேயே நடாத்தப்பட்டது. ஏனைய இரண்டு பாடசாலைகளில் ஒன்று சின்னக்கடைப் பகுதியிலும் மற்றையது புதுக்கடைப் பகுதியிலும் அமைந்திருந்தன. சின்னக்கடைப் பகுதியில் அமையப்பெற்ற பாடசாலையே இன்றைய தி/பெருந்தெரு விக்னேஸ்வர மகா வித்தியாலயமாகும். ஆரம்ப காலத்தில் மெதடிஸ்த திருச்சபையின் மூன்று பாடசாலைகளும் "பெற்றா பாடசாலை" "குறாவற் வீதிப் பாடசாலை", பெருந்தெருப் பாடசாலை எனும் பெயர்களால் அழைக்கப்பட்டு வந்துள்ளன. இதனடிப்படையில் சின்னக்கடைப் பகுதியில் பெருந்தெருவில் பாடசாலையின் அமைவிடம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் "பெருந்தெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலை" என்னும் பெயரால் அழைக்கப்பட்ட இந்தப் பாடசாலை ஸ்தாபிக்கப்பட்ட சரியான திகதி அறியப்படவில்லை. எனினும் 1820 இற்கும் 1823 இற்கும் இடையில் ஸ்தாபிக்கப்பட்டமைக்குரிய சான்றுகள் உள்ளமையால் பிந்திய காலப் பகுதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1823 ஆம் ஆண்டே இன்றைய தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயத்தின் ஆரம்ப ஆண்டாகக் கொள்ளப்படுகிறது.

இலங்கையில் ஐரோப்பிய ஆட்சியாளர்களின் அனுசரணையுடன் இயங்கி வந்த திருச்சபைப் பாடசாலைகள் கிறிஸ்தவ சமயத்திற்கும் ஆங்கில மொழிக்குமே முக்கியமளித்து வந்தன. பெருந்தெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலையும் ஆரம்ப காலத்தில் இந்த அடிச்சுவட்டையே பின்பற்றியது. பாடசாலையின் ஆரம்ப கால அதிபர்கள் பற்றிய விபரங்கள் பூரணமாகக் கிடைக்கப்படவில்லை. ஆயினும் 1885 ஆம் ஆண்டில் மயில்வாகனம் முருகுப்பிள்ளை எனும் உபாத்தியாயர் பாடசாலையின் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டதாக அறிய முடிகிறது.

1858 இல் யாழ்ப்பாணம் வடமராட்சியில் பிறந்த முருகுப்பிள்ளை அவர்கள் தமது இருபத்தைந்து வயதளவில் திருகோணமலைக்கு வந்து மெதடிஸ்த திருச்சபையால் நடத்தப்பட்ட கோட்டடிப் பாடசாலையின் ஆசிரியராக நியமனம் பெற்றார். 1885 ஆம் ஆண்டில் பெருந்தெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலையின் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். ஓரளவு வளர்ச்சி கண்டு நிலையாகிவிட்ட பாடசாலை இக்காலப் பகுதியில் மேலும் விருத்தியடையத் தொடங்கியது. சின்னையா உபாத்தியாயர் இரண்டாவது உபாத்தியாயராகவும் வெற்றிவேலு, கோபாலப்பிள்ளை, கதிர்காமர் என்பவர்கள் ஆசிரியர்களாகவும் நியமிக்கப்பட்டனர். திருகோணமலையின் பெரியார்கள் பலர் பெருந்தெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் கல்வி கற்று உயர்கல்வியும் பெற்று சமூகத்திலும் சிறப்பு பெற்றவர்களாக விளங்கியுள்ளனர். இக்காலகட்டத்தில் கல்வி கற்றவர்களில் கிருஷ்ணதாசன், டாக்டர் சித்திரவேல், தரையப்பா, அரசரத்தினம், கிருஸ்ணபிள்ளை போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ம. முருகுப்பிள்ளை அவர்களுக்குப் பின்னர் பண்டிதர் சபாபதி தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டார். இவரைத் தொடர்ந்து இரத்தினசிங்கம், செபரத்தினம், ஆகியோரும் இன்னும் பலரும் கடமையாற்றியுள்ளார்கள். 1931 தொடக்கம் 1951 வரையான இரு தசாப்த காலப் பகுதியில் "ஆசிரியமணி" திரு.ம.க. சிதம்பரப்பிள்ளை அவர்கள் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். 1952 ஆம் ஆண்டளவில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர வகுப்பு பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டது. 1959 தொடக்கம் 1962வரையான காலப் பகுதியில் "ஆசிரியமணி" திரு. ம.க. சிதம்பரப்பிள்ளை அவர்கள் மீண்டும் அதிபராகக் கடமை ஆற்றியுள்ளார்.

இக்காலப்பகுதியில் சின்னக்கடை, இலிங்கநகர், சாம்பல்தீவுப் பகுதிகளில் வாழ்ந்து வந்த தமிழ் மெதடிஸ்த மக்களுக்கு தமிழ்மொழி மூலமான வழிபாட்டுக்கான ஒரு இடத்தின் தேவை உணரப்பட்டது. அதனை நிறைவு செய்யுமுகமாக பெருந்தெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் தமிழ்மொழி மூலமான பிரார்த்தனைகளும் வழிபாடுகளும் வண.போல் ஏகாம்பரம் போதகர் அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த இறைபணிக்கான உதவிகளும் ஒத்துழைப்பும் அன்றைய அதிபராக இருந்த ஆசிரியமணி அவர்களால் வழங்கப்பட்டன.

காலப்போக்கில் பாடசாலையில் மேற்கொள்ளப்பட்ட தமிழ் வழிபாடுகள் வளர்ச்சிபெற்று பெருந்தெருப் பகுதிக்கான மெதடிஸ்த ஆலயம் ஒன்றின் அவசியம் வலியுறுத்தப்பட்டது. 1962ஆம் ஆண்டளவில் அரசாங்கம் சகல பாடசாலைகளையும் பொறுப்பேற்றுக் கொண்ட சமயம் பெருந்தெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலையின் நிர்வாகம், மெதடிஸ்த திருச்சபையிலிருந்து இலங்கை அரசின் கைகளுக்கு மாறியது. எனினும் மெதடிஸ்த ஆலயத்தின் தேவையை உணர்ந்த அன்றைய அதிபர் "ஆசிரியமணி" ம.க. சிதம்பரப்பிள்ளை அவர்கள் பாடசாலை வளவில் இருந்த வீட்டினை வழிபாட்டுத் தலமாக மாற்றியமைத்து பெருந்தெரு பிரதேசத்தில் மெதடிஸ்த ஆலயம் ஒன்றுக்கு வழி சமைத்தார். வண.எஸ்.ஜே. ஜூலியன் போதகர் அவர்களின் காலத்தில் அத்திவாரமிடப்பட்டு 1972ஆம் ஆண்டளவில் இவ்வாலயம் பூர்த்தியாக்கப்பட்டது. தற்போது இந்த ஆலயம் தி/ பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலய எல்லைக்கு வெளியே இல. 80, இராஜவரோதயம் வீதிப் பகுதியில் குரு மனையோடு கூடியதாக அமைந்துள்ளது. இந்த ஆலயத்தைச் சார்ந்ததாகப் பெருந்தெருவுக்கென தனியான மெதடிஸ்த சபையும் உருவாகியுள்ளது.

படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்த பாடசாலை காலப்போக்கில் வேறு பல வளங்களையும் பெற்றுத் தன்னை உயர்த்திக் கொண்டுள்ளது. 24.07.1969இல் இப்பாடசாலைகக்கு என நூல் நிலையமொன்று திருகோணமலை "அரிமாக்" கழகத்தினரால் கட்டப்பட்டு பாடசாலைக்கென வழங்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது. நூல் நிலையம் இன்று மாணவர்களுக்குரிய பாடநூல்கள், பொது அறிவு நூல்கள், உயர்கல்வி, கற்போருக்குரிய நூல்கள் என்பவற்றைக் கொண்டதாக அமைந்து சிறந்ததொரு சேவையினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கிக் கொண்டிருக்கிறது.

கிறிஸ்தவப் பாடாலையாக ஆரம்பிக்கப்பட்ட பெருந்தெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலை தொடர்ந்து வந்த காலங்களில் பெருமளவில் இந்து சமய மாணவர்களைக் கொண்டதாக மாற்றம் பெற்றது.

மாணவர்களில் பெரும்பான்மையானோர், இந்து சமயத்தைச் சார்ந்தவர்களாகக் காணப்பட்டதன் விளைவாக பெருந்தெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலை அரசின் அங்கீகாரத்துடன் "தி/ பெருந்தெரு விக்நேஸ்வர வித்தியாலயம் எனும் பெயருடன் ஓர் இந்துப் பாடசாலையாக மாற்றப்பட்டது. அனைத்து சமயத்தைச் சேர்ந்த மாணவர்களும் எவ்வித வேறுபாடுமின்றி சிறந்த கல்வியைப் பெற்றுக் கொள்ளும் வகையில் பாடசாலையின் பணிகள் தொடர்ந்தன. பாடசாலையின் மாணவர் தொகை, அதன் சீரான வளர்ச்சி என்பவற்றை கருத்தில் கொண்டு 08.05.1979 தொடக்கம் மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டு "தி/ பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயம்" எனும் தற்போதைய பெயரினைப் பெற்றது.

பாடசாலையின் புதிய இலச்சினையாக கோபுரத்தை உள்ளமைவாகக் கொண்ட யானையின் தலையையும் ஏடுகளையும் தும்பிக்கையில் தீச்சுடரையும் கொண்ட சின்னம் அறிமகப்படுத்தப்பட்டது. இச்சின்னத்தில் யானையின் தலையினுள் அமைந்துள்ள கோயிற் கோபுரம் திருக்கோணேஸ்வரத்தை குறிக்கின்றது. யானைத் தலை விநாயகரைப் பெயரில் கொண்ட விக்நேஸ்வர மகா வித்தியாலயத்தைக் குறித்து நிற்கின்றது. இரண்டும் இணைந்து திருக்கோணமலை விக்நேஸ்வர மகா வித்தியாலயமாக அமைகிறது. யானையின் தும்பிக்கையின் வளைவினுள் உள்ள ஏடுகள் கல்வியையும், தும்பிக்கையின் நுனியிலுள்ள தீபம் கற்பதன் மூலமாக ஏற்படும் ஞானத்தையும் குறித்து நிற்கின்றன.

பாடசாலையின் மகுடவாசகமாக "அன்பும் அறனும் பண்பும் பெறுக" எனும் வாக்கியம் அமைந்துள்ளது. பாடசாலையில் கற்ற கல்வி மூலம் பெற்ற அறிவைக் கொண்டு அன்பும் அறனும் பண்பும் பெறுக என்னும் கருத்து இதன் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரம் வரையில் வகுப்புக்களைக் கொண்ட சிறந்தவொரு சேவையினை ஆற்றி வந்த பாடசாலை 21.07.1981 தொடக்கம் உயர்தர வகுப்புக்களை நடாத்தக் கூடிய அனுமதியைப் பெற்று 1சீ தரப் பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. மாணவர்கள் தொகை அதிகரிப்பிற்கேற்ப வகுப்பறை வசதிகளை வழங்கும் வகையில் புதிய மூன்று மாடிக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு 1999 ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டு அழகுடன் கம்பீரமாகப் பாடசாலை காட்சி தருகின்றது. மாணவர்களுடன் உடனடித் தொடர்பாடல் வசதிக்காக 01.09.1997 அன்று வகுப்பறைகள் தோறும் ஒலி பெருக்கிப் பெட்டிகள் பொருத்தப்பட்டன.

பௌதீக வளங்களில் மட்டுமன்றிக் கல்விச் செயற்பாடுகளில் தி/ பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயம் இன்று ஒரு சிறப்பான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் மாணவன் பாலசிங்கம் செந்தூரன் எட்டுப் பாடங்களிலும் அதிவிசேட சித்திகளைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். இப்பெருமை 1998இல் மாணவன் சு. யோகேஸ்வரராஜாவினால் தொடரப்பட்டுள்ளது. தொடர்ந்து 2001ல் மு. முகுந்தன் 9ACயும் 2002 இல் அ.மு. ஷாபி 9A S பெற்று பெருமை சேர்த்துள்ளனர். இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் பல சிறப்பிடங்களைப் பெற்றுள்ளது. தமிழ், ஆங்கில மொழித் தின விழாக்கள் விளையாட்டுச் செயற்பாடுகள், ஏனைய கலை கலாசார நிகழ்வுகள் போன்றவற்றில் மாணவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்திப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

மாணவர்களிடம் சேவைமனப்பாங்கினை வளர்க்குமுகமாக 'சாரணர் இயக்கமும்' 'இன்ரறக்ட்' கழகமும் மாணவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றன. "18ஆவது திருக்கோணமலை அணி" என்று அழைக்கப்படும் பாடசாலையின் சாரணர் இயக்கம் 1996ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1998இல் "குருளைச் சாரணர்" இயக்கமும் ஆரம்பிக்கப்பட்டு இரண்டும் சிறப்பாக செயற்பட்டு வருகின்றன. 1987ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இன்ரறக்ட் கழகம் பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் பல செயற்றிட்டங்களைத் திறம்பட மேற்கொண்டு வருகின்றது.

பாடசாலையின் வளர்ச்சிக்காகப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பல சேவையினை ஆற்றி வருகின்றது. இடைக்காலத்தில் இயங்காதிருந்த க.பொ.த உயர்தர வகுப்புக்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உதவியினாலேயே மீண்டும் 1992 இல் புத்துயிர் பெற்றன. அத்தோடு 1996 தொடக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த உயர்தர வர்த்தகப் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் பாடசாலைக்கான தனியான நவீன விஞ்ஞான அய்வு கூடமும் செயற்பாட்டறையும் இணைந்த மாடிக் கட்டிடம் உலக வங்கியின் நிதி உதவியுடன் கட்டி முடிக்கப்பட்டு 2000ம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது.

அடுத்து பாடசாலைக்கு என தனியாக நூலக வசதியை ஏற்படுத்தித்தரும் பொருட்டு உலக வங்கியின் நிதி உதவியுடன் ஆரம்பப் பிரிவிலுள்ள இரண்டு வகுப்பறைகள் சகல வசதிகளுடன் நவீன வசதிகளுடன் புனரமைக்கப்பட்டு 2001ம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. வித்தியாலயத்தின் நீண்டகால தேவையாக காணப்பட்ட விசாலமான பிரார்த்தனை மண்டபம் 1ம் கட்டம் பூர்த்தியாக்கப்பட்டு 2008ம் ஆண்டு திறந்துவைக்கப்பட்டது. அத்துடன் அதன் மிகுதி கட்ட வேலைகள் யாவும் விரைவில் தொடங்கப்படவுள்ளதோடு இவ்வருட இறுதிக்குள் மூன்று தட்டுக்களைக் கொண்ட மாடிக் கட்டிட வசதியை வித்தியாலயம் பெற்றுக்கொள்ளவுள்ளது. இதற்கான நிதியுதவி அனைத்தினையம் NECORD திட்டம் வழங்கி உதவியுள்ளது.

2000ம் ஆண்டிலிருந்து இயங்கிவரும் கணினிப்பிரிவு ஆரம்பத்தில் இரண்டு கணினிகளையே பயன்படுத்த முடிந்தது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் 23 கணினிகளை கொண்ட கணினி கற்றல் நிலையம் 27.04.2009 இல் திறந்து வைக்கப்பட்டது. இதன் மூலம் கணினிக் கற்கை வசதி விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

மேலும் மாற்று வலுவுள்ள மாணவர்களின் பிரிவு வித்தியாலயத்தில் 2007.05.7ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் மாற்று வலுகொண்ட (ஆண்) பிள்ளைகள் தமது திறன்களை வெளிப்படுத்தக் கூடியதாக உள்ளது.

அடுத்து 2006 / 2008 காலப்பகுதியின் வித்தியாலயத்தில் பொற்காலம் எனலாம். இக்காலப்பகுதியில் வித்தியாலயத்தின் கற்றல், கற்பித்தல், பௌதீக வளவிருத்தி, முகாமை நடவடிக்கைகள் புது மெருகூட்டப்பட்டு திகழ ஜப்பானின் JICA செயற்றிட்டம் உதவியது. அத்துடன் வித்தியாலயம் முதன்மை இடத்தையும் பிடித்துக்கொண்டது.

இப்பாடசாலையின் நீண்ட கால வரலாற்றில் இதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்த அதிபர்கள் நினைவு கூரப்பட வேண்டியவர்களாவர். "ஆசிரியமணி" திரு.ம.க. சிதம்பரப்பிள்ளை அவர்களின் காலத்தின் பின்னர்

திரு. எஸ். கே. செல்வநயினார்
திரு. எஸ். கனகசபை
திரு. எஸ். மார்க்கண்டு
திரு. சி. நடராஜா
திரு. க. ஜீவரெட்ணம்
திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
திரு. எஸ். திருச்செல்வம்
திரு. என். சந்திரகாந்தன்
திரு. கு. கோணாமலை ஆகியவர்கள் தூண்களாக பாடசாலையைத் தாங்கி நின்றுள்ளார்கள்.

இவர்களைத் தொடர்ந்து 01.01.1997 தொடக்கம் இற்றைவரை திரு. நா. இராஜநாதன் அவர்கள் பாடசாலையின் முன்னேற்றத்திற்காய் அரும்பாடுபட்டு வருகின்றார்.

காலச்சக்கரத்தின் சுழற்சியில் 187 வருடங்களைக் கடந்து வந்திருக்கும் தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயம் இன்று முன்னேற்றப் பாதையில் ஒரு சீரான வேகத்தில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. தொன்மையான வரலாற்றுப் புகழைக் கொண்ட கோணேஸ்வரப் பெருமானின் அருளாட்சி நடைபெறும். திருக்கோணமலையில் நீண்டதொரு கல்வி வரலாற்றைக் கொண்ட பாடசாலையாக விளங்கும் தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயம் 187 வருடங்கள் பதித்து விட்ட சுவடுகளுடன் 2000 ஆண்டில் மேலும் நிலையான சுவடுகளைக் கல்வி வரலாற்றில் பதித்துச் செல்லும் என்பது உறுதியானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்தியாலய ஆசிரிய அணியினர்



இருப்பவர்கள் (இ.வ) :-: திருமதி. அ. செல்வரட்ணம், திருமதி. வ. வசிகரன், திருமதி. சா. சிவஞானசுந்தரம், திருமதி. பா. வி. ஆனந்தராஜா, திருமதி. ச. இராசதுரை, திரு. நா. இராஜநாதன் (அதிபர்), திரு. சீ. மதியழகன் (பிரதி அதிபர்), திருமதி. வ. இராஜேந்திரன், திருமதி. ந. குணசேகரம், செல்வி. ந. சுபத்திராதேவி, திருமதி. ஜெ. சிவசோதி, திருமதி. கி. பாலேந்திரராஜா

நிற்பவர்கள் (இ.வ) :- திரு. நே. சிவநேசன், திருமதி. வ. குகேந்திரன், திருமதி. பா. ஜவ்பர், திருமதி. வி. யோகீஸ்வரன், திருமதி. ம. மு. ஹசன், திருமதி. ஜெ. சுவேந்திரன், திருமதி. ச. அ. தேவதாஸ், திருமதி. யோ. சிவானந்தராஜா, திருமதி. சு. கங்கேஸ்வரன், திருமதி. கி. சந்திரசேகரன், திருமதி. ம. சிவதர்சினி, திருமதி. சா. பார்த்தீபன், திரு. அ. ஹரிகரன்

திரு. சி. ஜனார்த்தனன், திரு. வ. தெய்வேந்திரராசா, திருமதி. தே. கா. கணேசபிள்ளை, செல்வி. பெ. டிலானி, திருமதி. த. பரமேஸ்வரன், திருமதி. சி. சந்திரசேகரம், திருமதி. ஆ. பரதன், திருமதி. ஜெ. உதயசீலன், செல்வி ச. ரதீஸ்வரி, திருமதி. சி. வரதராஜன், திருமதி. ம. சசிகுமார், திருமதி. ம. அன்ரனிராஜா, திரு. ந. இலங்கேஸ்வரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையும் சமூக உறவும்

நடராஜா சந்திரகாந்தன்
மேம்பாட்டுத்திட்டதொழில்நுட்ப ஆலோசகர்
கிழக்கு மாகாணம்.

ஒரு சமூகத்தின் வளர்ச்சி அச் சமூகத்தில் உள்ள பாடசாலையில் தங்கியுள்ளது. அதேபோல் ஒரு பாடசாலையின் வளர்ச்சி அது அமைந்துள்ள சமூகத்தில் தங்கியுள்ளது. எனவே பாடசாலை - சமூக உறவு என்பது சமூகத்தால் பாடசாலையும் பாடசாலையால் சமூகமும் பயன்பெறக்கூடிய தன்மையுடையதாக அமையவேண்டும். அதுவே பாடசாலை - சமூக உறவின் பண்பும் பயனுமாகும்.

கடந்த காலங்களில் பாடசாலைச் சமூகம் என்பது அதிபர் ஆசிரியர்களுடன் பெற்றோரை மட்டுமே கருதியது. இன்று நாம் பாடசாலைச் சமூகம் என்பதனை விரிந்த அடிப்படையில் நோக்க வேண்டியுள்ளது. பாடசாலையின் பங்குதாரர்கள் யார்? என்பதனை அல்லது பாடசாலைக்கு உரித்துடையவர்கள் யார்? என்பதனை நாம் இனம் கண்டு கொள்ளவேண்டும். சமூக உறவு வலுமிக்கதாக உள்ள பாடசாலைகளில் பங்குதாரர்கள் அல்லது உரித்துடையவர்கள் அதிகமானோர் இருப்பதனை நாம் அவதானிக்கலாம்.

பின்வரும் படம் உறவு சிறப்பாக உள்ள பாடசாலையின் பங்குதாரர்களை இனம் காட்டுகின்றது.




ஒவ்வொரு பாடசாலையின் தனித்துவத்திற்கேற்ப உறவின் அடிப்படையில் பாடசாலையின் உரித்துடையவர்களை முன்னுரிமைப்படுத்தி இனம் காணலாம். சமூக உறவு விரிவாகவுள்ள பாடசாலையில் சகல தரப்பினரும் நெருக்கமான முறையில் பாடசாலையுடன் இடைத்தொடர்பு (inlerection) கொள்வார்கள்.

பாடசாலை

சமூக உறவை வளர்ப்பதற்கு சமூகம் எந்தெந்த வகையில் பாடசாலைக்கு உதவலாம் என்பதனை மட்டுமல்லாது பாடசாலை எந்தெந்த வகைகளில் சமூகத்திற்கு உதவலாம் என்பதனையும் இனம்கண்டு செயல்பட வேண்டும். சமூகம் பாடசாலைக்கு எவ்விதம் உதவலாம் என்று சிந்திக்கும் போது பாடசாலைச் செயற்பாடுகளில் சமூகம் பார்வையாளராக இருக்காமல் பங்குதாரர்களாக மாறுவது அவசியமாகும். பங்குதாரர்களாக மாறும் போதும் சமூகம் மனிதவளம் உட்பட சமூகவளங்களை பாடசாலைக்கு வழங்குவது முதன்மை பெறுகின்றது.

கிராமபுறச் சிறிய பாடசாலைகளின் சராசரி வளங்களின் அளவு / பெறுமதி ஒரு மடங்காக அமைந்தபோது நகரப் பகுதியின் பெரும் பாடசாலைகளின் வளங்களின் அளவு / பெறுமதி அறுபது மடங்காக இருப்பதனை சிலபுள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டியுள்ளன. அரசாங்கமானது பாடசாலையின் தரம், மாணவர் தொகைக்கேற்ப ஏறக்குறைய சமமான வளப்பகிர்வினை செய்யும் போது வளம் அதிகரித்த பாடசாலைக்கு சமூகத்தின் வள அளிப்பே பெரும்பங்கு வகிப்பதனை அவதானிக்க முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமளவு வளங்களைப் பாடசாலைக்குப் பெற்றுத் தராத சமூகங்களில் கூட அதிபர் ஆசிரியர்களுக்கு சமூகம் கொடுத்த மானசீகமான ஆதரவு பாடசாலையின் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக மாற்றிவிடுவதனை கல்வியாளர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

பாடசாலை சமூகத்திற்கு என்ன செய்ய முடியும் என்பதனை பின்வரும் வரைபடம் மூலம் விளக்கலாம்.

பாடசாலை சமூகத்திற்கு நான்குவகையான செயற்பாடுகள் மூலமும் உதவலாம்.




1. பாடவிதான செயற்பாடுகள் சமூகத்தின் தனிமனிதத் தேர்ச்சிகளை வளர்த்துவிடுகின்றன.
2. இணைபாடவிதானச் செயற்பாடுகள் சமநிலை ஆளுமையுடைய தனிமனிதர்களைக் கொண்ட சமூகத்தை உருவாக்குகின்றன.
3. நேரம் தவறாமல், தினமும் பாடசாலைக்கு சமூகமளிப்பதையும் செயற்பாடுகளில் ஈடுபடுவதையும் உறுதிப்படுத்தல், வகுப்பறைக்கு ஒழுங்காகச் செல்லல், பாடசாலையை விட்டு ஒழுங்காக வெளியேறல், பொறுப்புடன் நடக்கத்தூண்டுதல் போன்ற நிர்வாகச் செயற்பாடுகள் மாணவர்களின் நடத்தைக் கோலங்களைச் செப்பனிட்டு நல்லதொரு சமுதாயத்தை உருவாக்குகின்றன. இவையே பாடசாலைக் கலாச்சாரத்தை உருவாக்குகின்றன.
4. குறிப்பான நேரடிச் சமூகச் செயற்பாடுகளில் தேவையான பொழுது மாணவர்களின் ஊடாக சமூக விழிப்புணர்வுகளை ஏற்படுத்துதல், உதாரணமாக தொற்று நோய்கள் சமூகத்தில் பரவுவதைத் தடுத்தல், சிக்கனம் உழைப்பின் பெருமை என்பவற்றை எடுத்துக்கூறல்.

பாடசாலை வளங்களை சமூகத் தேவைகளுக்கும் பயன்படுத்தல். உதாரணமாக கட்டிடம் மற்றைய பௌதீக வளங்களை மாணவர்கள் பயன்படுத்தாத போது சமூகத் தேவைகளுக்குப் பயன்படுத்தல். (திறந்த பாடசாலையாக வைத்திருத்தல்) சமூகத்தின் சிரமதான, கலாசார செயற்பாடுகளில் பங்களித்தல் என்பன அடங்குகின்றன.

இவை சமூகத்தின் தேவைக்கும் சூழலுக்கும் ஏற்ப விரிவடைந்து செல்லுகின்றன.

ஒரு பாடசாலை எந்தளவிற்கு சமூகத்திற்கு உதவுகின்றது அல்லது சமூக அங்கீகாரம் பெற்றிருக்கின்றது என்பதனை அளவிடும் காட்டியாக (Indicalion) விளங்குவது அப்பாடசாலைக்கும் சமூகத்தில் இருந்துவரும் சமூக நிகழ்ச்சிகளின் அழைப்பிதழ்களின் எண்ணிக்கையாகும்.

இலங்கையில் பாடசாலைச் சமூக உறவை மேம்படுத்தும் நோக்கத்தில் அதாவது.

(அ) பெற்றோர்கள், மாணவர்கள் அவ்வப்பகுதியைச் சேர்ந்த மக்கள் ஆகியோரின் கல்வி அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பாடசாலையை அபிவிருத்தி செய்தல்.

(ஆ) அவ்வப் பகுதியைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கையில் விரும்பற்பாலானவான சமூக, கலாசார, பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு பாடசாலையை ஒரு ஏதுவாக்கல்.

என்ற நோக்கங்களையும் குறிக்கோள்களையும் எய்தும் பொருட்டு 21.01.1979ம் திகதி 37ம் இலக் கல்வி அமைச்சின் சுற்று - நிருபத்தின் ஏற்பாடுகளின் கீழ் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. பின்பு அவை 30.03.82ம் திகதி 1982/2ம் இல சுற்று நிருபத்தினால் முழுமையாக மாற்றியமைக்கப்பட்டன.

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் செயற்பாடுகள் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டு அச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தன.

(அ) கல்வி முயற்சிகள்

நூலக வசதிகளை ஏற்படுத்தல், கல்வி சம்பந்தமான கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், விரிவுரைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தல், கல்வியில் பின்தங்கிய பிள்ளைகளுக்கு வெளி வகுப்புக்கள் நடாத்துதல் கல்வி சம்பந்தமாக அரசாங்கம் கொண்டுள்ள கொள்ளைகள் பற்றி பெற்றோர்களும், ஏனையோர்களும் கொண்டுள்ள அறிவையும் விளக்கத்தையும் மேம்படுத்த உதவுதலும், இக்கொள்கைகளைச் செயற்படுத்தலில் அவர்களின் ஒத்துழைப்பைப் பெறுதலும்,

(ஆ) கலாசார சமூக முயற்சிகள்

நாட்டு பாடல்கள், பழக்கவழக்கங்கள், சம்பிரதாய முறைகள், இடப்பெயர்கள், அவ்விடத்துக்குரிய மருந்து வகைகள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பற்றிய தகவல் அப்பகுதி இயற்கை மூலவளங்கள் ஆகியவற்றைக் கற்பதற்கான வட்டங்களை ஒழுங்கு செய்தல், நாடகங்கள், கூத்துக்கள் ஆகிய நுண்கலைகளை மேம்படுத்தும் ஒழுங்குகளைச் செய்தல், சிரமதானம் உடல்நல, சுகாதார முயற்சிகளை நடாத்துதல்.

(இ) பாடசாலைத் தேவைகள்

கற்பித்தல் உதவிகள், தளபாடங்களை வழங்குதல், பாடசாலைக் கட்டிடங்கள் கட்டுதல் பழுது பார்த்தல், ஆசிரியர்களுக்கும் வேலையாட்களுக்கும் படிகள் கொடுப்பனவு செய்தல்.

(ஈ) அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோரின் பொது நலனுக்கான தொழில் முறை அபிவிருத்தி

அதிபர் ஆசிரியர்கள் ஆகியோரின் தொழில்முறை அபிவிருத்திக்கான நிதி உதவி, கல்வி அல்லது போட்டிகளுக்காக சுற்றுலா செய்யும் குழுக்களுக்கான நிதியுதவி, பாடசாலை விளையாட்டுப் போட்டி ஏனைய பாடசாலை நிகழ்ச்சிகளுக்கான நிதி உதவி அளித்தல் என்பன அமைந்தன.

இவ்விதம் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டாலும் மிக மிக அரிதாகவே பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் உதவிகள் செய்யப்பட்டன.

பாடசாலை நிர்வாகத்துடன் முரண்பட்ட பா. அ. சங்க அங்கத்தவர்களும் காணப்பட்டனர். இதற்கு ஏதுவாக 1982/2ம் இலக்க பாடசாலை அபிவிருத்திச் சங்க சுற்றறிக்கையின் 17வது சரத்து பாடசாலை 'பாடசாலை அதிபருக்கு உரிமையளித்த உள்ளக நிர்வாகத் தொழிற்பாடுகளில் பாடசாலை அபிவிருத்தி சங்கம் தலையிடப்படாது' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2005ம் ஆண்டில் சமூக உறவு பற்றிய அரச கொள்கையில் பெரும் மாற்றம் ஏற்படுவதை நாம் காணலாம். 2005/24ம் இலக்க பாடசாலை மேம்பாட்டு முன்னோடித் திட்டம் பற்றிய சுற்றறிக்கை. (இது பின்னர்2008/35ம் இலக்க சுற்றறிக்கையால் முழுமையாகப் பிரதியீடு செய்யப்பட்டுள்ளது) பாடசாலை நிர்வாகத்திற்கு / அபிவிருத்திக்கு தேவையான சகல தீர்மானங்களை எடுக்கும் பொறுப்பும் திட்டமிடும் பொறுப்பும் சமூகத்தின் கையில் ஒப்படைக்கப்படுவதை வலியுறுத்துகின்றது.

2008 / 35 ம் இலக்க பாடசாலை மேம்பாட்டுத் திட்டம் பற்றிய சுற்றறிக்கையின் படி 2006ம் ஆண்டிலிருந்து இலங்கையின் ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு வலயம் தெரிந்தெடுக்கப்பட்டு அவ்வலயத்தின் சகல பாடசாலைகளிலும் பாடசாலை மேம்பாட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதன்படி பாடசாலை அபிவிருத்திக்குழு (SDC) அமைக்கப்பட்டு அக் குழுவே சகல தீர்மானங்களையும் எடுக்கும். அச்சுற்றறிக்கையின் படியான இரண்டாவது குழுவாக அமைவது பாடசாலை முகாமைத்துவ அணியாகும். (SMT) இவ்வணி அதிபர் ஆசிரியர்களை மட்டும் கொண்டு பாடசாலை அபிவிருத்திக் குழு எடுக்கும் சகல தீர்மானங்களையும் நடைமுறைப்படுத்தும் அணியாக அமைகிறது.

எனவே 2008/35 இலக்க சுற்றறிக்கையின் படியான பாடசாலை மேம்பாட்டுத் திட்டம் சமூகத்தையும் பாடசாலையையும் நெருக்கமாக இணைத்து பாடசாலை மட்ட முகாமைத்துவத்தைச் செய்வதற்கான வழி கோரியுள்ளது. சமூகமே பாடசாலையை அதிபரின் தலைமையில் இயக்குவதற்கான விதிமுறைகளை அமைத்துள்ளன.

பாடசாலை சமூக உறவில் இந்த மாற்றம் ஒரு புரட்சிகரமானது. பாடசாலை சமூகத்தை உள்ளீர்த்துள்ளது என்றோ, அல்லது சமூகம் பாடசாலையைப் பொறுப்பேற்கின்றது என்றோ இதனைக் கூறலாம். அதாவது, விளைவென பாடசாலையின் அபிவிருத்தி என்பது சமூக ஈடுபாட்டின் மாற்றமுறுவதை உறுதிப்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக மேற்பார்வை

திரு. க. அரியநாயகம்
கோட்டக்கல்வி அதிகாரி
திருகோணமலை.

குறிப்பிட்ட உற்பத்தியின் அல்லது சேவையின் வெளியீட்டின் அளவும், தரமும் உயர்வாக இருப்பதற்கு அப்பொருளுக்குரிய மூலப் பொருளின் தரம், அதனை உருவாக்க பயன்படும் மனித வளம் ஆகியவையும் கையாளும் நுட்பங்களும் உயர்வாக இருக்க வேண்டும். அதுமட்டும் போதாது அதனை ஒரு ஒழுங்கில் மேற்பார்வை (Supervision) செய்யவும் வேண்டும்.

வெளியீட்டின் தரத்தினையும், அளவினையும் மேம்படுத்துவதில் மேற்பார்வை இன்றி அமையாதது. இந்த மேற்பார்வையை இருவகையாக நோக்கலாம்.

I. உள்ளக மேற்பார்வை
II. வெளிவாரி மேற்பார்வை

இவை இரண்டும் மிக நீண்டகாலமாக கல்விப் புலத்தில் கையாளப்பட்டே வருகின்றது. இன்று இவை உள்வாரி மதிப்பீடாகவும், வெளிவாரி மதிப்பீடாகவும் பரிணமித்துள்ளன.

பாடசாலையின் முக்கியமான உள்ளீடுகளாக மாணவர்களும், ஆசிரியர்களும் பல்வேறு வளங்களும் கருதப்படுகின்றன.

அதன் வெளியீடாக சமூகத்தால் உயர்ந்த பரீட்சைப் பெறு பேறுகளும், நல்ல பிரஜைகளும் கருதப்படுகின்றனர். அறிவு, திறன், மனப்பாங்கு, ஆளுமைப் பண்புள்ள மாணவ சமூகத்தை உருவாக்குவதே அனைத்து கல்விச் சமூகத்தின் நோக்கம் ஆகும்.

உலக சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய, எதிர்கால வேலை உலகுக்குப் பொருத்தமான வன்செயல்களற்ற கற்றல் சமூகத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது எம் அனைவரினதும் கடமையாகும்.

ஒரு தொழிலை நாம் செய்யும் போது எம்மை ஒருவர் அவதானிக்கின்றார் என்பதை நாம் அறியும் போது மிகவும் அவதானமாக செயல்படுவது மனித இயல்பாகும். அந்தவகையில் கல்விப் புலத்தில் நீண்டகாலமாக மேற்பார்வை பல்வேறு வடிவங்களில் நடைபெற்றுக் கொண்டே வந்துள்ளன.

ஆரம்ப காலங்களில் பல்வேறு கல்வி அமைப்பு முறைகள் எமது நாட்டிலும் காணப்பட்டன. இலங்கையில் இலவசக் கல்வியை அரசு அறிமுகப்படுத்திய காலத்தில் இருந்து இன்றுவரை கல்விச் செயற்பாடுகளும், இணைப்பாடவிதான செயற்பாடுகளும் காலத்தின் தேவைக்கேற்ப மாற்றமடைந்து கொண்டே வந்திருக்கின்றன.

ஆரம்ப காலத்தில் "ஆசிரியத் தொழிலை" மேற்கொண்டவர்கள் அதில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டனர். அன்றைய நிலையில் அவர்களது எண்ணம் "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்பதை உறுதியாக நம்பினர். மாணவர்களும் குருவை தெய்வமாக மதித்தனர். அன்றைய காலத்தில் கற்றவர்களின் தொகையும் குறைவாகவே இருந்திருக்கின்றது. ஒரு கிராமத்தில் ஒரு சில ஆசிரியர்களே இருந்து அர்ப்பணிப்புடன் சேவையாற்றினர்.

காலப்போக்கில் இலவசக் கல்வி முறை தொடர்ந்தாலும் ஒரு குறிப்பிட்ட தொகையினை ஆசிரியர்களால் "கல்வி ஒரு வியாபாரமாகக்" கொள்ளப்பட்டதால் குருவுக்கு இருந்த மதிப்பும், மரியாதையும் குறைவடையத் தொடங்கியது.

இந்த நிலையில் பாடசாலைக் கல்வியின் பெறுமதி குறைவடையத் தொடங்கின. இதனால் பாடசாலைச் செயற்பாடுகளை வலிமையுடையதாக்க வேண்டிய கடப்பாடு பல்வேறு மட்டங்களிலும் ஆராயப்பட்டன. உள்ளக மேற்பார்வையினை வலிமையுள்ளதாக மாற்றியமைப்பதன் மூலம் ஒரு பாடசாலை தன்னை சமூகத்தில் வலிமையுள்ள, நன்மதிப்புள்ள ஒரு சமூக நிறுவனமாக நிலை நிறுத்திக் கொள்ள முடியும் என்பதை உணர்ந்தன. இந்த வகையில் உள்ளக மேற்பார்வை மிக முக்கியத்துவம் பெறுகிறது.

அண்மைக் காலமாக 7 பண்புச் சுட்டிகளைக் கொண்ட வெளிவாரி மதிப்பீடு செய்யப்படுவது போல ஒரு பாடசாலையின் முழுமையான செயற்பாடுகளையும் பண்புச் சுட்டிகளின் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் பாடசாலை நிர்வாகம் 7 ஆசிரியர்களின் தலைமையில் பாடசாலையை உள்ளக மதிப்பீடு செய்தல் வேண்டும். அத்துடன் வருட இறுதியில் ஒவ்வொரு பண்புச் சுட்டியினதும் முன்னேற்றம் பற்றி அராய்ந்து நலிவுகளை மேம்படுத்திக் கொள்ள நடடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பாடசாலையில் அதிபர், பிரதி உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்களால் மேற்கொள்ளப்படும் உள்ளக மேற்பார்வையானது திட்டமிட்ட முறையில் நேர சூசியின் அடிப்படையில் ஒழுங்காக மேற்கொள்ளப்படல் வேண்டும். இது பாடசாலையின் வெளியீட்டினை உயர்த்த உதவும்.

ஆசிரியர்கள் தம்மைத் தயார்படுத்திக் கொள்வதற்கு அவர்களுக்கு முன்னறிவித்தலின் அடிப்படையில் உள்ளக மேற்பார்வை இடம் பெறுமாயின் அது பயனுறுதியுள்ளதாக அமையும்.

பொதுவாக வகுப்பறை மதிப்பீடுகள் பின்வரும் மாதிரிப்படிவத்தின் அடிபபடையில் மேற்கொள்ளப்படும். இது ஆரம்பப் பிரிவு, இடைநிலைப் பிரிவு (6-11) க.பொ.த. உயர்தரம் என மூன்று பகுதிகளாக வகுக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்படும். இந்த மாதிரிப் படிவம் தரம் 6-11 வரையிலான வகுப்புக்குரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக மதிப்பீட்டு மாதிரிப் படிவம் (6–11வகுப்பு மதிப்பீடு)

பிரமாணப் புள்ளிகள் வழங்கப்படும் போது ஆசிரியர் முன் ஆயத்தம். பாடத்தை முன்வைத்தல் மதிப்பீடு செய்தல் ஆசிரியர் ஆளுமை ஆகிய பகுதிகளுக்கான அம்சங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

புள்ளி அளவுத்திட்டம்

| | | |
|---|---|---|
| மிகவும் சிறந்தது | 04 புள்ளிகள் | 100-75 |
| நன்று | 03 புள்ளி | 74-50 |
| அபிவிருத்தி செய்ய வேண்டும் | 02 புள்ளி | 49-250 |
| மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டும் | 1 புள்ளி 24க்கு குறைவு | |

பாடசாலை :-
வகுப்பு :-
ஆசிரியர் பெயர் :-

விடயம் :-
திகதி :-
பாடவேளை:-

பாடமுன் ஆயத்தம்

| சுட்டிகள் | 5 | 4 | 3 | 2 | 1 |
|---|---|---|---|---|---|
| 01. உரிய நேரத்திற்கு வகுப்புக்கு சமூகமளிக்கிறார் | | | | | |
| 02. வருடாந்த பாடத்திட்டம் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது | | | | | |
| 03. பாட ஆயத்தம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது | | | | | |
| 04. முன்னைய (அறிவைப்) பாடம் பற்றிய முன் ஆயத்தம் பற்றிய குறிப்புக்கள் உண்டு | | | | | |

பாடத்தை முன்வைத்தல்

| சுட்டிகள் | 4 | 3 | 2 | 1 |
|---|---|---|---|---|
| 01. ஆக்கத்திறனுடன் பாடத்தினுள் பிரவேசித்தல் | | | | |
| 02. கற்பித்தல் முறையின் வெற்றி | | | | |
| 03. பாடத்திற்கேற்ப கற்பித்தல் உபகரணங்கள் துணைச் சாதனங்களைப் பயன்படுத்தல் | | | | |
| 04. சகல மாணவர்களையும் பாடத்துடன் தொடர்புபடுத்தல் | | | | |
| 05. மெல்லகற்கும் மாணவர்களை இனம் கண்டு அவர்கள் மீது கூடிய கவனம் செலுத்தல் | | | | |
| 06. சிறந்த ஆசிரியர் மாணவர் தொடர்பு நிகழ்கிறது | | | | |
| 07. மாணவர்களின் செயல்பாட்டுடன் கூடிய பங்களிப்பு | | | | |
| 08. பாடத்தின் எண்ணக்கரு அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படும் வகையில் கற்றல் | | | | |
| 09. ஆக்கத்திறன்களுக்கு சந்தர்ப்பமளித்தல் | | | | |
| 10. கற்றல் அனுபவங்களை வாழ்க்கையுடன் தொடர்பு படுத்தல் | | | | |

மதிப்பீடு

| சுட்டிகள் | 4 | 3 | 2 | 1 |
|---|---|---|---|---|
| 01. பயிற்சிப்புத்தகம் ஒழுங்காக அவதானிக்கப்பட்டுள்ளன. | | | | |
| 02. பயிற்சிப் புத்தகங்கள் தவறுகள் பிரிவுகள் திருத்தப்பட்டுள்ளன. | | | | |
| 03. எழுத்துப் பிழைகள் திருத்தப்பட்டுள்ளன. | | | | |
| 04. முன்னறிவிப்பு சோதனை செய்யப்பட்டுள்ளது. | | | | |
| 05. சரியான கணிப்பீட்டு உபகரணங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. | | | | |
| 06. மதிப்பீட்டு உபகரணங்கள் சரியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. | | | | |
| 07. மெல்லக் கற்கும் மாணவர்கள் இனம்காணப்பட்டு அவதானிக்கப்பட்டுள்ளனர். | | | | |
| 08. மீத்திறன் கொண்ட மாணவர்கள் இனங்காணப்பட்டு அவர்கள் மீது விஷேட கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. | | | | |

.............................
மதிப்பீட்டாளர்

..........................................................
மதிப்பீடு செய்யப்படுபவரின் ஒப்பம்

பெயர் :
பதவி :
திகதி :

பெயர் :

பெறக் கூடிய மொத்தப்புள்ளி = $\frac{XX}{88}$

பெற்றுக்கொண்ட புள்ளி =

∴ ஆசிரியர் பெற்ற புள்ளியின் நூற்று வீதம் .......... x 100
88



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) மதிப்பீட்டின் போது இனங்காணப்பட்ட நல்ல விடயங்கள்

I.........................................................................................................................................

II........................................................................................................................................

III.......................................................................................................................................

IV.......................................................................................................................................

V........................................................................................................................................

2) இன்னும் மேம்படுத்தப்பட வேண்டிய விடயங்கள்

I.........................................................................................................................................

II........................................................................................................................................

III.......................................................................................................................................

IV.......................................................................................................................................

V........................................................................................................................................

3) மதிப்பீட்டின் பின்னர் ஆசிரியருக்கு வழங்கப்பட்ட ஆலோசனைகள்

I. .......................................................................................................................................

II........................................................................................................................................

III.......................................................................................................................................

IV.......................................................................................................................................

V........................................................................................................................................

குறிப்பு

குறித்த ஆசிரியரை அடுத்த தடவை மதிப்பீடு செய்யும் போது இப்படிவத்தினையும் கொண்டு செல்ல வேண்டும். நாம் கூறிய விடயங்களை ஏற்று இம்முறை செய்யப்பட்டுள்ளாரா என்பதை பரிசீலிக்க முன்னைய மதிப்பீட்டுப் படிவம் உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறந்த உள்ளக மேற்பார்வை நியமங்கள்

* உள்ளக மேற்பார்வை கிரமமான முறையிலும் திட்டமிட்ட முறையிலும் ஒழுங்காக மேற்கொள்ளப்பட வேண்டும்.

* மேற்பார்வையாளர் பாடத் துறையில் சிரேஷ்ட ஆசிரியராகவும், போதியளவு அனுபவமானவராகவும், பரந்த அறிவுடையவராகவும். பாடத்துறை சார்ந்த நிபுணத்துவம் வாய்ந்தவராகவும், நல்ல வளவாளராகவும் இருக்க வேண்டும்.

* மேற்பார்வை செய்பவரை மேற்பார்வைக்கு உட்படுபவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய சகல தகுதிகளும் இருப்பது சாலச்சிறந்தது.

* நிறுவனத்தின் இலக்கை (Vision) அடையக்கூடிய முறையில் உள்ளக மேற்பார்வையாளர்கள் செயற்பட வேண்டும்.

* உள்ளக மேற்பார்வை தொடர்பான முன் ஆயத்தச் செயற்பாட்டுடன் மேற்பார்வையாளர் செல்ல வேண்டும். (உள்ளக மேற்பார்வைக்கு உரிய படிவங்கள்)

* மேற்பார்வை தொடர்பான தகவல்களை அறிக்கைப்படுத்தப்படல் வேண்டும். (நல்ல விடயங்கள், மேம்படுத்தப்படவேண்டியவை, ஆலோசனை)

* அடுத்த சுற்று மேற்பார்வையின் போது முன்னைய மேற்பார்வை பற்றிய சுருக்கக் குறிப்புடன் மேற்பார்வையாளர் செல்வது ஆசிரியரை வழிப்படுத்த இலகுவாக இருக்கும்.

## பண்புதரச் சுட்டிகளின் அடிப்படையில் புள்ளிகளைக் கணித்தல்

| நிலைமை | புள்ளிகள் |
|---|---|
| சிறப்பு | 5 |
| மிக நன்று | 4 |
| நன்று | 3 |
| சாதாரணம் | 2 |
| விருத்திபெற வேண்டும் | 1 |

பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை உயிர்த்துடிப்புள்ளதாகவும், வலிமையுள்ளதாகவும் வைத்திருப்பதற்கு உள்ளக மேற்பார்வை இன்றியமையாததாகும். கிரமமான முறையில் உள்ளக மேற்பார்வை இடம்பெற்று, குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படுமாயின் பாடசாலையின் வெளியீடானது தரமானதாகவும், (Quality & Quantity) சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் காணப்படும்.

இதனால் பாடசாலையின் நன்மதிப்பு உயர்வடையும். பாடசாலையில் மாணவர்களின் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்துச் செல்லும். அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களின் சமூக அந்தஸ்தும் உயர்வாகக் காணப்படுவதுடன் பொதுப் பரீட்சைகளிலும் அடைவு மட்டம் படிப்படியாக உயர்வடைந்து செல்லும்.

உள்ளக மேற்பார்வை ஒரு பாடசாலையில் பின்வருவோரால் மேற்கொள்ளப்படும்.

| | மேற்பார்வை | மேற்பார்வை செய்யப்படுபவர் |
|---|---|---|
| 1 | அதிபர் / பிரதி அதிபர் | முழு ஆசிரியர்களும் |
| 2. | பகுதித் தலைவர்கள் | தமது பகுதியிலுள்ள ஆசிரியர்கள் |
| 3. | தர இணைப்பாளர்கள் | சமாந்தர வகுப்பு ஆசிரியர்கள் |
| 4. | பாட இணைப்பாளர்கள் | பாட ஆசிரியர்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளக மேற்பார்வையின் போது கவனிக்க வேண்டிய விடயங்கள்

பண்புச் சுட்டிகளை அடிப்படையாகக் கொண்ட உள்ளக மேற்பார்வை

1. வகுப்பறை முகாமைத்தும்
2. பௌதிக, மனிதவள முகாமைத்துவம்
3. முறையான பாடத்திட்ட முகாமைத்துவம்
4. இணைப்பாடவிதான செயற்பாடுகள்
5. மாணவர் அடைவு மட்டம்
6. மாணவர் நலனோம்பல்
7. மாணவர் - ஆசிரியர் செயற்பாடுகள்
8. ஒழுங்கு முறையான பதிவேடுகளும் சான்றுகளும்

# காலத்தால் அழியாதது கல்வி

தர்மலிங்கம் சேந்தன்
10A

காலம் பார்த்த வயலில்
விதைத்த விதை பின்பு
பச்சைப் பசுமையான இயற்கையை
தோற்றுவிப்பது போல்

இங்கிதம் பார்த்து சிறுபிள்ளை
மனதில் விதைத்த கல்வி
மனதை எத்தனை கூறுபோட்டாலும்...... கல்வி
காலத்தால் அழியாதது

நிலத்தில் பற்றற்ற நிலையில் வேர் கொண்ட மரம்
மழை நீரால் அடித்துச் செல்வது போல்
மனதில் விருப்பமின்றி கற்கின்ற கல்வி
மனதில் நின்று நீங்கிவிடும்

உளி கொண்டு செதுக்கிய சிற்பம்
நிலைத்து நிற்பதுபோல்
எழுத்தாணி கொண்டு எழுதிக்கற்கும் கல்வி
காலத்தால் அழியாதது.



கற்க கசடறக் கல்வி தன்னை
இராப்பகலாக அயராது கற்றிடுவோம்
நிறைவான மனதுடன் நீ பயிலும் ஏட்டுக்கல்வி
காலத்தால் அழியாதது



கடும் காற்றிலும் பறக்காது
கொடும் மழையிலும் கரையாது
நெடும் தீயிலும் எரியாது நீ கற்ற கல்வி
காலத்தால் அழியாதது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 மாணவர்கள் புலமைப்பரீட்சையில் எதிர்நோக்கும் சவால்களும் அவற்றிற்கான தீர்வுகளும் ஓர் கண்ணோட்டம்...

திரு. அ. ஹரிகரன்
ஆசிரியர் (ஆரம்பக்கல்வி)

கல்வி என்பது கண்களைப் போன்றது. இத்தகைய கல்வி எத்தனை தலைமுறைக்கும், கூடவே, வந்து துணை புரிவதாக வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

"கேடு இல் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடு அல்ல மற்றையவை.

எனவும்குறிப்பிடுகின்றார். இத்தகைய சீரிய கல்வியின் சிறப்புக்களை உரிய வகையில் அடையச் செய்ய இன்றைய உலகம் பல்லாயிரக்கணக்கான திட்டங்களையும், பரீட்சை மையங்களையும் நடைமுறைப்படுத்திய போதும் அவை முழுமையான வெற்றியை இதுவரை ஈட்டித்தரவில்லை என்றே கூறலாம். இதில் கல்விப் புலத்துடன் தொடர்புபடுவோர், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் முழுமையான ஒத்துழைப்பும், ஈடுபாடு கொள்ளும் இடத்தில் மாத்திரமே இவை வெற்றியைத் தரமுடியும்.

தரம் 5 மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் சிறுவர்கள், போட்டி பொறாமையற்றவர்கள், ஏதோ தம்மிடம் என்ன உண்டு, இல்லை என்பதைத் தெரியாதவர்கள். இங்கு ஆசிரியரின் பங்கே ஆழமாக மதிக்கப்பட வேண்டும். இதற்காக ஆசிரியர் மேலதிகமான நேரம் கற்பிக்கும் நடைமுறையில் இருக்கிறதே தவிர, மாணவர்கள் மேலதிக அடைவுகளைக் கருத்தில் கொள்வதில்லை. இதற்கான கற்பித்தல் முறைகள் பின்பற்றுவதும் இல்லை. ஒரு சில பாடசாலைகள் தம்மிடம் உள்ள ஆளனிமுறைக்கேற்ப கற்பித்தலை மேற் கொள்ளுகின்றனர். இவ்வாறு செய்பவர்கள் வெற்றி பெறுவதும் உண்மையே.

தரம் 5 மாணவர்களுக்கு பயிற்சி அவசியம்தான். பரீட்சைகள் 45 நிமிடம், 1மணி 15 நிமிடம் எனப் பார்த்தால் 2 மணி நேரம் மாணவர்களுக்கு தாராளமாக போதும், ஒவ்வொரு பரீட்சையின் பின்னும், ஆசிரியர்கள் அப்பரீட்சை வினாத்தாள்களுக்கு மாணவர்கள் அளித்த விடைகளைப் பகுப்பாய்வு செய்து, எந்த வினாவுக்கு அதிகமான மாணவர்கள் விடையளிக்கவில்லை என ஆய்வு செய்து அதனை எவ்வாறு கற்பிக்க வேண்டும், வேறு கணித்தலுடன் தொடர்பாக பிரச்சனைகள் இருந்தால், இடைநிலை. உயர்தரபிரிவு ஆசிரியரை நாடினால் அதற்குரிய சந்தேகங்கள், பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியும்.

ஆசிரியர்கள் சரியாக திட்டமிட்டு மாணவரை முழுமையாக இயக்கினால்,இரண்டு மாதத்தில் பாடநூல்கள் அனைத்தையும் கற்பித்து பயிற்சிகளையும் செய்துமுடிக்க முடியும். இரண்டு மாதத்தில் ஒவ்வொரு அலகில் ஆகக் குறைந்தது மூன்று அலகுப்பரீட்சைகள் வைத்து அலகுரீதியான தேர்ச்சிகளை அடைய வழிகாட்டும். இதன் பின்னர் முழுமையான வினாத்தாள்களை அளித்து விடை எழுத பயிற்றுவித்து, அதில் மாணவர்கள் மீத்திறன், நடுத்தரம், அடைவு மட்டம் குறைவாக உள்ளோரை தனியாக வகைப்படுத்தி அவர்களுக்கு ஏற்றவகையில் கற்றல், கற்பித்தல் சாதனங்களையும், திட்டமிட்ட செயற்பாடுகளையும், ஒழுங்கமைத்துக் கொள்ளுதல் வேண்டும். அப்போது தான் இதன் வெற்றி முழுமைப்படுத்தப்பட்டதாக இருக்கும்.

இங்கு ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் சிறந்த ஆக்கத்திறன் மிக்க ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பகுதித்தலைவர்களது வழிகாட்டலும், ஒத்துழைப்பும், நிர்வாக ஆலோசனைகள், மாணவர்களது ஆதரவு இவை அனைத்தும் ஆசிரியரை ஊக்கப்படுத்துவதாகவும், ஒத்துழைப்பு வழங்கி ஊக்குவிப்பதாகவும் அமைய வேண்டும்.

இன்று மாணவர்கள் தரம் 5ல் அடைய வேண்டிய தேர்ச்சிகளை புறம் தள்ளிவிட்டு ஆவணிக்குப் பின்னர் அடையாளப்படுத்தும், அறிக்கையாகவே அவை அமைந்துள்ளன. இது எந்த வகையில் பொருத்தமானது? அவையவை அந்தந்த காலப்பகுதியில் செய்யப்படவேண்டும். பொதுவாக வகுப்பறையில் மாணவர்கள் அதிகரித்து விட்டால் 40 மாணவர்களுக்கு எப்படிக் கற்பிப்பது என்பதை பெரிதுபடுத்தப்படும். அங்கு 40இல் எத்தனை சித்தியடையும் என்று கேட்டால் 8-10 என்பது பொதுவான ஆசிரியர் கருத்து. சில சமயம் இந்த தொகை 15 வரை செல்லாம். இதைவிட குறையுமே தவிரக் கூடாது. என்பது பல ஆசிரியர்களது அபிப்பிராயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் நிரந்தரமான கெட்டித்தனம் உள்ள 10 மாணவர்கள் இருப்பார்கள். அவர்களை ஆசிரியர்களின் தனி கவனம் தேவையில்லை. அவர்களுக்கு மேலதிகமாக கற்க பயிற்சிகளை வழங்கி விட்டு, உயர்த்த உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு உங்கள் கவனத்தை செலுத்தினால் பெறுபேறுகள் உன்னதமாக அமைந்துவிடும். இக்கருத்து எல்லா பாடசாலைச் சூழலுக்கும் பொருந்தாது. நூறு புள்ளிகள் எடுக்க வைக்கவே கஸ்ரப்பட வேண்டிய சூழ்நிலை உள்ள பாடசாலைகளும் உள்ளன. எப்படி இருந்தாலும் இலக்கை அடிப்படையாக வைத்து கற்பிக்க வேண்டும்.

வாசித்து கிரகிக்க தெரிந்த மாணவர்கள் அனைவரையும் புலமைப் பரீட்சையில் சித்தியடைய வழிப்படுத்தலாம். இதற்காக சிறிய வயதில் இருந்தே நிறைய கதைப்புத்தகங்களை கொடுத்து வாசிக்கச் செய்து முடிந்ததும், வாசித்தவர்களை மீண்டும் கேட்க செய்வதன் மூலம் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை வீட்டில் இருந்தவாறே பரீட்சைக்கு தயார்படுத்தலாம். இது பெரிய சாதனையாக அமையும்.

மாணவர்களைப் பொறுத்தவரையில் பெற்றோர், ஆசிரியர், சகபாடிகள், அனைவரினதும் அன்பையும் ஆதரவையும் எதிர்பார்க்கும் வயது. ஆனால் நடைமுறையில் இவர்களை ஏச்சுக்கள், அடிகள் மூலம் அடக்கக்கூடிய வயது என்பதால் எல்லோரும் அந்த வன்முறைகளையே பிரயோகிப்பது யதார்த்தமாகும். இவர்கள் புதுயுகம் படைக்க அன்பே அவசியமானது. அன்புடன் கூடிய அறிவைத்தேட வழிப்படுத்த வேண்டும். செல்லும் சூழலை புதிது புதிதாக அவதானிக்க சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.

மாணவர்களுக்கு பாடசாலை நேரத்திற்கு மேலதிகமாக அதே ஆசிரியர் கற்பிப்பது பொருத்தமற்ற செயலாகும். மேலதிகமாக கற்பிப்பதாயின் விஞ்ஞானம், கணிதம், தமிழ், ஆங்கிலம், சிங்களம், போன்ற பாடங்களை இடைநிலைப்பிரிவில் கற்பிக்கும் ஆசிரியர்கள் கற்பித்து ஊக்கப்படுத்தலாம். காலை 7 மணிக்கு வந்த மாணவர்கள் மாலை 4 மணி வரை இருப்பது கிரகிப்பதும் குறைவடையும் என்றே கூறலாம்.

பாடசாலையில் வகுப்பு முடிந்ததும், பிள்ளைகள் வீடு சென்றவுடன் மீண்டும் மேலதிக வகுப்புகளுக்கு அனுப்பப்படுகின்றனர். இது மாணவர்களை சித்திரவதை செய்வதற்குச் சமமாகும். சிலர் அதிகாலை 6 மணிக்கே வகுப்புகளுக்கு அனுப்பி அவர்களது உளநிலைகளைப் புரிந்து கொள்ளாது தங்களது கடமைகளைச் செய்ய முற்படுகின்றனர்.

உயர்ந்த புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் மாணவர்களை அவர்களுக்கு கிடைத்த வினாக்களைத் தொகுத்து அவற்றின் பொதுத்தன்மையை இனங்காண வைத்து வரைபு, விலைப்பட்டியல், நேரம், நிறை சம்பந்தமான கணக்குகளை மாணவர்களே தொகுத்து எழுத வைத்து அவர்களையே பிரச்சினையை விடுவித்து விடைகாண வழிகாட்ட வேண்டும். இது மீத்திறன் மாணவர் செயற்பாடாகும். இதனை ஆசிரியர் பின் ஏனைய மாணவர்களுக்கு அவற்றைப் பயன்படுத்துவதோடு தனது வேலைப் பழுவையும் குறைத்துக்கொள்ள முடியும். சுற்றாடல் பாடத்தைப் பொறுத்தவரையில் எவ்வாறு பாடத்திட்டங்கள் கற்பிக்கப்பட்டாலும் மாணவருக்கு பல்வேறு சூழலைக்காட்டி அவற்றில் அவதானிக்கக் கூடிய பல்வேறு அம்சங்களை கூர்ந்து நோக்கக் கூடிய அம்சங்களை நுணுகிப்பார்க்க பழக்க வேண்டும். இந்தச் சந்தர்ப்பம் பெற்றோருக்கு அதிகமாக இருக்கும். அழைத்துச் செல்லும் சூழலை நுணுகிப் பார்க்கவும். விளக்கம் கொடுக்கவும் வேண்டும். பெற்றோர்கள் அவதானிப்பின் ஊடாக ஏற்படும் சந்தேகங்களை உடனுக்குடன் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

மாணவர்களது உடல்உள ஆரோக்கியம் போசனை மட்டங்களை உயர்வாகப் பேணவேண்டும். ஓய்வு நேரங்களை ஒதுக்கி உடல் இயக்க நிலைக்கும் சீரான இரத்த ஓட்டங்களுக்கும் பயிற்சியளிக்க வேண்டும். மாணவர்கள் மகிழ்வாக கற்க வழிசமைக்க வேண்டும்.

மாணவர்கள் சுயமாக வாசிக்கவும், கிரகிக்கவும், சிந்திக்கவும், செயற்படவும் பழக்க வேண்டும். இதுவே உண்மையான கற்றலின் அடையாளம் ஆகும். இவற்றைவிட கற்பித்தல் முறைகளுடன் மாற்றி மாற்றிக் கற்பித்தல் வேண்டும். ஒரே பாணியில் கற்பிப்பது அசதியைத் தரும். மாணவர்கள் விருப்பம் அறிந்தே கற்பிக்கப்படவேண்டும்.

எவ்வளவு முயற்சிகளை ஆசிரியரும் பெற்றோரும் எடுத்த போதும் மாணவர்கள் இவர்களுடன் முழுமையாக ஒத்துழைத்தால் மாத்திரமே உயர்ந்த வெற்றியையும், சுமையில்லாத கற்றலும், ஆற்றல் வெளிப்பாடுகளும் வெளிப்படுத்தப்படும் என்பதே யதார்த்தமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்பப் பாடசாலைப் பருவத்தில் குழந்தைகளின் மனவெழுச்சி வளர்ச்சி

திருமதி. அ. செல்வரெட்ணம்
ஆசிரியர் (ஆரம்பப்பிரிவு)

ஆம் ஆரம்பக் கல்வியின் தொடக்கத்தில் சிறுகுழந்தைகளிடையே, மூர்க்கத்தனம், கட்டுப்பாடற்ற தன்மை, ஒழுங்கற்ற நிலை போன்றவைகளைக் காணக்கூடியதாக இருக்கும். இந்த ஆரம்பப் பருவத்தில் வழி காட்டுபவராக விளங்குபவர் ஆசிரியர்கள் குழந்தைகளைக் கடுமையான கட்டுப்பாட்டுக்குள், கொண்டு வருவோமானால் குழந்தைகள் தமது தன்மைகளையும், இயல்பான நடத்தைகளையும் அடக்கி அடக்கி ஒடுக்கிக் கொள்வார்கள். இதன் விளைவாக மனவெழுச்சி நடத்தைகள் முரண்பாடாக இருக்க நேரிடும். எனவே சிறுபராயக் குழந்தைகளின் மனவெழுச்சி ஒருமைப் பாட்டுக்காக குழந்தைகளைத் திசை திருப்பி எமது வழியில் எடுக்க வேண்டியுள்ளது. நாம் குழந்தைகளைக் கவரக்கூடிய ஆடல் பாடலில் ஈடுபடுவதோடு அவர்களில் ஒருவராக செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும். குழந்தைகளின் மனவெழுச்சி ஒருமைப்பாட்டுக்காக அவர்களை மிகைப்படுத்திக் கூறவேண்டும். அவர்களின் வெற்றிக்கான பாராட்டுக்களைக் கரகோசத்துடன் வெளிப்படுத்துவதால் அவர்களின் மனவெழுச்சியில் சில சில மாற்றங்களைக் காணக் கூடியதாக இருக்கும். சிட்டுக்களாய் சிறகடித்து சிறந்து தென்படும் சிறார்கள் சிறிது சிறிதாக ஒழுக்க கோட்பாட்டுக்குள் உள்ளடக்கப்பட்டு மனவெழுச்சியில் வளர்ச்சியைக் காணக் கூடியதாக இருக்குமென்பதை கூறிக்கொள்கின்றேன்.

### ஊசி

ம. சர்மிளா
தரம் - $5^B$

ஓட்டை உள்ள ஊசி
ஒல்லியான ஊசி
தைக்கும் நல்ல ஊசி
தரம் வாய்ந்த ஊசி
தூய்மையான ஊசி
நூல் கோர்க்கும் ஊசி
பலமாக்கும் ஊசி
பதமாய் உள்ள ஊசி
இரும்பில் செய்த ஊசி
இலகுவான ஊசி
சின்னஞ் சிறிய ஊசி
சீராய் தைக்கும் ஊசி

## ரோஜா மலர்

J. தினுசன்
தரம் - $5^B$

இள வேனில் காலம்
இளந்தென்றல் வீசும்
தென்றலின் அசைவில்
எனது தோட்டம் சிறக்கும்

ரோஜா மலரே
உன்னைப் படைத்தவன் இறைவனோ
உன் இதழ்களில் மயங்கின வண்டுகளோ
உன்னை சுற்றியுள்ள முட்கள் உன் காவலரோ

உன்னிடம் மயங்கியது நான் மட்டுமல்ல
உயிருள்ள வண்டுகளும் கூட மயங்கியது
உன் வாசனை அதிகாலையில்
என் வீட்டு கதவுகளை தட்டுகிறது

****************************************

## பூக்கள்

வி. ஹிதுர்சன்
தரம் - $5^B$

பூவே பூவே கூறாயோ,
புதுமணம் எங்கே பெற்றாயோ,
சோலை எங்கும் மலர்வாயோ,
சிரித்து மகிழச் செய்வாயோ,

மஞ்சள், சிவப்பு, நீலநிறம்
மனதுக் கினிய வெள்ளை நிறம்
தங்க நிறத்தில் ஒளிர்வாயோ,
தரணி எங்கும் பொலிவாயோ.

****************************************

## எனது தாய் மொழி

ச. விக்னப்பிரியா
தரம் - $5^B$

தமிழ்மொழியே எனது உள்ளம் கவர்ந்த தாய்மொழியாகும். உலகில் வழங்கும் பல மொழிகளுள் தமிழ் மொழியே இனிமையானது, எனது தாய் தமிழ் மொழியிலேயே என்னை தாலாட்டி வளர்த்தார். நாம் தமிழ் மொழியில் சிந்தித்து உறவாடிப் பேசுகின்றோம். எமது மொழி இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழை கொண்டது.

"தமிழுக்கு அமுது என்று பெயர்" என பாரதியார் பாடினார். பல்வேறு நாடுகளில் தமிழ்மொழி பலராலும் விரும்பிப் பேசப்படுகிறது. "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதான மொழி இல்லை." என்றார் பாரதியார். தமிழ் மொழி தொன்மையும் பெருமையும் வாய்ந்தது. எமது தாய் மொழியை வளர்ப்பதும் போற்றுவதும் எம் முக்கிய கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தி இலக்கியங்களில் நாயகன் – நாயகி பாவம்

கலாநிதி S.S. ஆனந்தன்
பிரதி கல்விப் பணிப்பாளர்
திருகோணமலை

தமிழ் இலக்கிய வரலாற்றில் பொற்காலம் எனப் போற்றப் பெறும் சோழர்காலத்திற்கு முற்பட்ட காலம் பல்லவர் காலமாகும். சங்க மருவிய காலத்தின் இறுதிப்பகுதியில் காரைக்கால் அம்மையாராலும் முதல் மூன்று ஆழ்வார்களான பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகியோராலும் ஆரம்பிக்கப்பட்ட பக்தி நெறியானது பல்லவர் காலத்தில் சைவம், வைணவம் ஆகிய இரு நதிகளாக பெருக்கெடுத்துப் பாய்ந்தன. இப்பக்தி இயக்கத்தின் தோற்றம் சைவ வைணவ சமயங்களுக்கு புத்தூக்கத்தையும், புத்தாற்றலையும் செல்வாக்கினையும் ஏற்படுத்தித் தந்தது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் பக்தி இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றனர். இவ்வாறான பக்தி இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்குப் பக்திப்பாடல்கள் ஒரு கருவியாகவும் பயன்படுத்தப்பட்டது.

பல்லவர் காலத்தில் வளர்ச்சி பெற்ற பக்தி இயக்கமும் அவ்வியக்கத்தின் பயனாய்த் தோன்றிய பக்தி இலக்கியங்களும் மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கைப் பெற்றன. பக்தி வெள்ளத்தில் மூழ்கிய நாயன்மார்களும் ஆழ்வார்களும் பல்வேறு நிலைகளில் நின்று இறைவனை தாங்கள் விரும்பியவாறு போற்றிப் பாடி வந்தனர். இறைவன் மீது தங்களுக்குள்ள ஈடுபாட்டை பல்வேறு நிலைகளில் வெளிப்படுத்த முனைந்த முயற்சியின் பயனாய் பல புதிய புதிய இலக்கிய வடிவங்கள் உருப்பெறலாயின. பிள்ளைத்தமிழ், உலா, கலம்பகம், மடல் போன்ற பல சிற்றிலக்கியங்களுக்கு இவர்களே முன்னோடிகளாயினர். பிற்காலத்தில் குணங்குடிமஸ்தான், மகாகவிபாரதியார் போன்றோர் இந் நெறி முறைகளில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தனர்.

பல்லவர் கால நாயன்மார்களும் ஆழ்வார்களும் பல நிலைகளில் நின்றும் தமது பக்தி உணர்வை இலக்கியங்களினூடாக வெளிக் கொணர்ந்த போதும் நாயகன் நாயகி பாவமே சிறப்பாகப் போற்றப்பட்டது.

இறைவனிடம் இடையறாத பக்தியும் பேரன்பும் பூண்ட அடியார்களும் ஆழ்வார்களும் இறைவனைத் தலைவனாக நினைத்து தம்மை தலைவியாகவும் நினைத்து நாயகன் - நாயகி பாவத்தைக் கையாண்டனர். உலகமனைத்தையும் படைத்துக் காத்துவரும் இறைவனை காதலனாக நினைத்தும் பாடுவதும், காதலாகி கசிந்துகண்ணீர் மல்கிடப் பாடி நெஞ்சம் நெக்குருகி நிற்பது அவர்களின் இயல்பாகும். மானிடக் காதலே இந்த அளவிற்கு உயர்ந்தது போற்றுதற்குரியது. ஏனென்றால் இறைவனிடத்துக் கொண்ட இணையற்ற காதல் எத்தகையதாக இருக்கும் என்பதனை அறிதல் வேண்டும். அதை உணர்த்துவதுதான் நாயகன் நாயகி பாவம்.

பக்தி இலக்கியங்களில் தன்னிகரில்லாத் தலைவனாகிய சிவபெருமானை நாயகனாகவும் அவன் அருளையே விரும்பி வாழும் ஆன்மாக்களை அவ்விறைவனைக் காமுற்று வருந்தும் நாயகியாகவும் கூறுவர். அதே மாதிரி மாணிக்கவாசகர் தம்மை நாயகியாகவும் சிவனை நாயகனாகவும் கருதிக் கொண்டு பின்வருமாறு கூறியிருப்பது நோக்கத்தக்கது.

மூலமாகிய மும்மலம் அறுக்கும்
தூய மெனிச் சுடர்விடு சோதி காதலனாகி

மேலும் இவர் "குயில் பத்து" போன்ற பாடல்களில் தன் சிந்தைக்கினிய சிவனின் சிறப்புக்களையெல்லாம் செவிக்கு இன்பம் தரும் வகையில் பாடிப்பரவிட வேண்டும் என்று குயிலை வேண்டுகின்றார்.

நாயன்மார்களில் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், சேரமான் பெருமாள் நாயனார் முதலியோர் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்கள். சம்பந்தர் தன்னை நாயகியாகவும் இறைவனை நாயகனாகவும் கொண்டு பல பாடல்களைப் பாடியுள்ளார். "தோணிபுரத்து ஈசன் சடாமுடியில் பிறையைச் சூடியுள்ளான். அணிகலன்களை மார்பில் அணிந்துள்ளான். இவன் நாயகியின் எழில் நலன்களைக் கவர அவள் உடல் சோர்ந்து உள்ளம் மெலிந்து வாடிப் போனாள்.

நாயகனை எண்ணிய அவள் தாமரை பூத்த குளக்கரைக்கு வருகின்றாள். குளங்களில் மலர்ந்துள்ள தாமரை மலர்களிலிருந்த தேனை உண்டு வண்டுகள் தம் பெண் வண்டுடன் இசைபாடியிருந்தன. தாமரை மலரில் இருந்த மதுவை வண்டு உண்டு மயங்கியது போல் தலைவனும் தன் எழில் நலத்தையும் உண்டு மயங்கியதை எண்ணுகிறாள். தலைவி வண்டுகள் பேடையோடு கூடியிருத்தலைக் கண்டு அவளுக்குத் தானும் தலைவனுடன் கூடவேண்டும் என்ற வேட்கை மிகுகிறது. பேடையோடு கூடியிருக்கும் அரச வண்டையே தூதுவிடுக்க அவள் எண்ணினார்.

வண்டரந்தப் புனற்கமல மதுமாந்திப் பேடையினோடும்
ஒண்டரங்க இசைபாடு மளியரசே ஒளிமரியத்
துண்டரங்கப் பூம்மார்பர் திருத்தோணி புரத்துறையும்
பண்டரங்கர்க் கென்னிலையை பரிந்தொரு கால்பகராயே

அவள் பாடுகின்றாள்

மாணிக்க வாசகரின் இறையன்பாகிய காதலின் உணர்ச்சியின் வேகத்தைக் காட்ட தன்னை ஒரு பெண்ணாக உருவகித்துக் கொண்டு பாடியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணுக்கான ஒரு மனத்துடிப்புடன் இறைவனை அடைய வேண்டும் என்பதை உணர்த்த தன்னையே நாயகியாக பாவனை செய்து பாடிமகிழ்கின்றார்.

"சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சின்ன திரள்தோள்
கூடுவேன் கூடி மயங்கி மயங்கி நின்று
ஊடுவேன் செவ்வாய்க்க உருகுவேன் உள் உருகித்
தேடுவேன் தேடிச் சிவன் கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்து மலர்வேன் அனலெந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய்."

ஏனைய நாயன்மார்களின் பாடல்களிலும் பார்க்க காதல் உணர்ச்சியின் வேகத்தை மாணிக்க வாசகர் பாடலில் காணலாம். பெண்மையின் மென்மையும் உருக்கமும் உறுதியும் இவர் பாடலில் மிகுந்து காணப்படும்.

இதைப் போன்றே வைணவ அழ்வார்களின் பாடல்களிலும் நாயகன் - நாயகி பாவம் மிகுந்து காணப்படுகின்றது. அழ்வார்களுள் ஆண்டாளைத் தவிர ஏனையோர் ஆண்கள். இவர்களில் தங்களை நாயகியாகக் கருதிக் கொண்டு பாடியவர்களின் பாடலுக்கும் பெண்ணாகவே இருந்து பாடிய ஆண்டாளின் பாடலுக்கும் வேறுபாடு உள்ளது. ஆண் ஆழ்வார்களின் பாடல்களில் ஏக்கமும் கெஞ்சுதலும் மிகுந்திருக்கும். ஆனால் ஆண்டாளின் பாடல்களில் உரிமை, உறுதி, நம்பிக்கை, உணர்ச்சி ஆகியவை நிறைந்திருக்கும். ஆண்டாள் தவிர்ந்த பிற ஆழ்வார்கள் தங்களை நாயகியாக் கருதிக் கொண்டு பாடியவர்கள். ஆனால் ஆண்டாளோ இவ்வுலகில் பெண்ணாகவே பிறந்து வளர்ந்து பக்தி கொண்டு பாடியதால் அவருடைய பாடலில் உணர்வு முதலீடு வெளிப்பாடும் மிகுந்தே காணப்படும்.

உலகிடை வாழும் தலை மக்களைப் போல் ஆண்டாள் தன் நாயகனாக திருமாலையே நினைந்து அவனுக்காகவே வாழ்கின்றாள். மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழ்கிலேன் என்று இறுமாந்த இறைவனையே அல்லும் பகலும் இடையறாது நினைந்து பேரின்பம் பெற்றவள். ஆண்டாளின் பாசுரங்கள் அகப் பொருள் மரபு நிறையில் நின்று மானுடக் காதலை தெய்வீகக் காதல் நிலைக்க உயர்த்திக் காட்டுகின்றன. பக்தி இலக்கியங்கள் செல்வாக்குப் பெற்றிருந்த காலகட்டத்தில் இறைவனைக் காதலனாக எண்ணி அவனையே தன்னுடைய வாழ்வின் ஆதாரமாகக் உருவகித்துக் கொண்டு அவன்மேல் அகத்தினைக் கோட்பாடுகளின் அடிப்படையில் பாசுரங்கள் பாடப்பட்டன. " உள்ளம் புகுந்து என்னை நைவித்து நாளும் உயிர் பெற்று கூத்தாட்டுக் காணும்" இறைவன் ஆண்டாளின் உள்ளம் மட்டும் புகுந்து ஆட்கொண்டவனில்லை, "உள்ளம் புகுந்து என்னை ஆட்கொண்டு அருளியவன்" என்று மாணிக்கவாசகரும் "உள்ளங்கவர் கள்வன்" என்று சம்பந்தரும் கூட இறைவனின் அனுபவத்தை அழகு பட எடுத்துரைக்கின்றனர். தன் உள்ளம் புகுந்து தன்னை ஆட்கொண்டருளிய கண்ணனைப் பற்றி ஆண்டாள் தீட்டிய காதல் ஓவியம் விலைமதிக்க வொண்ணாத பக்தி இலக்கியமாகவும் திகழ்கின்றது.

மாணிக்க வாசகர் அழுதழுது இறைவன் திருவடியடைந்தவர், அன்பெனும் பிடிக்குள் அகப்படும் மலையான இறைவனைச் சிக்கெனப் பிடித்தவர். தாயினும் சாலப் பரிந்தூட்டும் இறைவனை நாயகனாக்கி தன்னை நாயகியாகக் கொண்டு பாடிய பாடல்கள் நிறைந்ததே திருவாசகம் என்னும் ஞான நூலாகும்.

அவரின் திருவெம்பாவையில்

"எங்கொங்கை நின் அன்பர் அல்லாதார் தோள் சேரற்க"

என்று பாடுகிறார்

தன் உறுப்புக்கள் திருவருளுக்காகவே அமைந்து அவனைக் காணத் துடித்துக் கொண்டிருக்கின்றன. அவனைத் தவிர வேறு எவர் வீட்டு வாசலையும் அவை காணமாட்டா" என்று பாடும் ஆண்டாள் பாசுரம்

திருவெம்பாவை நாயகி பாவத்தை ஒத்துள்ளது. பக்தி இலக்கிய அகப்பொருட் பாடல்களில் நாயகனோ நாயகியோ அ்.றினை பொருட்களை விளித்துப் பாடும் முறைமையுண்டு. ஆண்டாளும் தன் ஆற்றமுடியாத துயரத்தால் சங்கினைப்பார்த்து

"கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?
திருபவளச் செவ்வாய் தான் தித்தித்து இருக்குமோ
மருப்பொசித்த மாதவன் தன்வாய்ச் சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண் சங்கே

என்று கண்ணனின் கையில் இருக்கும் வெண்சங்கினைப் பார்த்து அச்சிறைதனக்கு கிடைக்கவில்லையே என்று பாடுகின்றாள்.

நம்மாழ்வாரும் ஓர்பாடலில்
அஞ்சிறைய மட நாராய் / அளியத்தாய் நீயும்நின்
அஞ்சிறைய சேவலுமாய் ஆவா என்விடுதூதாய் சென்றக்கால்
வன்சிறையில் அவன் வைக்கில் வைப்புண்டால்
என் செய்யுமோ?

என்று நாரையைத் தூதாக அனுப்புபவராய் அதனுடன் எம்பெருமானின் பிரிவால்தான் இதயக் குமுறலை வெளிப்படுத்தினார்.

இவ்வகையில் ஆழ்வார்கள் திருமாலை ஆதரிப்பதில் நாயக - நாயகி பாவத்தை அமைத்துப்பாடிய அவர்கள் செயலால் உயிர்கள் பால் அவர்கள் கொண்டிருக்கும் நேயத்தை எடுத்துக்காட்டுவனவாகும். நிறைவாக ஆழ்வார்களும் நாயன்மார்களும் உலகச் சேற்றில் அழுந்தும் ஆன்மாக்களை அவர்கள் விரும்பும் உலகியற் காமத்தைக் காட்டுவது போல் உய்யும் வழிதனை எடுத்துக் கூறி ஆற்றுப்படுத்துவதுதான் நாயகன் நாயகி பாவத்தின் முக்கிய குறிக்கோளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதோஷ விரதம்

திருமதி. வ. வசிகரன்
ஆசிரியர் (தமிழ்)

சிவனுக்குரிய விரதங்கள் ஒன்பது என்று கூறப்படுகின்றது. இதிலே ஒன்றாக விளங்குவது பிரதோஷ விரதமாகும். இரண்டு பட்சங்களிலும் வரும் திரயோசித் திதியிலே அதாவது அமாவாசை, பௌர்ணமி இரண்டிற்கும் பிறகு வரும் பதின்மூன்றாவது நாளிலே இவ்விரதம் அநுஷ்டிக்கப்படுகின்றது. சிவதருமோத்திரம் சிவரகசியம் முதலிய நூல்களிலும் இவ்விரத மகிமைக் கதைகள் காணப்படுகின்றன.

மாலைப்பொழுது என்னும் கருத்துடைய பிரதோஷம் என்ற சொல்லால் அழைக்கப்படும். இவ்விரத வழிபாடும் மாலை நேரத்துக்குரியதே. சூரிய அஸ்தமனத்துக்கு முன் மூன்றே முக்கால் நாழிகையும் அஸ்தமனத்துக்குப் பின் மூன்றே முக்கால் நாழிகையுமாகச் சேர்ந்த ஏழரை நாழிகைப் பொழுது பிரதோஷ காலம் எனப்படும். அதாவது பிற்பகல் சுமார் நாலரை மணியிலிருந்து இரவு ஏழரை மணி வரையிலான மூன்று மணித்தியாலம் ஆகும்.

இக்காலத்தில் சிவபிரானை விசேஷமாக வழிபடுவதே இவ்விரதத்தின் முக்கியமான அம்சமாகும். முன்பு தேவர்கள் அசுரர்களோடிணைந்து திருப்பாற் கடலைக் கடைந்த பொழுது முதலில் அங்கிருந்து ஆலகால விஷம் தோன்றியது. தேவர்கள் யாவரும் அஞ்சியோடிய போது பரமசிவன் அவர்கள் மீது சர்வலோக ஆன்மாக்கள் மீதும் கருணை கொண்டு அந்த ஆலகால விஷத்தைத் தாமே அருந்தித் தமது கண்டத்தில் நிறுத்தியருளினார். அந்த ஆலகால விஷத்தைத் தாமே அருந்தித் தமது கண்டத்தில் நிறுத்தியருளினார். (இதனால் சிவபெருமான் நீலகண்டர் எனப் பெயர் பெற்றார்) பயம் நீங்கிய தேவர்கள் இறைவனை வழிபட்டு மீண்டும் கடைந்த போது அமிர்தம் தோன்றியது.

அத்தருணம் அனைவரையும் மகிழ்விக்கும் வண்ணம் எம்பெருமான் இடபதேவரின் கொம்புகளுக்கிடையில் நின்று திருநடனம் செய்தருளினார். வளர்பிறை திரயோதசியும், சனிக்கிழமையும் கூடிய ஒரு நன்னாளிலேதான் இந்த வைபவம் நிகழ்ந்தது. இதனால் தான் சனிப்பிரதோஷ விரதம் மிக விஷேசமாகச் சொல்லப்படுகின்றது.

ஆலகால விஷத்தை உட்கொண்ட பின் அது சீவராசிகளை வருத்தாமலிருக்கும் பொருட்டு ஒரு கனநேரம் சிவபெருமான் மௌனமாக இருந்தார். அப்போது தேவர்களும் முனிவர்களும் உணவருந்தாது பரமசிவனைப் பிரார்த்தித்து நின்றனர். அந்தக் காலமே ஏகாதசியாகும்.

இதன் பின் இறைவனின் அருளாணைப்படி திருப்பாற்கடலை மீண்டும் கடைந்த போது அமிர்தம் தோன்றியது. அதனை அமரர் உண்டனர். இக்காலமே துவாதசியாகும். இதன் பின் முன்னர் குறிப்பிட்டவாறு சிவபிரான் இடமாருதமேந்தி நடனம் செய்யத் திருமால் குடமுழா என்ற வாத்தியத்தை முழங்கத் தேவேந்திரன் சுருதி சேர்த்து நிற்க தும்புருநாதர்கள் இசைபாடக் கலைவாணி மகரவீணையை மீட்டிப் பாடத் திருமகளும் இணைந்து பாட நான்முகன் தாளம் போட உமாதேவியாரும் தேவரும் முனிவரும் இந்த தாண்டவத்தை மகிழ்ச்சியுடன் தரிசித்து நின்றனர். இக்காலமே திரயோதசியாகும்.

இம்மூன்று திதிகளும் சேர்ந்த மூன்று நாட்கள் பரமசிவனுக்கு மிகச்சிறிய அளவுள்ள பிரதோச காலமாகும்.

கணவரை இழந்த பதிவிரதைப் பெண்ணொருத்தி தனது சொந்த மகனும் வளர்ப்பு மகனாகிய ஒரு அரசகுமாரனுமாகிய இரு புதல்வர்களுடன் வாழ வழி தெரியாது வருந்தி வறுமையில் உழன்றபோது சாண்டில்ய முனிவரால் உபதேசிக்கப்பட்டு மூவருமாக இப்பிரதோஷ விரதத்தைக் கைக்கொண்டனர். அதன் பிரகாரம் அந்தணக்குமாரன் அறிவாற்றலும் பொருளும் பெற்றான். அரசகுமாரன் அரசாட்சியைப் பெற்றான் என்று புராணம் உரைக்கின்றது.

அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு புருடார்த்தங்களையும் தரக்கூடிய இவ்விரதத்தை முனிவர்கள் பலரும் இந்திரனும் கைக்கொண்டு அரும்பேறுகள் பல பெற்றனர். கடன் வறுமை நோய் துர்மரணம், பயம் இவற்றை போக்க வல்லது இது. முக்கியமாக புத்திரரை விரும்புவோர் இவ்விரதம் இருப்பதும் வழக்கமாகும்.

இவ்விரத நாளில் நித்திய தர்மாநுஸ்டானங்கள் முடித்து பகல் முழுவதும் போசணம் இல்லாமல் இருந்து மாலை நாலரை மணிக்கு முன்னதாக ஸ்நானம் செய்து சாயம் சந்தியாவந்தனம் சிவ பூஜை முதலியவற்றைச் செய்த பின் மாலை நேரத்திற்குரிய நித்திய கர்மாநுஸ்டானங்கள்) வெள்ளை ஆடைதரித்துச் சிவாலயம் சென்று சிவதரிசனம் செய்து பிரதோஷ பூஜையைத் தரிசித்துப் பிரார்த்தனை செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதோஷ காலத்தில் சிவாலயத்தில் பிரதக்ஷணம் செய்து வழிபடுவதற்கென்று சிறப்பான விதிமறையொன்று ஆகமங்களில் விதிக்கப்பட்டுள்ளது.

இடபதேவரை முதலில் வணங்கி அங்கிருந்து இடமாகச் சென்று சண்டேஸ்வரரைத் தரிசித்த பின் சென்றவழியே திரும்பி வந்து மீண்டும் திரும்பி வந்து இடப தேவரை வணங்கி மறுபடி இடபமாகச் சென்று சண்டேஸ்வரரை வணங்கித் திரும்பி வலமாகக் கோமுகைவரை சென்று (இத் தடவை இடபதேவரை தரிசியாது செல்லவேண்டும்) மறுபடி அங்கிருந்து திரும்பி இடபதேவரை தரிசியாமல் இடமாகச் சென்று சண்டேஸ்வரரை வணங்கி திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து அவரது இரண்டு கொம்புகளின் நடுவே சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து பிரணவத்தோடு கூட "ஹரஹர" என்று சொல்லி வணங்க வேண்டும். பிரதோஷ காலத்தில் கோமுகையைத் தாண்டக் கூடாது என்பதே முக்கிய விதியாகும். இந்தப் பிரதோக்ஷண முறைக்குச் சோமசூத்திரப் பிரதக்ஷணம் என்று பெயர்.

இவ்வாறு ஆலய வழிபாடு செய்த பின் வீடு திரும்பிப் பிரதோஷ காலம் முடிந்த பிறகு (இரவு ஏழரை மணிக்கு மேல் சிவனடியார்களுடன் போசணம் செய்ய வேண்டும்.

பிரதோஷ காலத்தில் சிவனுக்கும் நந்தியெம்பெருமானுக்கும் அன்ன நைவேத்தியத்துடன் காப்பரிசியும் நிவேதனம் செய்து அன்பர்களுக்கு விநியோகிக்க வேண்டும். காப்பரிசி என்பது பச்சரிசியையும் பயற்றம் பருப்பையும் நீரில் நன்கு நனைய வைத்த வடித்தெடுத்து அதற்குச் சர்க்கரையும் தேங்காய்ப் பூவும் சேர்த்துக் குழைத்து (உப்பு சேராமல்) செய்வதாகும். இதனையே பிரதோஷ விரதத்துக்கு உணவாகக் கொள்ள வேண்டும். இது இயலாதவர்கள் சர்க்கரைச் சாதத்தை நிவேதனம் செய்து உண்ணலாம்.

பிரதோஷ காலத்தில் எவராயினும் எண்ணெய் தேய்த்தல், குளித்தல், போசணம் செய்தல். தூங்குதல் முதலிய செயல்கள் செய்தலாகாது. இவ்வேளையில் இறைவனை நினைத்து வழிபாடு செய்யுமாறு புராணங்கள் கூறுகின்றன.

சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை என்ற நான்கு மாதங்களில் ஒன்றில் வரும் சனிக்கிழமை பிரதோஷம் வரும் நாளாகப் பார்த்து இவ்விரதம் ஆரம்பிக்கப்படவேண்டும். ஒரு வருடகாலம் இந்த பிரதோஷ விரதத்தைக் கைக்கொண்டபின் முறைப்படி விரதோத்யாபனம் செய்யலாம். விரும்பினால் தொடர்ந்தும் கைக்கொள்ளலாம். ஆனால் வருடாவருடம் விரத பூர்த்தியை செய்ய வேண்டும். 41, 55, 81, 97 என்ற எண்ணிக்கை வரும் வரை வளர்பிறைப் பிரதோஷம் மட்டும் அநுஷ்டிப்பார்கள்.

இவ்விதம் கைக்கொள்வோருக்கு கடன். வறுமை. நோய், பயம், கிலேசம், மரணவேதனை, பாவம் இவையாவும் நீங்கி முத்தி சித்திக்கும் என்று ஆறுமுகநாவலர் கூறுகிறார். நாமும் நோன்பிலிருந்து இறையருளும் வளமும் பெறுவோம்.

# ICT Short cut word

Tharmalingam Thadshayini
13 Com (2010)

| | | |
|---|---|---|
| CPU | : | Central Processing Unit |
| ROM | : | Read Only Memory |
| Cu | : | Centrol Unit |
| IBM | : | Information Business Machine |
| ASSCII | : | American Standard Code for information Interchange |
| PROM | : | Programmable Read Only Memory |
| MICR | : | Magnetic Ink Character Recognition |
| DRAM | : | Dynamic \|Random Access Memory |
| XP | : | Ex perience |
| CD | : | Compact Disk |
| BD | : | Blue Disk |
| DVD | : | Digital Versatile Disk |
| BCD | : | Binary Coded Decimal |
| HD | : | Hard Disk |
| PC | : | Personal Computer |
| PS/2 | : | Personal System /2 |
| SMS | : | Short Message Service |
| DOs | : | Disk Operating System |

# Memory Capacity Unit

| | | |
|---|---|---|
| 8 bits | : | 1 byte (B) |
| 1024 byte | : | 1 K. byte (KB) |
| 1024 K. byte | : | 1 M.byte (MB) |
| 1024 M. byte | : | 1. G.iga byte (TB) |
| 1024 G.B | : | 1 Tra byte |
| 3.5" Flooppy disk | : | 1.44MB |
| DVD | : | 4.7GB, 8.2GB |
| Hard Disk | : | 40GB, 80GB, 120GB,200GB |
| BD | : | 50GB, 100GB |
| Flash Drive | : | 256MB, 512MB, 1GB,2GB |
| Ram | : | 256MB, 512MB, 1GB, 2GB, 10GB |
| Zip Drive | : | 5.44MB, 100MB |
| CD | : | 600-700MB |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரகமும் நாமும்

செல்வி யோகேஸ்வரன் லிஜிதா
11B

எமது உடலில் முதுகுப்பகுதியில் அவரைவித்து வடிவில் இரு சிறுநீரகங்கள் காணப்படுகின்றன. இவை 9-11cm நீளமும் 3-4cm அகலமும் உடையன. எமக்கு இரு சிறுநீரகங்கள் காணப்படினினும் ஒரு சிறுநீரகம் நாம் சுகதேகியாக வாழப் போதுமானது.

சிறுநீரகத்தின் தொழில்கள்

- உடலினுள் தேங்கும் மேலதிக நீரை வெளியேற்றுதல்.
  மேலதிக உப்பு, நாம் உட்கொள்ளும் மருந்துகள் போன்றவற்றை வெளியேற்றுதல்.
- உடலில் புரதத்திலிருந்து உற்பத்தியாகும் கழிவுப் பொருட்களான யூரியா, யூரிக்கமிலம் போன்றவற்றை வெளியேற்றல்.
- Erthropoietion என்னும் நொதியத்தைச் சுரந்து உடலுக்குத் தேவையான செங்குருதிச் சிறுதுணிக்கைகளை உருவாக்க உதவுகின்றது.
- விற்றமின் A யை தொழிற்படக்கூடிய விற்றமின் D யாக மாற்றுகின்றது.

- ஆகவே ஒருவரின் சிறுநீரகம் நன்றாக தொழிற்படாவிடில் உடலில் நீர் தேங்கும் காலை நேரங்களில் முகத்தில் கண்களைச் சுற்றி வீக்கம் காணப்படும். பின் கால்களும் வீங்கும். சுவாசப்பையில் நீரும் உப்பும் சேருவதனால் இருமல், மூச்சுவிட கடினம் ஏற்படும்.
- புரதத்திலிருந்து உருவாகும் கழிவுகள் வெளியேறாமல் உடலில் தங்குவதால் பசியின்மை, களைப்பு, தோலில் கடி, தோலில் கழிவுப் பொருட்களுடன் உப்பும் படிவாகும், வலிப்பு, மயக்கம், கை கால் விறைப்பு போன்றன ஏற்படும்.
- Erthropoiehin இல்லாவிடில் குருதிச்சோகை, களைப்பு, உடல் வெளிறல், இதயம் பெரிதாகல் என்பன ஏற்படும்.
- விற்றமின் $D_3$ குறைவால் என்புகள் மென்மையடையும்.
- குருதியில் கொழுப்பு கூடுவதால் மாரடைப்பு, பக்கவாதம் என்பன ஏற்படும்.

சிறுநீரகங்கள் நிரந்தரமாக பாதிப்படைய ஏதுவான நோய்கள்

- நீரிழிவு
- சிறுநீரக அழற்சி
- உயர்குருதி அமுக்கம்
- சிறுநீரகக்கல்
- சிறுநீரகத்தில் கிருமி
- சிறுநீரக இரத்தக் குழாயில் அடைப்பு
- பரம்பரை நோய்
- வலி நிவாரண வில்லைகளை அதிகமாக பாவித்தல்

★ மேலே குறிப்பிட்ட நோய்கள் சிறிதுசிறிதாக சிறுநீரகங்களை பாதித்து சிறுநீரகத்தின் தொழிற்பாடும் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டு சென்று இறுதியில் Renal Failure ல் முடியும். 50 வயதுடையவர்கள் 10000இல் ஒருவர் இந்நோயினால் பாதிக்கப்படுவர்.

★ இதற்கு மாறாக சிலருக்கு சிறுநீரகத்தில் தொழிற்பாடு விரைவாக 1-2 நாட்களில் குறையும். உ + ம் பாம்பு கடித்தவர்கள்
அதிகமான இரத்தப்பெருக்கு, வயிற்றோட்டம், வாந்திபேதி ஏற்பட்டோர், நெருப்பு காயம் ஏற்பட்டோர். சிறுநீர் செல்லும் வழியில் அடைப்பு ஏற்பட்டோர்.

இவர்களுக்குத் தகுந்த சிகிச்சை கொடுப்பதன் மூலம் இரு சிறுநீரகங்களும் ஒரு சில வாரத்தில் பழைய நிலைக்கு வந்துவிடும். இவர்களுக்கு நிரந்தர சிறுநீரக பாதிப்பு ஏற்படாது. பொதுவாக சிறுநீரகங்கள் நோய்வாய்ப்படும் போது ஆரம்பகட்டத்தில் எந்தவித அறிகுறிகளும் காணப்படமாட்டாது. சில சந்தர்ப்பங்களில் சிறுநீரை சோதிக்கும் போது அதில் செங்குருதிச் சிறுதுணிக்கைகள், அல்லது புரதம் காணப்படுதலோ அல்லது தற்செயலாக Burea, S. Creatinine ஆகியவற்றை இரத்தத்தில் சோதிக்கும் போது அதிகளவில் காணப்பட்டால் அவரின் சிறுநீரகங்கள் இரண்டும் 30%ற்கு மேலாக பழுதடைந்துவிட்டன என்பது உறுதியாகும்.

பின்பு சிறுநீரகங்கள் 50% ற்கு மேலாக பழுதானால் உடல் வீங்குதல், பசியின்மை, களைப்பு, நகங்கள் மண்ணிறமாதல் போன்றவை ஏற்படும். மூன்றாம், நான்காம் கட்டங்களில் சிறுநீர் அதிகளவு வெளியேறுதல் ஐந்தாம் நிலையில் இரவிலும் 2-3 தடவை சிறுநீர் செல்லலாம். பின்னர் 5ம் நிலையில் செல்லும் சிறுநீரினளவு குறைவடையும். முகம், கால், வயிறு என்பன வீக்கமடையும். பசியின்மை, மூச்சு எடுப்பதில் சிரமம், உடலில் கடி, மயக்கம், வலிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றன ஏற்படும். இந்நிலையில் ஒருவரது சிறுநீரகத்தை பொருத்துவதாலோ அல்லது இரத்தத்தை வாரத்தில் 2-3 தடவை சுத்திகரிப்பதால் அல்லது வயிற்றினுள் Dialysate நீரைவிட்டு தொடர்ச்சியான முறையில் சுத்திகரிப்பதால் நோயைக் கட்டுப்படுத்தி சுகதேகியாக வாழலாம்.

சிறுநீர் பாதிப்புக்குள்ளானோர் கைக்கொள்ள வேண்டிய வழிமுறைகள்

சிறுநீரகப்பாதிப்புக்குள்ளாகும் போது எமது குருதியமுக்கம் கூடும். இது மேலும் விரைவில் சிறுநீரகங்களை செயலிழக்கச் செய்யும். அத்துடன் Albumin சிறுநீரில் வெளியேறும் போது மேலும், சிறுநீரக பாதிப்பு ஏற்படலாம். ஆகவே இவற்றைத் தவிர்க்க தகுந்த மாத்திரைகளைப் பாவித்து குருதியமுக்கத்தை 130/80 கீழ் வைத்திருத்தல் வேண்டும். அத்துடன் சிறுநீரில் Albumin செல்லும் அளவை மாத்திரைகள் மூலம் குறைத்தல் வேண்டும். இவர்களின் சிறுநீரகத்தில் கிருமி தொற்றினால் மேலும் பாதிப்படையலாம். ஆகவே சிறுநீரைப் பரிசோதித்து கிருமி தொற்றல் உள்ளவர்கள் அதற்குரிய சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும்.

சிறுநீரகத்தை மேலும் பாதிப்புள்ளாக்கும் மருந்துகளை (உ+ம் NSAIDS) உட்கொள்ளக்கூடாது. நாம் அருந்தும் நீரைவிட 600ml நீரை அதிகமாக தினமும் அருந்துதல் வேண்டும். சிறுநீரகத்தை மேற்கூறப்பட்டவற்றிற்கமைய பாதுகாத்தல் எமது இறப்பினை தள்ளிப்போட வாய்ப்பினை வழங்குகின்றது.

>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>>

## பயனுள்ள கல்விச் சிந்தனைகள்

மு. கௌரி
13 கலை (2010)

* கல்வி குழந்தைகளது இளமைப்பருவத்தினின்று தொடங்கப் பெறுதல் வேண்டும்

* கல்வி, வாழ்க்கை இலட்சியங்களை அடைவதற்கான கருவி.

* கல்வி பட்டை தீட்டதீட்ட ஒளிவிடும் வைரம்

* கல்வி இல்லாத மனிதன் செப்பம் செய்யப்படாத சலவைக்கல் போன்றவன்

* முதலில் நம்மைப் படித்துக்கொள்ள வேண்டும்

* கல்வியின் வேர்கள் கசப்பானவை. கனிகள் இனிப்பானவை.

* கல்வியின் நோக்கம் சமயச் சார்பு அற்றதாக இருக்க வேண்டும்

* சரியான முறையில் வாழ வழியினைக் கண்டுபிடிப்பது வாழ்க்கையின் பொருளையும், குறிக்கோளையும் உணர்ந்து கொள்வது ஆகியவற்றிற்கான ஒரு தோட்டமே கல்வியாகும்.

* இந்த உலகில் அதிசயமாக மாற்றங்களை உண்டுபண்ணக் கூடிய வல்லமையுள்ளது கல்வி மட்டுமே.

* ஒருவன் பிறருக்குப்பாடம் நடத்துவது உண்மையில்தான் கற்பதற்காக.

* எப்படிப்பட்ட மேதை என்றாலும் அவர் எடுத்து வைக்கும் முதல்படி ஆரம்பப்பள்ளிதான்.

* படிப்பு ஆழமாக ஆழமாகத்தான் எளிமை பிறக்கும். படிக்கப்படிக்கத்தான் அறியாமையின் அகண்டமும், தெரியாதது நிரம்பவுள்ளது என்பதும் தெரியவரும். கல்வியுடன் அறிவும் கேள்வியும் வேண்டும். இம்மூன்றும் இணைந்து செயல்பட்டாலன்றி அறிவியல் அசைவு ஏற்படாது.

* துணியைச் சலவை செய்ய சவர்க்காரக்கட்டி பயன்படுவது போல் மூளையைச் சலவை செய்ய இன்றைய கல்வி பயன்படுகின்றது. உண்மையான கல்வி மனதையும் சலவை செய்யும்.

* நாட்டிலுள்ள கல்வி நிலையங்களை ஒரு கண்ணாகக் கருதுவோமானால், சமுதாயத்தின் மறு கண்ணாக நூலகங்களைக் கருதலாம்.

* கல்வி ஒரு மூட்டை நூல்களை வாசிப்பதன்று, அடக்கம், ஒழுக்கம், அறம், நீதி இவற்றின் முன்மாதிரிகளே.

* மாணவன், ஆசிரியர், நிர்வாகம் என்ற மூன்று பகுதிகளும் ஒருங்கிணைந்த இயந்திரமே பாடசாலை.

* படிப்பதை போல் செலவு குறைந்த பொழுதுபோக்கு வேறு எதுவும் இல்லை. அதைப் போல இன்பம் அளிப்பதும் வேறு இல்லை.

* வாழ்க்கையின் திறவுகோல் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவி வெப்பமடைதலும் காலநிலை மாற்றமும்

திருமதி. வ. இராஜேந்திரன்
ஆசிரியர் (விஞ்ஞானம்)

மனிதனின் வரலாற்றுக்காலத்திலிருந்து கைத்தொழிற்புரட்சி நிகழ்ந்த காலம் வரை புவியின் சராசரி வெப்பநிலை குறிப்பிடத்தக்க ஒரு வீச்சினுள் மாறாமல் ஒரு அளவில் இருந்து வந்தது. ஆனால் கைத்தொழிற்புரட்சியின் பின்னர் மனிதனின் செயற்பாடுகளில் ஏற்பட்ட மாற்றம் (குறிப்பாக சுவட்டு எரிபொருட்களின் அதீத பயன்பாடு) காரணமாக வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டின் அளவு ஒப்பீட்டளவில் கணிசமாக அதிகரித்து வந்தது. அதன் நேரடி விளைவாக புவியின் வளிமண்டலம் மற்றும் கடல்களின் சராசரி வெப்பநிலை அதிகரிக்கும் நிகழ்வே "புவி வெப்பமாதல்" (Global Warming) என்று அழைக்கப்படும்.

பல ஆயிரம் ஆண்டுகளாக நிலவி வந்த இந்த பச்சை வீட்டு வாயுக்களில் முக்கியமாக காபனீரொட்சைட்டின் சீர்நிலை கடந்த 150 ஆண்டுகளாக வெகுவாக பாதிக்கப்பட்டு வருகிறது. நிலக்கரியையும், பெற்றோலிய எண்ணெய்களையும் இயந்திரங்களின் எரிபொருளாக ஏறக்குறைய 150 ஆண்டுகளாக மனிதர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். இவை எரியும் போது அதிகம் வெளிவிடுவது காபனீரொட்சைட்டும், நீராவியும் ஆகும். 1.3*l* பெற்றோலை எரிக்கும் பொழுது 3.17 கிலோ காபனீரொட்சைட் வெளிவருகிறது. இயந்திரமாக்கலுக்கு முன் சுமார் 270PPm ஆகவிருந்த காபனீரொட்சைட்டின் பங்கு 1960இல் 313 PPm ஆகவும், 2005இல் 375 PPm ஆகவும் அதிகரித்துள்ளது. இதன் விளைவாகவே புவியின் சராசரி வெப்பநிலையும் அதிகரித்திருப்பதாக பெரும்பான்மையான அறிஞர்கள் கருதுகிறார்கள். காபனீரொட்சைட்டின் பங்கு இதே போல தொடர்ந்து அதிகரித்தால் இன்னும் வரும் 100 ஆண்டுகளில் புவியின் சராசரி வெப்பநிலை ஏறக்குறைய $1.1^{0}C$ இலிருந்து $6.4^{0}C$ வரை கூடலாம் எனக் கருதுகிறார்கள்.

பச்சை வீட்டு வாயுவாகிய காபனீரொட்சைட் வளிமண்டலத்தில் சேர்க்கப்படும் வரிசையில், அமெரிக்கா முதலாம் இடத்தையும், சீனா இரண்டாம் இடத்தையும், இந்தியா ஐந்தாம் இடத்தையும் வகிக்கின்றன. இன்னும் குறிப்பாகக் கூறினால், உலக வளிமண்டலத்தை கூடுதலாக மாசுபடுத்தும் நாடுகள் அமெரிக்காவும், சீனாவுமே.

புவிவெப்பமாதலின் விளைவுகளை நோக்கினால், பருவ மழையில் பாதிப்பு, வேளாண்மையில் பாதிப்பு அதனால் உணவுத்தட்டுப்பாடு நிலவும், பகல்நேர இரவு நேர வெப்பநிலைகளில் வித்தியாசம் அதிகரிக்கும். முருகைக்கல் தோற்றுவாய்களின் இழப்புகள் ஏற்படும், உலகின் ஓரிடத்தில் வெள்ளம் மற்றோரிடத்தில் கடும் வரட்சி போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டு உயிர்களைக் காவு கொள்வதும், அரிதான தாவர விலங்கினங்கள் அழிதல், நன்னீருக்குப் பற்றாக்குறை ஏற்படுதல், மலேரியா, வாந்திபேதி போன்ற நோய்கள் வேகமாகப் பரவி ஆயிரக்கணக்கான உயிர்கள் மடிதல், துருவப் பனிக்கட்டிகள் கரைந்து கடல்மட்டம் உயர்ந்து விடுமெனவும் எதிர்வரும் 2050 ஆம் ஆண்டுகளில் புவிவெப்பம் $1^{0}C$ ஆல் உயரும் என்றும் இதன் காரணமாக சராசரி கடல்மட்டம் 15cm ஆக உயரும் என்றும் இது 2100 ஆம் ஆண்டில் புவிவெப்பம் $2^{0}C$ ஆல் உயரும் என்றும் இதனால் கடல்மட்டமானது 34cm ஆக உயரும் என்றும் சுற்றாடல் ஆர்வலர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

2009ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மாலைதீவு ஜனாதிபதியின் தலைமையில் அந்நாட்டின் அமைச்சரவைக் கூட்டமொன்றை கடலுக்கு அடியில் நடத்தி, உலகின் கவனத்தை தம் நாட்டின் பக்கம் நோக்கி ஈர்த்துக் கொண்டது. மாலைதீவு அரசாங்கம் இவ்வாறு செய்ததற்குரிய காரணம் பூகோள காலநிலை மாற்றத்தினால் ஒரு மீற்றர் கடல்மட்டம் உயர்ந்ததால் மாலைதீவில் உள்ள 1200 தீவுகளுள் அநேகமானவை கடலுக்கடியில் மூழ்கிவிடும் என்ற ஆபத்தினை உலகிற்கு எடுத்துக்கூறி, டென்மார்க்கின் தலைநகரான கொப்பன் ஹேகனில் (Copen Hagen) ஐக்கிய நாடுகளின் 15ஆவது காலநிலை மாற்றம் பற்றிய உச்சிமாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் மாலைதீவுக்கும் முக்கியதொரு இடம் கொடுக்கப்படல் வேண்டும் என்பதை வலியுறுத்தவே இவ்வாறானதொரு கூட்டம் கடலுக்கு அடியில் நடைபெற்று ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டது.

இவ்வாறு மாலைதீவு ஒருபுறம் உலகின் கவனத்தை ஈர்க்க, மறுபுறம் நேபாளம், இமயமலைச்சிகரத்தில் தமது அமைச்சரவைக் கூட்டத்தினை நடத்தினார்கள். அவர்களது ஆபத்து என்னவெனில் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் புவி வெப்பநிலை அதிகரிப்பால் இமயமலையில் இயற்கையாகக் காணப்படும் பனிச்சிகரங்கள் உருகத் தொடங்குவதனால் நன்னீருக்குத் தட்டுப்பாடும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளப்பெருக்கும் ஏற்படும் என்பதனை உலகின் கவனத்திற்கு கொண்டுவருவதற்காக ஒட்சிசன் சிலிண்டர்கள் சகிதம் அங்கு சென்று ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளார்கள்.

உலகம் வெப்பமடைவதை $2^0$ C க்குள் மட்டுப்படுத்துவதை நோக்காகக் கொண்டு ஹொப்பன்ஹேகனில் 2009ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 7ஆம் திகதி ஆரம்பமாகிய மாநாடு முன்னைய ஆண்டுகளில் நடைபெற்ற காலநிலை மாநாடுகளைவிட முக்கியத்துவம் வாய்ந்தது. இங்கே உலக அரசியல் தலைவர்களது முடிவுகளுக்காக இயற்கையும், இயற்கை வாழ்வை தரிசிக்க விரும்பும் மனிதர்களும் காத்திருப்பது இன்னோர் துயரமாக உள்ளது. பருவநிலை மாற்றம் என்பது மிகவும் முக்கியமானதும் காலம் தாழ்த்தாமல் கவனம் செலுத்தப்படவேண்டியதுமான பிரச்சினையாக இருப்பது உண்மையே. ஒரு தேசம் காபனீரொட்சைட்டின் வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் அது தொழிற்சாலைகளை மூட வேண்டும். நிலக்கரி, எண்ணெய், எரிவாயு போன்ற எரிபொருட்களைக் கைவிட்டு அணுச்சக்தி முதலான ஏனைய வழிகளின் மூலம் சக்தியை உருவாக்க வேண்டும். இதற்கான செலவு அதிகமாகும். இந்தச் செலவை நான் ஏற்கவேண்டுமா? நீ ஏற்க வேண்டுமா? என்ற ரீதியில் சிந்தித்த நாடுகளின் சுயநலப் போக்கினால் ஹொப்பன்ஹேகன் மாநாடு இழுபறியானது. எனினும் எந்த நோக்கத்திற்காக மாநாடு கூட்டப்பட்டதோ அந் நோக்கம் நிறைவேறியதா அல்லது தோல்வியில் முடிந்ததா? என்று யாரேனும் கேட்டால் அதற்கு விடை சொல்வது கடினமே.

மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில், பூகோள வெப்பநிலை உயர்வின் விளைவால் ஏற்படும் அபாயகரமான பேரழிவுகளை, 2004ஆம் ஆண்டு திரையிடப்பட்ட "The day after tomorrow" எனும் ஆங்கிலத் திரைப்படம் வாயிலாக நிதர்சனமாக காட்டியது உலகம் அறிந்ததே. அப்படத்தில் டெல்லி நகரில் பெரும் பனிமழை பொழிவதும் அமெரிக்க நாட்டின் ஒரு பகுதியில் பனிக்கட்டி உறைந்து மூடி நாடு மறைந்து போவதையும், கடல்நீர் நாட்டுக்குள் புகுந்து காரோடும் வீதியில் கடல் கப்பல் நுழைவதும், மக்கள் பீதியால் அலறியடித்துக் கொண்டு சிதறி ஓடுவதையும் பார்த்த பார்வையாளர்கள் உறைந்து போயிருந்தார்கள். இது கற்பனைக்காட்சியாக இருந்தாலும் புவியின் காலநிலை மாற்றம் இதே கதியில் தொடருமானால் அப்படியொரு துர்ப்பாக்கிய நிலை எங்களுக்கு நிஜமாக ஏற்படும் சாத்தியம் உண்டு.

மேலும் U.N.O தகவல்களின்படி கடல்மட்ட உயர்வு காரணமாக 2010 ஆம் ஆண்டுகளில் 5 கோடி மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறி அகதிகளாகும் நிலை ஏற்படும் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

பூமி உஷ்ணமடைவதால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களில் இருந்து எந்தவொரு நாடும் தப்பிக்க முடியாது. இந்த உண்மையை அறிந்து கொண்டால் முழு மனித குலமும் விடுதலை பெறமுடியும்.

எனவே சர்வதேச சமூகம் ஒன்றிணைந்து காபனீரொட்சைட் வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய உடனடி நடவடிக்கையை துரிதமாக முன்னெடுக்காவிட்டாலோ அல்லது ஒரு கணமேனும் தாமதிக்கும் பட்சத்தில் சுயநல அரசியலால் பேரழிவின் விளிம்பில் இருக்கும் பூமியென்ற அழகிய கிரகத்தையே இழந்துவிட வேண்டியநிலை உருவாவது தவிர்க்க முடியாமல் போகும்.

## விளக்கேற்றி வழிபடுவதன் நோக்கம் என்ன?

நா. பானுஜா
11B

ஒளி அறிவையும் இருள் அறியாமையையும், குறிக்கின்றன.இறைவன் அறிவு மயமானவன் இறைவன் அனைத்து ஞானத்திற்கும் ஒளியூட்டும் கருத்தா. ஆகவே ஒளியை இறைவனாக கருதி வணங்குகின்றோம். ஒளி இருளை அகற்றுவது போல் அறிவு அறியாமையை அகற்றுகின்றது. அறிவானது அழிவற்ற பெருஞ்செல்வமாகும். எனவே தீபத்தை ஏற்றுவதன் வாயிலாக செல்வங்கள் அனைத்திலும் மிக உயர்ந்த அறிவுச் செல்வத்தைப் போற்றி வணங்குகின்றோம்.

எண்ணெயும் திரியும் கொண்டு ஏற்றும் விளக்கின் பின் ஆன்மீக தத்துவம் ஒன்று அடங்கியுள்ளது. விளக்கிலுள்ள எண்ணெய் நமது வாசனைகள், எதிர்மறையான எண்ணங்களை குறிக்கும். ஆன்மீக அறிவு ஒளிரும் போது இவ்வாசனைகள் அழிந்து போகின்றன. தீபத்தின் ஒளி மேல் நோக்கியே எரிவது போன்று நாமும் நம்மை உயர் நிலைக்கு உயர்த்தும் அறிவினை பெறவேண்டும்.

ஒருவிளக்கின் துணைகொண்டு ஆயிரக்கணக்கான விளக்குகளை ஏற்றலாம். அத்துடன் அதன் சுடர் ஒருபோதும் குறைவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களுக்குரிய பன்னிரு குணங்கள்

திருமதி. து. தேன்மொழி
(ஆசிரியர்)

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது
அதனிலும் அரிது கூன் குருடு நீக்கி பிறத்தல்"
என்ற ஔவையின் வாக்கிற்கு இணங்க அரிதான மானிடப் பிறவியை பெற்ற நாம் புனிதமான பணியாம் ஆசிரிய பணியை இதய சுத்தியுடன் இனிதே நிறைவேற்றும் வேளையில் எம்மிடம் மிளிர வேண்டிய சிறப்பான பண்புகள்.

பக்தி:- அரிய அற்புத பிறவியையும் புனித சேவையையும் வழங்கிய இறைவனுக்கு வணக்கத்துடன் நன்றி செலுத்தி துதித்து வரல் வேண்டும். இவ் நெறியில் மாணவர்களையும் செவ்வனே வழிநடத்த வேண்டும்.

மென்மை :- பூவிற்கு மென்மை இயல்பானது போல ஆசிரியர்கள் சாதுவான குணத்துடன் அன்பான பாதையில் மாணவர்களை இன் சொற்களால் வழிநடத்த வேண்டும்.

பணிவுடமை :- இறைவனுக்கும் பெரியோர்க்கும் பணிந்து மாணவர்கள் மத்தியில் நம்பிக்கையுடனும் காட்சிக்கு எளியவர்களாகவும் அடக்கத்துடனும் அறிவினை வெளிக்காட்டிட வேண்டும்.
"பணியுமாம் என்றும் பெருமை' என்பதை நாம் மனதிற் கொள்ளத்தக்கது நன்று.

தயாளகுணம் :- மாணவச் செல்வங்களுக்கு அறியாமை நீக்கி அறிவை புகட்டும் போது தயாள குணத்துடனே "அறியாமையை நீக்கும் மருந்து கல்வி" என்பதை போதிக்க வேண்டும். எல்லா மாணவர்களின் நிலை அறிந்து கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

ஒழுக்கம்:- மாணவர்களுக்கு என்றும் முன்மாதிரியான உயிரினும் மேலான ஒழுக்கத்தைப் பேணி நாமும் நடந்து மாணவர்களையும் வழிநடத்த வேண்டிய பாரிய பொறுப்பு எமக்குரியது.

பொறுமை :- "அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல" என்றும் எவ்விடத்திலும் எம் நிலையின்று மாறுபடாது பொறுமையுடன் நடந்து எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவச் செல்வங்களுக்கு ஒளி ஊட்டிட வேண்டும்.

மௌனம் :- தேவை கருதி சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப மௌனமாக இருத்தல் போற்றத்தக்கதாகும். மௌனத்தில் சாதிக்க வேண்டிய நலம் பெறும் விடயங்கள் பல உள. எனவே காலத்திற்கு ஏற்ப செயற்படுவோம். வளம் பெறுவோம். வாழ்க்கையை வெற்றி கொள்வோம்.

விழிப்புணர்வு :- கல்விக் கூடத்தில் ஆசிரியர்கள் என்றும் விழிப்புணர்வுடனே செயலாற்ற வேண்டும். உயிர் உள்ள ஓவியங்களுடன் நாம் இயங்கிக் கொண்டிருக்கின்றோம். அவர்களை நல்ல பாதையில் இழுத்துச் செல்லல் எமக்குரிய பாரிய பொறுப்பாகும்.

பகுத்தறிவு :- எதனையும் திட்டமிட்டு செயலாற்ற "பகுத்தறிவு" கருவியாகும். சொல்லிலும் செயலிலும் நிதானத்துடன் திடமாக மன உறுதியுடன் செயற்றிட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

அறிவுடமை :- கற்பித்தல் செயல் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்க நாம் என்றும் கற்றுக் கொண்டிருக்க வேண்டும். கற்றதன் வழி மாணவர்களை கொண்டு செல்ல வேண்டும். புதிய புதிய விடயங்களை தேடி தொகுத்து கொடுத்து அறிவினை பெருக்கி கொள்ள வேண்டும். தேவை அறிந்து சேவை செய்ய வேண்டும்.

ஆர்வம் :- தேடல் இல்லா கல்வி தேவையில்லை. மேலும் தேடல் மூலம் மாணவர்களுக்கு போதிய விளக்கம் அளிக்கும் ஆர்வம் ஆசிரியர்கள் அனைவருக்கும் அவசியமாகும்.

விவேகம் :- கால மகளின் கருத்துணர்ந்து செயலாற்ற விவேகம் அவசியமாகும். தெளிவும், சிந்தனைத் திறனும், விவேகமும் இணைந்து எமது செயற்பாட்டை வென்றெடுப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாலய
முகாமைத்துவக் குழுவினர்





அச்சுதம் மலர்க்
குழுவினர்

வித்தியாலய
**JICA**
குழுவினர்





மாணவத்
தலைவர்களுடன்
கட்டொழுங்குக் குழுவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையர்கள்

கோணாமலை ஜனார்த்தனன்
12Com (2011)

1) கணினியின் தந்தை யார்?
சாள்ஸ் பபேஜ்

2) பரிசோதனை முறை விஞ்ஞானத்தின் தந்தை யார்?
பிரான்சிஸ் பேக்கன்

3) தட்டச்சின் தந்தை யார்?
கிறிஸ்டோபர் லதாம் ஷோல்ஸ்

4) கணக்கியலின் தந்தை யார்?
லூக்கா பெசியோலி

5) வெள்ளைப்பிரம்பின் தந்தை என சிறப்பிக்கப்படுபவர்?
ஜின் டிலேக்

6) உயிர் இரசாயனவியலின் தந்தை யார்?
பிரெரிக் ஜி. கொப்கின்ஸ்

7) மின்சாரத்தின் தந்தை யார்?
மைக்கல் ஃபரடே

8) சமூகவியலின் தந்தையர் என அழைக்கப்படுபவர்கள்?
மக்ஸ்வெபர், ஹொம்ரே

9) சாரணிய இயக்கத்தின் தந்தை என அழைக்கப்படுபவர்?
பேடன் பவுல் பிரபு

10) பக்டீரியாவின் தந்தை யார்?
லூயி பாஸ்டர்

11) குடித்தொகை கல்வியின் தந்தை யார்?
ஜோன் கிரான்ட்

12) கேத்திர கணிதத்தின் தந்தை யார்?
யூக்கிளிட்

13) நவீன மருத்துவத்தின் தந்தை எனப்படுபவர் யார்?
கிப்போ கிரெட்டிஸ்

14) பற்றீரியாவின் தொழில்நுட்ப தந்தை யார்?
றொபொட் கொச்

15) அழுகலெதிரி அறுவை மருத்துவத்தின் தந்தை எனப்படுபவர்?
ஜோசப் லிஸ்தர்

16) தமிழ் தட்டச்சின் தந்தை யார்?
இ. முத்தையா

17) இலங்கை இந்துக்கல்வியின் தந்தை யார்?
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

18) அரசியலின் தந்தை எனப்படுபவர்?
அரிஸ்டோட்டில்

# The value of Education

**S. Shankavi**
Grade 9B

Education is very valuable to every one in this world with out education, we can't be successful in life. When we are properly educated we can be good citizens. We have to be useful to our country by making good use of the education facilities provided to us Dr. C. W. W. Kanangara is considered the father of free Education. He introduced free education to every one. With out education most people would have ended up as fools. Many companies provide jobs for people based on their educational qualifications. we have to do well in our education if we want be successful. Our parents spend a lot of their money to give us a good education. We have to listen to our parents and teachers and study hard. They as adults know many things about this world. They know how to live in this world by making good use of their education. Because of this they will not be able to get good employment when they grow up. With out a good employment when they grow up. without a good job we will have diffculty in life. we need money to fulfil our needs. If we want to live a comfortable life, We need to be educated. We learn many subjects at school. We need to improve our knowledge at various levels. First we need to educate our selves at school and when then we must gain extra knowledge in other areas. Day - by - day we have to improve our knowledge by studying. Education is very valuable to us.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருடங்களும் விழாக்களும்

S. சகானா
11B

| | | |
|---|---|---|
| 1ம் வருடம் | - | காகிதவிழா |
| 2ம் வருடம் | - | பருத்தி விழா |
| 3ம் வருடம் | - | தோல் விழா |
| 4ம் வருடம் | - | பூபாள விழா |
| 5ம் வருடம் | - | மர விழா |
| 6ம் வருடம் | - | சர்க்கரை விழா |
| 7ம் வருடம் | - | கம்பளி விழா |
| 8ம் வருடம் | - | வெண்கல விழா |
| 9ம் வருடம் | - | மண்கலச விழா |
| 10ம் வருடம் | - | தகரவிழா. தசவவிழா |
| 11ம் வருடம் | - | எ.்.கு விழா |
| 12ம் வருடம் | - | லைனன் விழா |
| 13ம் வருடம் | - | லேஸ்விழா |
| 14ம் வருடம் | - | தந்த விழா |
| 15ம் வருடம் | - | படிகவிழா |
| 20ம் வருடம் | - | பீங்கான் விழா |
| 25ம் வருடம் | - | வெள்ளி விழா |
| 30ம் வருடம் | - | முத்துவிழா |
| 40ம் வருடம் | - | மாணிக்கவிழா |
| 50ம் வருடம் | - | பொன்விழா |
| 60ம் வருடம் | - | வைரவிழா |
| 75ம் வருடம் | - | பவளவிழா |
| 80ம் வருடம் | - | அமுதவிழா |
| 100ம் வருடம் | - | நூற்றாண்டுவிழா |

*******************************************

## நாடுகளும் சிறப்புப் பெயர்களும்

செல்வி வ. கஜந்தினி
11B

| | | |
|---|---|---|
| கனடா | - | வில்லிப்பூவினநாடு |
| சிக்காக்கோ | - | காற்றின் நகரம் |
| சுவிஸ்லாந்து | - | ஐரோப்பாவின் தொட்டில் |
| கியூபா | - | உலகின் சர்க்கரைக் கிண்ணம் |
| ஆபிரிக்கா | - | இருண்ட கண்டம் |
| அவுஸ்திரேலியா | - | கங்காருவின் நாடு |
| நோர்வே | - | நடுநிசியில் சூரிய உதய நாடு |
| பெல்ஜியம் | - | ஐரோப்பாவின் காப்பகம் |
| இந்தியா | - | அரபிக்கடலின் இராணி |
| யப்பான் | - | உதய சூரியனின் தேசம் |
| எகிப்து | - | நைல்நதியின் கொடை |
| துருக்கி | - | ஐரோப்பாவின் நோயாளி |
| திபெக் | - | உலகத்தின் கூரை |
| பஞ்சாப் | - | ஐந்து நதிகளின் மாநிலம் |
| பர்மா | - | ஆசியாவின் நோயாளி |
| பாலஸ்தீனம் | - | பரிசுத்த பூமி |
| உரோமாபுரி | - | ஏழுமலைநாடு |
| இலங்கை | - | ஈடனின் தோட்டம் |

## கீதை சொல்லும் வாழ்க்கை

சி. சிவரூபினி
தரம் - 11B

1. வாழ்க்கை ஒரு சவால்
அதனை சந்தியுங்கள்

2. வாழ்க்கை ஒரு பரிசு
அதை ஏற்றுக் கொள்ளுங்கள்

3. வாழ்க்கை ஒரு சாகசப்பயணம்
அதனை மேற்கொள்ளுங்கள்

4. வாழ்க்கை ஒரு சோகம்
அதனை தாங்கிக் கொள்ளுங்கள்

5. வாழ்க்கை ஒரு துயரம்
அதை பகிர்ந்து கொள்ளுங்கள்

6. வாழ்க்கை ஒரு கடமை
அதனை நிறைவேற்றிக்கொள்ளுங்கள்

7. வாழ்க்கை ஒரு விளையாட்டு
அதனை விளையாடுங்கள்

8. வாழ்க்கை ஒரு வினோதம்
அதனை கண்டறியுங்கள்

9. வாழ்க்கை ஒரு பாடல்
அதனை பாடுங்கள்

10. வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம்
அதனை பயன்படுத்திக் கொள்ளுங்கள்

11. வாழ்க்கை ஒரு பயணம்
அதனை புகழுடன் முடித்து விடுங்கள்

12. வாழ்க்கை ஒரு உறுதிமொழி
அதனை நிறைவேற்றுங்கள்

13. வாழ்க்கை ஒரு காதல்
அதனை அடையுங்கள்

14. வாழ்க்கை ஒரு அழகு
அதனை ஆராதியுங்கள்

15. வாழ்க்கை ஒரு உணர்வு
அதனை உணர்ந்து கொள்ளுங்கள்

16. வாழ்க்கை ஒரு போராட்டம்
அதனை எதிர்கொள்ளுங்கள்

17. வாழ்க்கை ஒரு குழப்பம்
அதற்கு விடை காணுங்கள்

18. வாழ்க்கை ஒரு இலக்கு
அதனை எட்டிப் பிடியுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்குத் தெரியுமா?

இ. சுதர்ஷன்
தரம் - 11A

1) ஜப்பான் நாட்டு மயில்கள் சிவப்பாக முட்டையிடும்.
2) நத்தைகளில் 80 ஆயிரம் வகைகள் உண்டு.
3) கிளிகளுக்குப் பேசும் சக்தி அதிகம் உண்டு.
4) ஒட்டகம் 300கிலோ எடையை சுமந்து செல்லும்.
5) நாய்க்கு வியர்ப்பது கிடையாது.
6) தன் காதை (21 அங்குல நீளம்) சுத்தம் செய்யும் விலங்கு ஒட்டகம்.
7) பென்குயினால் பறக்க முடியாது. ஆனால் 06 அடி உயரம் வரை குதிக்கும்.
8) 23 நொடிகள் மட்டுமே பறக்கக்கூடிய பறவை கோழி.
9) யானையின் துதிக்கையில் நான்கு இலட்சம் தசைகள் உள்ளன.
10) சிப்பியில் முத்து விளைய 15 ஆண்டுகள் ஆகும்.

****************************************

## செயலால் விளக்கிய பெரியோர்கள்

அ. பதுஷன்
தரம் - 5B

அரிச்சந்திரன் - வாய்மை
கர்ணன் - கொடை
வீமன் - வலிமை
தருமர் - பொறுமை
வசிட்டர் - தவம்
துரியோதனன் - பொறாமை
விஜயன் - வில்வித்தை
பரதன் - சகோதரஅன்பு
மகாத்மாகாந்தி - அஹிம்சை
கம்பர் - கவிதை

****************************************

## எல்லாம் இரண்டு

S. அஜித்
தரம் - 5B

வருவதும் போவதும் - இன்ப துன்பம்
வந்தால் போகாதது - புகழ், பழி
போனால் வராதது - மானம், உயிர்
தானாக வருவது - இளமை, முதுமை
நம்முடன் வருவது - பாவம், புண்ணியம்
அடக்க முடியாதது - ஆசை, துக்கம்
தவிர்க்கமுடியாதது - பசி, தாகம்
பிரிக்க முடியாதது - பந்தம், பாசம்
அழிவைத் தருவது - பொறாமை, கோபம்
எல்லோருக்கும் சமமானது - இறப்பு, பிறப்பு

## அறிந்து கொள்ளுங்கள்

றிஸ்ஸாலி முஹமட் இஹ்சான்
தரம் - 11A

01. தமிழ் யாத்திரை எனும் நூலை எழுதியவர்?
அறிஞர் ஏ. எம். ஏ. அசீஸ்

02. ஆபிரிக்காவில் மிகப்பெரிய வாவி?
விக்டோரியா

03. இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது உபவேந்தர் யார்?
ஐவர்யெனிங்ஸ்

04. முதன்முதலாக நியுயோர்க் நகரில் வெளியான முஸ்லிம் பத்திரிகையின் பெயர் என்ன? எந்த ஆண்டில்?
முஸ்லிம் உலகம் என்ற பத்திரிகை, 1983ம் ஆண்டு

05. இலங்கையில் இறப்பர் விதை எப்போது யாரால் கொண்டுவரப்பட்டது?
சேர் கென்றிவிக்கம் என்பவரால், 1876இல்

06. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான குறுகிய தூரம்?
22மைல் (இருபத்து இரண்டு)

07. முதன் முதலாக உடலுறுப்புக்களை பெயர்த்துப் பொருத்தும் முறை எப்போது? எங்கு நடைபெற்றது?
1954-Dec -23, பொஸ்டன் நகரில்

08. எம்பயர்ஸ்ரேட் எனும் கட்டிடம் எங்குள்ளது? எத்தனை அடி? எத்தனை மாடி?
அமெரிக்காவிலுள்ள நியூயோர்க் நகரில் 1110 அடி உயரம், 102 மாடி கொண்டது

09. கலாயோகி ஆனந்தகுமார சுவாமிக்கு கலாநிதிப்பட்டம் வழங்கிய பல்கலைக்கழகம் எது?
இலண்டன்

10. வளிமண்டல அமுக்கத்தை அளக்க பயன்படுத்தும் கருவி?
பாரமானி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏட்டில் படித்ததோடு இருந்து விடாதே

ஜெ. நாகஅர்ச்சுன்
தரம் - $11^A$

ஏட்டில் படித்ததோடு
இருந்து விடாதே - நீ
ஏன் படித்தோம் என்பதையும்
மறந்து விடாதே!

நாட்டின் நெறிதவறி
நடந்து விடாதே - என்றும்
நல்லவர்கள் தூற்றும்படி
வளர்ந்து விடாதே!

துன்பத்தை வெல்லும் கல்வி
கற்றிட வேண்டும்
சோம்பலைக் கொல்லும் திறன்
பெற்றிட வேண்டும்!

பெற்றதாயின் புகழும், நீ பிறந்த
மண்ணின் புகழும்
வற்றாமல் உன்னோடு
வளர்ந்திட வேண்டும்!

**************************************

## புத்தகம்

கோ. கம்ஷாயினி
தரம் 4

புத்தகங்கள் படிக்கலாம்
புதுமைகளை அறியலாம்
நித்தம் கற்ற வழியிலே
நின்று வாழ்வில் உயரலாம்

கல்வியறிவை நமக்கெல்லாம்
கற்றுத் தரும் புத்தகம்
தொல்லையின்றி நாளுமே
துணையாய் நிற்கும் புத்தகம்

புரிந்திடாத விந்தையைப்
புரியவைக்கும் புத்தகம்
அறிந்திடாத உண்மையை
அறிய வைக்கும் புத்தகம்

நல்ல நல்ல புத்தகம்
நாளும் சேர்ந்து படித்திட்டால்
நல்ல உயரிய மனிதராய்
வெற்றியுடன் வாழலாம்.



## தமிழ்

நா.பாலவதனன்
தரம் - $11^A$

தமிழே எங்கள் தாய்மொழியாகும்
தரணி போற்றும் பொன்மொழியாகும்
அமுதம் போல இனித்திடுமே
அன்பால் எம்மை அணைத்திடுமே

உலகில் மூத்தமொழி இதுவாகும்
உயிராய் எமக்கு அமைந்திடும்
நிலவும் வானும் உள்ளவரை
நிலைத்து என்றும் வாழ்ந்திடும்

அன்னை தமிழை போற்றிடுவோம்
அறிவை நாளும் வளர்த்திடுவோம்
கன்னித் தமிழை கற்றிடுவோம்
கல்வியில் சிறந்து வாழ்ந்திடுவோம்.

**************************************

## வாழ்க்கையில் வெற்றிபெற

வி. ஜதுர்ஷன்
$11^A$

அறிந்து கொள் அல்லது
அறிந்தோர்க்கு செவி சாய்த்து
தெரிந்து கொள்.

நினைத்தது கிடைக்கவில்லை
என்று வருந்தாதே - கிடைத்ததை
வைத்து மிகவும் மகிழ்ச்சி கொள்.

எவ்வளவு காலம் வாழ்ந்தோம்
என்பது கேள்வி அல்ல வாழ்ந்த
காலத்தில் என்ன செய்தோம்
என்பதே கேள்வி.

மலருக்கு மணமும் மனிதனுக்கு
குணமும் மிகவும் அவசியம் அதுபோல
சொன்ன சொல்லையும் எறிந்த கல்லையும்
திருப்பிப் பெறமுடியாது.

எந்தவொரு செயலையும் அதே
நோக்கோடு செய்பவன் - நிச்சயம்
அதன் உச்சப்பயனைப் பெறுவான்.

உன் கையை பணத்தால் நிரப்பு
உன் மனத்தை நற்குணத்தால் நிரப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரத்தின் நேரசூசி

ச. சுபாஷா
தரம் $10^C$

திட்டமிட்டு நேரத்தை ஒதுக்கு - அது
சாதனையின் திறவு கோல்.

அன்பு காட்ட நேரத்தை ஒதுக்கு - அது
இறைவனின் அருட் கொடை.

நல்லனவற்றை பேச நேரத்தை ஒதுக்கு - அது
இன்பத்தின் வாயில்.

விளையாட நேரத்தை ஒதுக்கு - அது
இளமையின் தேடல்.

சிரித்து மகிழ நேரத்தை ஒதுக்கு - அது
இதயத்தின் இனிய கானம்.

சிந்திக்க நேரத்தை ஒதுக்கு - அது
சக்தியின் வாயில்.

படிக்க நேரத்தை ஒதுக்கு - அது
அறிவின் கண்.

****************************************

## திருக்குறள்

வே. விஜயபாரதி
தரம் 13 கலை (2010)

உலகை கவர்ந்திடும் திருக்குறளாம்
உண்மையை கூறும் திருக்குறளாம்
நன்றே செய்ய மனிதனை
நாளும் தூண்டும் திருக்குறளாம்

ஒன்றே குலமெனும் திருக்குறளாம்
உயர்வை பேணும் திருக்குறளாம்
என்றும் வாழும் திருக்குறளாம்
எவருக்கும் பொதுவாம் திருக்குறளாம்

முப்பால் என்ற பெயர் கொண்டு
முழுமையை நல்கும் திருக்குறளாம்
எப்பொழுதும் நாம் படித்திட
ஏற்ற நூலாம் திருக்குறளாம்

வள்ளுவன் தந்த திருக்குறளாம்
வாழ்வை புதுப்பிக்கும் திருக்குறளாம்
எனக்கு பிடித்த ஒரு நூலாம்
உலகம் போற்றும் பெருநூலாம்

## நான் விஞ்ஞானியானால்

இ. தேவதர்சன்
தரம் 4

நான் விஞ்ஞானியானால் உலகை அச்சுறுத்தும் கொடிய நோய்களை ஒழிக்க முயற்சிப்பேன்.

மனித உயிர்களைப் பலிகொள்ளும் யுத்தக் கருவிகளைச் செயலிழக்கச் செய்வேன்.

உலக மக்கள் அனைவரும் ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்குரிய வழிகளை கண்டுபிடிப்பேன்.

பல்வேறு ஆராய்ச்சிகளைச் செய்து மனிதனின் தேவைகளை இலகுபடுத்துவேன்.

அண்ட வெளியிலுள்ள கோள்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து அதன் நன்மைகளை உலகுக்கு வழங்குவேன்.

உணவுப் பஞ்சத்தால் பாதிப்புறும் நாடுகளுக்கு நவீன உற்பத்தி முறைகளை அறிமுகப்படுத்துவேன்.

உலகிலுள்ள மக்கள் அனைவரையும் சுகத்துடன் வாழ நோய் எதிர்ப்பு நவீன மருந்து வகைகளைக் கண்டுபிடிப்பேன்.

ஆகாயத்தில் பறந்து திரிவதற்கு ஏற்ற அற்புதமான சாதனங்களை உருவாக்குவேன்.

எனது நாட்டை முன்னேற்றுவதற்குத் தேவையான முயற்சிகளில் அயராது ஈடுபடுவேன்.

எனது நாட்டிற்குப் பெருமைகளைத் தேடிக்கொடுப்பதற்கு அரும்பெரும் சாதனைகளைப் புரிவேன்.

****************************************

## இப்படித்தான் இருக்கவேண்டும்

அ. றிஸ்வான்
தரம் 5B

மதிக்கவேண்டியவை - முதுமை, சட்டம்
நேசிக்கவேண்டியவை - தூய்மை, நேர்மை
புகழ வேண்டியவை - அழகு, அறிவு
வளர்க்கவேண்டியவை - மனவுறுதி, இனிய சுபாவம்
நிலைநிறுத்தவேண்டியவை - வாக்குறுதி, நட்பு
அடக்கவேண்டியவை - நாக்கு, கோபம்
தடுத்துக் கொள்ளவேண்டியவை - பொய், பொறாமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சான்றோர் வாக்கு

கு. தவப்புதல்வி
தரம் 13 கலை (2010)

திறமை எனும் தாயும், உழைப்பு என்ற
தந்தையும் பெற்றெடுத்த அன்புக் குழந்தையின்
பெயர் 'புகழ்'.

- பஸ்கால் -

உற்சாகத்துடன் ஒரு வேலையை
தொடங்கினாலேயே பாதி வெற்றிதான்.

- சாணக்கியர் -

மனிதத் துளிகள் எனும் செங்கற்களால்
கட்டப்படுவதுதான் வாழ்க்கை எனும் வீடாகும்.

- பெஞ்சமின் பிராங்கிளின் -

புறம் பேசுவது கடுமையான பாவம் ஆகும்.

- நபிகள் நாயகம் -

உன்னிடம் பாசம் வைத்திருக்கும் இதயத்தை
நேசி. உன்னை கோபப்படுத்தும் இதயத்தை
அதிகமாக நேசி.

- அன்னை தெரேசா -

விழிப்பதற்கே உறக்கம்
வெல்வதற்கே தோல்வி
எழுவதற்கே வீழ்ச்சி!

- ராபர்ட் பிரவுனிங்

வெற்றி பெறவேண்டும் என்று நினைத்து
போராடாதே...!
தோல்வி அடையக்கூடாது என்று போராடு.
வெற்றி உன் கையில்.

- மாவீரன் அலெக்சாண்டர் -

நோய் உடம்பை பீடிக்கட்டும். ஆனால் மனமே
நீமட்டும் எப்பொழுதும் ஆனந்தித்திரு

- ராமகிருஸ்ண பரமஹம்சர் -

நல்லநட்பை இழப்பதை விட கொஞ்சம்
பணத்தை இழப்பது மேலானது.

- மகாத்மா காந்தி -

கோபம் என்பது பிறர் செய்யும் நலனுக்கு நீயே
உனக்கு கொடுத்துக் கொள்ளும் தண்டனை

- புத்தபிரான் -

## நூல்களும் ஆசிரியர்களும்

க. கிருஷாந்
தரம் - 13 (கலை)
2010

| | |
|---|---|
| திருக்குறள் | - திருவள்ளுவர் |
| பெரியபுராணம் | - சேக்கிழார் |
| சீறாப்புராணம் | - உமறுப்புலவர் |
| திருவாசகம் | - மாணிக்கவாசகர் |
| இராமாயணம் | - வால்மீகி |
| சிலப்பதிகாரம் | - இளங்கோ அடிகள் |
| மணிமேகலை | - சீத்தலைச் சாத்தனார் |
| சீவகசிந்தாமணி | - திருத்தக்கதேவர் |
| நன்னூல் | - பவணந்தி முனிவர் |
| தேம்பாவணி | - வீரமாமுனிவர் |
| கலிங்கத்துப்பரணி | - சயங்கொண்டார் |
| நளவெண்பா | - புகழேந்திப்புலவர் |
| வீர சோழியம் | - புத்தமித்திரனார் |
| திருமந்திரம் | - திருமூலர் |
| வளையாபதி | - நாதகூத்தனார் |
| மகாபாரதம் | - வில்லிப் புத்தூர் |
| திருப்புகழ் | - அருணகிரிநாதர் |
| மகாவம்சம் | - மகாநம |
| சத்தியசோதனை | - மகாத்மா காந்தி |
| கீதாஞ்சலி | - சுப்பிரமணிய பாரதியார் |
| பாதாஞ்சலி | - ரவீந்திர நாத்தாகூர் |
| நன்னெறி | - சிவப்பிரகாச சுவாமிகள் |
| நல்வழி | - ஔவையார் |
| நாலடியார் | - சமண முனிவர் |
| திருவிளையாடற் புராணம் | - பரஞ்சோதிமுனிவர் |

*************************************

## கல்லீரல்

ம. சுவர்ணன்
தரம் $10^{A}$

நமது உடலுறுப்புக்களில் மிகப் பெரியது கல்லீரல்தான். அதனுடைய எடை 1.4Kg. உடலில் பாயும் இரத்தத்தில் 15% எந்த நேரமும் கல்லீரலில் பாய்கிறது. கல்லீரலின் தன்னைத்தானே சீர்செய்து கொள்ளும் சக்தி அபூர்வமானது. முக்கால் பாகம் உயிரணுக்கள் கல்லீரலில் பழுதடைந்தாலும் ஒரே வாரத்தில் கல்லீரல் அவற்றைப் புதுப்பித்துக் கொண்டுவிடும். இரத்தத்திலுள்ள நச்சுப்பொருட்களை அகற்றுவதிலும் கல்லீரலின் பணி நிகரற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழையின் மகத்துவம்

பா. ராஜினி
13 வர்த்தகம் (2010)

மருத்துவப் பயன்மிக்க மூலிகைகளுள் வாழையும் ஒன்று. இதில் மலை வாழை, மொந்தன் பூவன், பேயன், நஸ்தாலி ஆகியவை முக்கியமானவை. மலச்சிக்கல், மூலநோயால் அவதியுறுவோருக்கு பூவன் பழமும், வயிற்றுப் புண்ணால் பாதிக்கப்படுவோருக்கு பேயன் பழமும் தேவை. சுலபத்தில் ஜீரணத்தை உண்டாக்கி மலச்சிக்கலைப் போக்குவது மலைவாழை.

நஸ்தாலியில் மருத்துவ குணங்கள் குறைவு. ஆனால் சுவை அதிகம். சோரியாசிஸ், தோல் தொற்றுக்கள், இரத்தத்தில் உண்டாகும் தொற்றுக்கள், இரத்தக் குறைபாடுகள் ஆகியவற்றை வாழைத்தண்டு போக்குகின்றது. பல மருத்துவப் பண்புகளை இது உண்டாக்கி இருக்கிறது.

வாழைச்சாறு வயிற்றுப்போக்கு மூல இரத்த ஒழுக்கு, கைகால் எரிவு, இருமல், மலத்தில் இரத்தம் வெளியேறுதல், இரத்தச்சோகை, குடற்புழுக்கள் ஆகியவற்றைப் போக்குகிறது. மூலத்தால் கசியும் இரத்தப்போக்கு, வயிற்றுக்கோளாறு, இருமல், சிறுநீர் ஒழுக்கு, கோழைச்சுரப்பு அதிகரித்தல், வயிற்றுப்புண், குடற்புண் போன்றவற்றை வாழைக்காய் குணமாக்குகின்றது. இரத்தச் சிவப்புச் செல்களை உருவாக்குவதில் வாழைக்காய்க்கு நிகரில்லை. அதிகமாக இதைச்சாப்பிட்டால் வயிற்றில் வாயுத்தொல்லை உண்டாகும். வாழைப்பழத்திற்கு இளக்கும் தன்மை உண்டு. இதில் கல்சியம், பொட்டாசியம், சோடியம், பொஸ்பரஸ், சல்பர், மக்னீசியம், இரும்பு, விற்றமின் ஆகியவை உள்ளன. சில நோய்களுக்கு வாழையை எப்படிப் பயன்படுத்தலாம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

தீக்காயம், வெந்நீரகக் காயம், சூடான எண்ணெய்க்காயம்.

குருத்துவாழை இலையை பாதிக்கப்பட்ட இடத்தில் சுற்றி கட்டுப்போடலாம். வாழை இலை அல்லது பூவை கசக்கி பாதிக்கப்பட்ட இடத்தில் தடவ சரியாகும்.

காயங்கள், தோல்ப் புண்களுக்கு

தேங்காய் எண்ணெயை மஸ்லின் துணியில் நனைத்து புண்கள் மேல் போட்டு இவற்றின் மீது மெல்லிய வாழையிலையை கட்டுமாதிரிப் போட வேண்டும்.

சின்னஅம்மை, படுக்கைப்புண், உடலில் தீக்காயம்

பெரிய வாழை இலை முழுவதிலும் தேன் தடவி அதில் பாதிக்கப்பட்டவற்றைச் சில மணி நேரம் படுக்கவைக்க வேண்டும். இதைத் தொடர்ந்து செய்தால் குணமாகும்.

சோரியாசிஸ், தோல் அழற்சி கொப்புளங்கள்

பாதிக்கப்பட்ட இடங்களில் வாழை இலையைக் கட்டி விட வேண்டும்.

குடற்புழுக்கள், நீரிழிவு, அமிலச்சிறப்பு, தொழுநோய், இரத்தச்சோகை

வாழை வேரைத் தீயில் கொழுத்திச் சாம்பலை எடுத்துக் கால் தேக்கரண்டி சாம்பலைத் தேனில் குழைத்துச் சாப்பிட்டு வர மேற்சொன்னவை சரியாகும்.

அஜீரணம், மூலநோய்

பாலுடன் ஒரு வாழைப்பழம் சாப்பிட்டு வர அஜீரணம் சரியாகும். தொடர்ந்து 2-3 வேளை சாப்பிட்டு வந்தால் மூலநோய் தீரும்.

காசநோய்

அரை கப் தயிரில் வாழைப்பழத்தைப் பிசைந்து தினம் இருவேளை சாப்பிட வேண்டும்.

இருமல்

கருமிளகு கால் தேக்கரண்டி எடுத்து பொடி செய்து அதில் பழுத்த நேத்திரம் பழத்தை கலந்து இரண்டு மூன்று வேளை சாப்பிட்டு வர இருமல் குணமாகும்.

சிறுநீரக நோய்கள் மற்றும் இரத்தக் குறைபாடுகள்

நெல்லிச்சாறு அரைக்கரண்டியும் பழுத்த வாழைப்பழத்தை கலந்து 2-3 வேளை சாப்பிட்டு வர மேற்சொன்ன குறைபாடு நீங்கும்.

சின்ன அம்மை, தைபோய்ட், மஞ்சட்காமாலை

தேனில் வாழைப்பழத்தைப் பிசைந்து தினம் இருவேளை வீதம் சாப்பிட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (Nation Building Tax)

து. மிரேஸ்கர்
13 வர்த்தகம் (2010)

அரசாங்கம் நாட்டின் அபிவிருத்தி மக்கள் மேம்பாடு மற்றும் பாதுகாப்புத் தேவைகளுக்குரிய வருவாயை பெற்றுக்கொள்வதற்கு பெரும்பாலும் வசூல்களையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. எமது நாட்டில் விசேடமாக தொடர்ந்து நடந்து வரும் சிவில் யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவுகளிலிருந்து நாட்டை அபிவிருத்தி செய்வதற்காகவும் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்விற்காகவும் நாட்டைக்கட்டியெழுப்பும் வரி என்ற புதிய வரி சென்ற ஆண்டு வரவு செலவுத்திட்ட அறிக்கையின் போது ஜனாதிபதியினால் முன்மொழியப்பட்டு பின்னர் ஜனவரி 7ஆம் திகதி பாராளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட்டது. இதன் பிரகாரம் இந்நாட்டு மக்கள் இந்தப் புதிய வரிக்கு உட்பட்டு நடக்க வேண்டியவர்களாய் உள்ளனர். யார் யார் எப்படி இந்தப் புதிய வரிக்கு அமைவாக செயற்படுவது என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இந்த வரி கட்ட வேண்டியவர்கள் யார்?
01.02.2009 இல் இருந்து வியாபாரப் புரள்வு (Turn-over) அல்லது சேவைகளினால் கிடைக்கும் பணவரவுகள் (Receipt) ஒரு காலாண்டுக்கு ரூபா 650,000 க்கு மேற்படின் அதில் 1% வரியாக செலுத்த வேண்டும். (முதலாவது காலாண்டு பெப்ரவரி, மார்ச்சை மாத்திரம் உள்ளடக்கும்)

பின்வரும் தொழிற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் தனிநபர், பங்குடமை, கம்பனிகள் மற்றும் நிறுவனங்கள் இவ் வரியை செலுத்த வேண்டும்.

-இறக்குமதியாளர்
- உற்பத்தியாளர்
- சேவைவழங்குனர்

பதிவுசெய்தல்

* VAT வரிக்கு பதிவு செய்தவர்கள் யாவரும், இந்தவரியையும் செலுத்த வேண்டியிருப்பதால் மீண்டும் அவர்கள் பதிவு செய்யத்தேவையில்லை இறைவரித்திணைக்களத்தினால் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
* ஏனையவர்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் இறைவரித்திணைக்களத்தில் TIN நம்பர் பெற்ற பின்னர் NBT கிளையில் தம்மை பதிவு செய்து கொள்ளலாம்.

வரிகட்டும் முறை

இறக்குமதியாளர் : சுங்கவரியுடன் இந்த வரியும் சேர்த்துக் கட்டப்படுவதனால் மீண்டும் கட்டவேண்டிய தேவை இல்லை.

ஏனையவர்கள் : 1. மாதாந்தம் 20 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.
2. காலாண்டு முடிவில் 20ஆம் நாட்களுக்குள் காலாண்டு படிவத்துடன் செலுத்தப்படல் வேண்டும்.

இந்தப் புதிய NBT வரி, VAT வரியை ஒத்ததாய் தென்பட்ட போது சில பல வேறுபாடுகள் உள்ளன. அவையாவன.

| | | Vat | NBT |
|---|---|---|---|
| 1) | கழிவுகள் | | |
| | மேலதிகமாய் செலுத்திய வரியை முதற்கொண்டு செல்லல் | உண்டு | உண்டு |
| | உற்பத்தியாளர் செலுத்திய வரிக்கு கழிவு பெறல் | உண்டு | உண்டு |
| 2) | வரி மீளப் பெறல் (Refund) | இல்லை | இல்லை |
| 3) | வருமான வரிக்கழிவு பெறல் | இல்லை | இல்லை |
| 4) | வரிக்குட்பட்ட பொருட்கள் | | |
| | அரிசி கோதுமை தானிய மாவகை | இல்லை | ஆம் |
| | பால்மாவகை, பாண், முட்டை, மீன், இறைச்சி வகை | இல்லை | ஆம் |
| | சகல புத்தகங்கள், கொப்பிகள் | இல்லை | ஆம் |
| | தங்கம், வெள்ளி, மாணிக்கக்கற்கள் | இல்லை | ஆம் |
| | புதைகுழி, தகன நிலையங்கள் | இல்லை | ஆம் |
| | பீடி இலைகள், மலர்கள், தேயிலை | இல்லை | ஆம் |
| | உரவகைகள், பெற்றோலிய வகைகள், LP எரிவாயு | இல்லை | இல்லை |
| | ஏற்றுமதியாளர்கள் | இல்லை | இல்லை |
| 5) | வரி விலக்குக்குரியவை | | |
| | சகல மருத்துவர்கள், மருந்து வகைகள், மருந்து சேவைகள் | ஆம் | ஆம் |
| | நீர், மின்சாரம், காப்புறுதி | ஆம் | ஆம் |
| | பயணிகள் – பண்டங்களை ஏற்றிச் செல்லல், தரகர்கள், ஏலவிற்பனை, சினிமாக்கட்சிசாலை, கமிசன், ஏஜென்ட், வங்கிகள் லீசிங் கம்பனி நிதிநிறுவனங்கள் | ஆம் | ஆம் |

உரிய காலத்தில் இவ்வரி கட்டத்தவறுமிடத்து வரி விதிப்பு, தண்டம், வரி, அறவீடு முறைகள் யாவும் தற்போது நடைமுறையில் உள்ள வருமான வரிச்சட்டத்தின் பிரகாரம், இறைவரித் திணைக்களத்தினால் அமுல்ப்படுத்தப்படும் எனவே உரிய தவணைக்கு முன்னர் இவ்வரியினை செலுத்துவதன் மூலம் இந்த அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பற்றீரியா ஓர் அறிமுகம்

பா. சருபன்
10A

- பற்றீரியாக்கள் மிகவும் சிறியன 0.2 um - 10um விட்டமுடையது
- பற்றீரியாக்களில் பல்வேறு இனங்கள் காணப்பட்ட போதிலும் இவை அனைத்தும் பொதுவாக கல ஒழுங்கமைப்பைக் காண்பிக்கின்றன.
- பற்றீரியாக்கலத்தை இலத்திரனியல் நுணுக்குக் காட்டியினூடாக அவதானிக்கப்படும் போது எளிமையான கல ஒழுங்கமைப்பைக் காண்பிக்கின்றது.
- பற்றீரியாக்கலம் கோலுருவானதாகவும் அல்லது கோளவடிவானதாகும் அல்லது சுருளியுரு வானதாகவும் காணப்படலாம்.
- பற்றீரியாக்கலத்தை சூழ மியூரின் (Murein) என்னும் தனித்துவ சீதப்பெப்ரைட்டு (கிளைக்கோப் பெப்ரைட்டிலானான (Mucopeptide / Glycopeptide) உறுதியான கலச்சுவர் காணப்படுகின்றது. (Archaebocte) சயை க்களின் கலச்சுவர் வேறுபட்ட இரசாயன அமைப்புடையது. இதில் Murein காணப்படுவதில்லை.)
- கலச்சுவருக்கு வெளிப்புறமாக வில்லையம் / பாகுப்படை காணப்படலாம். வில்லையம் (Capsule) வன்மையானது. நெருக்கமான தடித்த உறைபோன்று காணப்படுகின்றது. பாகுப்படை மென்மையானது. கடற்பஞ்சு போன்ற தோற்றம் உடையது. பரவிக்காணப்படுகிறது.
- கலச்சுவருக்கு உடன் உட்புறமாக முதலுரு மென்சவ்வு காணப்படும். இது Eukaryotic கலங்களின் முதலுரு மென்சவ்வின் கட்டமைப்பை ஒத்த பாய்ம பல்வண்ண மாதிரி அமைப்புடையது.
- முதலுரு மென்சவ்விற்கு உட்புறமாக குழிய முதலுரு காணப்படும். இது கலம் முழுவதும் பரவிக்காணப்படும். ஓரின அமைப்புடையது.
- மென்சவ்வினால் எல்லைப்படுத்தப்பட்ட அமைப்பாங்குடைய கரு காணப்படுவதில்லை.
- பிறப்புரிமை பதார்த்தமாக வளைய DNA மூலக்கூறு காணப்படும்.
  இவற்றில் DNA மூலக்கூறுடன் Histone புரதம் சேர்ந்து காணப்படுவதில்லை.

இவ் வளைய DNA மூலக்கூறு பற்றிய நிற மூர்த்தம் Nucleoid எனவும் அழைக்கப்படுகின்றது.

## நல்லொழுக்கம்

ச. ஜனனபவித்ரா
தரம் : 04A

“ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்”

எனும் திருவள்ளுவரின் கூற்றிற்கிணங்க நல்ல ஒழுக்கத்தை மாணவர்களாகிய நாங்கள் கடைப்பிடித்து நம் நாட்டிற்கு நல்லதொரு பிரஜையாக வாழமுடியும். நாம் சிறுவயதிலிருந்தே நல்ல பழக்க வழக்கங்களை கடைப்பிடித்தால் அது நம் வாழ்வுக்கு சிறப்பூட்டும் வகையாக அமையும்.

நல்ல ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தால் எல்லோர் வாழ்விலும் சந்தோஷம் வசந்தமாக வீசும். நல்லொழுக்கமானது எம் உயிரை விட மேலானதாகப் போற்றப்படும். நல்லோரைப் பின்பற்றி வாழவேண்டும், பொய், கொலை, களவு, வஞ்சகம், சூது, வாது போன்றவற்றை எம்மிடத்தே இல்லாது ஒழிக்க வேண்டும். எல்லோரிடமும் அன்பாகப் பேசப்பழகவேண்டும். அத்துடன் பெற்றோரையும், முதியோரையும்,ஆசிரியர்களையும் தினந்தோறும், கனம் பண்ண வேண்டும்.

மேலும் தீயபழக்க வழக்கங்களைக் கைவிட்டு நல்ல பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். அத்துடன் நல் ஒழுக்கம் எனும் போது எமது சுத்தமும் உள்ளடங்கும். நாங்கள் எங்களுடைய நகங்களை கட்டையாக வெட்டி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். தினந்தோறும் குளிக்கவும், மலசலம் போன பின் கை, கால்களை சவற்காரமிட்டு சுத்தமாகக் கழுவவும் வேண்டும். அப்போதுதான் நாம் உடலாரோக்கியத்தை பெற்று நீண்ட ஆயுட்காலம் வரை வாழலாம்.

அத்துடன் நல்லொழுக்கங்களைக் கடைப்பிடித்தால் எல்லோர் முன்னும் நல்லதொரு பிரஜையாக வாழமுடியும். அப்போதுதான் இன்றைய இளைஞர்கள், நாளைய தலைவர்களாக ஓங்கி நிற்பார்கள் எனவே நல்லதொரு பிரஜையாக வாழ்ந்து உயர்ந்திடுவோமாக.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்வன திருந்தச் செய்

F. பஸ்லுல் ஹக்
தரம் 5A

'செய்வன திருந்தச் செய்' என்பது ஔவையார் வாக்காகும். சிறப்படைபவன் மனிதன் ஆவான். அவனுக்கு உண்டாகும் நன்மை, தீமைகள் எல்லாம் அவனது செயலால் வருபவை ஆகும்.

செய்யும் செயல் செம்மையாக இருந்தால் அதனுடைய பயனும் சிறப்புடையதாக இருக்கும். இவ்வாறு அமையும் போதுதான் வாழ்வும் சீரானதாக அமையும்.

சிறுவர்களாகிய நாம் எழுதும் போது எழுத்துக்களை உறுப்பமைய முறையாக எழுதிப் பழகுதல் வேண்டும்.

'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்'' என்பது பழமொழி. இளமையில் பழகும் பழக்கம் இறுதிக் காலம் வரை மாறாது. எனவே எதையும் திருத்தமாகச் செய்து பழகுதல் அவசியமாகும்.

எழுதுவதில் மட்டுமன்றி எழுத்துக்களை உச்சரிப்பதிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும். சொற்களைச் சொல்லும் போது சரியாகவும், திருத்தமாகவும் சொல்லிப் பழகுதல் வேண்டும்.

நமது செயல்கள் ஒவ்வொன்றும் ஒழுங்கு முறையானதாக இருத்தல் வேண்டும். உணவு உண்பது முதல் உடை அணிவது வரை அனைத்திலும் ஒழுங்கு பேணப்படல் வேண்டும்.

சிற்பியின் கைப்படும் கருங்கல் கூட அழகான சிலை வடிவம் பெறுகிறது. அதற்குக் காரணம் அவனது ஒழுங்கு முறையான செயல் திறனேயாகும். அறிவின் வளர்ச்சியால் முறையான பயிற்சியால், அனுபவ அறிவால் அமைவதே திருத்தமான செயலாகும்.

மாணவர்களாகிய நாம் இவற்றைக் கருத்திற் கொள்ள வேண்டும். செய்யும் செயல் எல்லாம் திருத்தமானதாக அமைதல் வேண்டும். 'செய்வன திருந்தச் செய்வோம்' என்ற இலட்சியத்துடன் செயற்படுவோமாக.

## வெற்றிக்கு இல்லை எல்லை

ஏ. எஸ். சல்மானுல் சப்ரி
12 வர்த்தகம் (2011)

பாரினில் உயர்வுக்காக - தினம்
பணிவுடன் பயில்தல் வேண்டும்
காரிருள் அகத்தில் நீங்க - நல்
கனிவுடன் கருணை வேண்டும்

செய்வதில் தெளிவு வேண்டும் - உன்
சிந்தையில் உறுதி வேண்டும் - உனை
நிந்தனை செய்வார் தன்னை - நிதம்
பொறுத்திடும் உள்ளம் வேண்டும்

தோல்விகள் உன்னை வாட்டும் - தீய
சோம்பலும் நிலையை மாற்றும்
தொடர்ந்து நீ முயற்சி செய்தால்
சொல்லாமல் அவைகள் ஓடும்

விதி இது என்று சொல்வர் - தீய
செய்வினை என்றும் கொள்வர்
மதிதனை இழந்து நின்று
மாதவன் குற்றம் என்பர்

முயன்றிடு சின்னத் தம்பி - உன்
முயற்சியில் இருக்குது வெற்றி
துணிந்திடு இன்றே நன்றே - நல்
வெற்றிக்கு இல்லை எல்லை.

## கடைப்பிடியுங்கள்

ச. சுபாஷ்
தரம் - 10C

பேச்சுக்களில்......
நிதானத்தை கடைப்பிடியுங்கள்!

பார்வைகளில்......
தாழ்மையைக் கடைப்பிடியுங்கள்!

கேள்விகளில்......
மெதுமையைக் கடைப்பிடியுங்கள்!

உங்களில்......
சமாதானத்தைக் கடைப்பிடியுங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வித்தியாலய
சாரண அணியினர்
(18வது திருமலை அணி)



வித்தியாலய
பெண்கள் சாரணீயம்



வித்தியாலய
குருளைச் சாரண அணியினர்
(18வது திருமலை அணி)



சென் ஜோன்ஸ்
அம்பியூலன்ஸ் அணியினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்பறை முகாமை
## (Class Room Management)

திருமதி. ந. குணசேகரம்
(பகுதித்தலைவர்)

பாடசாலை நிர்வாகத்தில் வகுப்பறை முகாமை மிக முக்கியமானது ஆகும். சிறந்த வகுப்பறை முகாமை பாடசாலைகளில் பிரச்சினைகள் எழுவதைத் தவிர்க்கும். பாடசாலைகளில் முறையான வகுப்பறை இன்மையால் பல பிரச்சினைகள் தோன்றுவதுடன் பாடசாலையின் வளர்ச்சியும் பாதிக்கப்படுகின்றது. ஆகையால் பாடசாலையின் சகல வகுப்பறைகளும் சிறப்பானமுறையில் நிர்வகிக்கப்படுவது பாடசாலையின் பூரணவளர்ச்சிக்கு வழிகோலும்.

கல்வியின் தரம் உயரவும், கல்வி ஏற்பாடு ஆக்கம் பெறவும் அசிரியர் பங்களிப்பு அவசியமானது. ஆசிரியருடைய ஆளுமைத்திறன்கள், கல்விப்பணிகள், பாடசாலைச் சமூகத்தில் அவர் வகிக்கும் மதிப்பு ஆகியன மிகவும் முக்கியமானவை. ஒரு பாடசாலையின் புகழும் அது சமூகத்தில் பெறக்கூடிய மதிப்பும் பெரும்பாலும் அங்கு பணிபுரியும் ஆசிரியரைச் சார்ந்தவை. சாதாரணமான ஒரு ஆசிரியரிலும் பார்க்க அதாவது ஒரு பாடஆசிரியரிலும் பார்க்க வகுப்பாசிரியரின் கடமைகள் சிக்கலானவையும் அதிமுக்கியத்துவம் வாய்ந்தவையும் ஆகும்.

ஒரு பாடசாலையில் எவ்வளவு வளங்கள் இருந்த போதிலும் அவை அனைத்தையும் ஒழுங்குபடுத்தி, நெறிப்படுத்தி இலக்கினை வெற்றிகரமாக அடைவதற்குச் சிறந்த முகாமைத்துவம் இன்றியமையாதது. சிறந்த முகாமைத்தும் இல்லாவிடின் எந்தப் பயனும் ஏற்படாது. ஆகையால் பாடசாலையின் உயர்வக்கு முகாமைத்துவத் திறன்விருத்தி அத்தியாவசியமானது. வகுப்பறை என்பது பாடசாலையின் சிறு கூறாகும். வகுப்பாசிரியர் தனது வரையறைகளுக்குள் ஓர் அதிபரைப் போன்று செயற்படுகின்றார். ஒரு பாடசாலையில் ஆற்றப்படவேண்டிய பணிகளில் பல வகுப்பறையிலும் ஆற்றப்பட வேண்டியனவாகும்.

வகுப்பாசிரியரின் பிரதான கடமைகளில் ஒன்று வகுப்புத் தலைவர் ஒருவரைத் தெரிவு செய்தலாகும். வகுப்பறை நிர்வாகத்தைச் சிறப்புற நடத்துவதற்கு உதவியாக ஒரு மாணவனைத் தெரிவு செய்யும்போது திறமையும், ஆர்வமும், சுறுசுறுப்பும், தலைமைத்துவப் பண்பும் கொண்ட ஒரு மாணவனை வகுப்பாசிரியர் வகுப்பிலும் ஏற்றுக் கொள்ளக்கூடியவராக இருப்பது மேலும் சிறப்பானதாகும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் மாணவனுக்குரிய கடமைகளையும் வகுப்பாசிரியர் தெளிவுற எடுத்துரைத்தல் வேண்டும்.

வகுப்பாசிரியர் நிறைவேற்றவேண்டிய பணிகள் பல பாடசாலை நிர்வாகத்திற்கு நேரடியாக உதவுவன. பாடப்பதிவுகள், அலகு முன்னேற்ற அட்டவணைகளை ஒழுங்காகப்பேணுதல், புள்ளிபதிவேடுகளை பேணுதல் என்பன முக்கியமானவை. வகுப்பாசிரியர் மாணவர்வரவு இடாப்புக்களைப் பேணுதல், அவற்றில் உள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்க வரவுகளைப் பதித்தல் போன்ற அடிப்படைக் கடமைகளில் தவறுவது பாடசாலை நிர்வாகத்திற்குப் பெரும்பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளன. ஆகையால் இவ்வாறான விடயங்களில் வகுப்பாசிரியர் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

வகுப்பறையை எப்பொழுதும் ஆக்கத்திறனும், தொழிற்பாடும் உடையதாக வைத்துக்கொள்வதும் வகுப்பாசிரியர் கடமையாகும். மாணவர் மூலமாக ஆகக்கூடிய சாதனையை ஏற்படுத்தவும் வகுப்பினை ஒரு முன்மாதிரியாக வைத்துக்கொள்ளவும் வகுப்பாசிரியர் ஊக்குவிக்கும் நுட்பங்களைக் கையாளுதல் வேண்டும். ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் தாம் கற்ற உளவியற் கோட்பாடுகள், கற்றற் கோட்பாடுகள் என்பவற்றை வகுப்பறையில் பிரயோகிக்க வகுப்பாசிரியர் முயலுதல் வேண்டும். அப்பொழுதுதான் கோட்பாடு செயல் வடிவம் பெற்று நற்பயனைத் தரும்.

வகுப்பாசிரியர் தனது வகுப்பு மாணவர்களைக் கொண்டு வெளிக்கள ஆய்வுகள், கல்விச்சுற்றுலாக்கள் என்பவற்றையும் ஒழுங்கு செய்யலாம். வகுப்பில் கற்பிக்கும் பாடங்களுடன் தொடர்புடையதாக இவற்றை ஒழுங்கு செய்யலாம். சூழலில் உள்ள தாவரங்கள் பண்டைய அழிபாடுகள், உற்பத்திச் சாலைகள் என்பன இவற்றுக்குச் சில உதாரணங்களாகும். மாணவர்கள் தம் அனுபவத்தின் மூலம் தம் அறிவைத் தெளிவாக்க வெளிக்கள ஆய்வுகள், சுற்றுலாக்கள் என்பன இன்றியமையாதன.

பரீட்சைப்புள்ளிகளை ஆராய்ந்து பின்தங்கிநிற்கும் மாணவர்களுக்குக் குறைநீக்கற் போதனையைப் பாட ஆசிரியர்கள், பகுதித்தலைவர்கள், பாட இணைப்பாளர் ஆகியோரது அனுசரணையுடன் ஒழுங்கு செய்வதும் வகுப்பாசிரியரின் கடமையாகும். ஏனெனில் வகுப்பில் உள்ள அத்தனை மாணவர்களது முன்னேற்றத்திற்கும் அவரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பாவார்.

மேலும் வகுப்பாசிரியர் சகல பாட ஆசிரியர்களுடனும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதுடன் வகுப்பறைக்கல்வி வளர்ச்சிக்கு அவர்களது கருத்துக்களையும், செயற்பாடுகளையும் பெறுவதில் எப்பொழுதும் அவதானமாக இருத்தல் வேண்டும். இத்தொடர்புகள் சமாந்தரத் தொடர்புகளாகவும், நிலைக்குத்துத் தொடர்புகளாகவும் இருக்கலாம்.

தமது வகுப்பு மாணவர்களது பெற்றோரைப் பாடசாலையுடன் இணைத்தலும் அவர்களது உதவிகளைப் பாடசாலைக்குப் பெற்றுக்கொடுக்கப் பகுதித்தலைவர், அதிபர் ஆகியோருடன் கலந்தாலோசித்துச் செயற்படுவதும் வகுப்பாசிரியரது கடமையாகும்.

மதிய உணவு வழங்குவதில் பாடசாலை நிர்வாகத்திற்கு உதவுதல், வசதிகள் சேவைக்கட்டணங்களை மாணவர்களிடம் அறவிட்டுப் பாடசாலை நிர்வாகத்திடம் ஒப்படைத்தல், துணைப்பாடவிதான நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்து மாணவர்கள் அவற்றில் பங்குகொள்ள ஊக்கமளித்தல் போன்ற கடமைகளையும் வகுப்பாசிரியர் மேற்கொள்ள வேண்டும்.

மேலும் வகுப்பாசிரியர் தமது வகுப்பு முன்னேற்றத்திற்கு உதவக்கூடிய பயனுள்ள திட்டங்களை அல்லது கண்டுபிடிப்புக்களைச் செய்யக்கூடிய செயற்பாட்டு ஆய்வாளராகத் தம் வகுப்பறையில் பணியாற்றவேண்டும். உதாரணமாக மாணவர்களது ஆக்கத்திறனை வளர்ப்பதற்கு வகுப்புச்சஞ்சிகைகள், கையெழுத்து ஆக்கங்கள், போன்றவற்றை வெளியிட மாணவர்களுக்கு வழிகாட்டி ஊக்குவிக்கலாம். பாடங்களில் போட்டிகளை ஒழுங்கு செய்யலாம். பாடசாலையில் கிடைக்கக்கூடியதும், பாடசாலைச் சூழலில் கிடைக்கக் கூடியதுமான வளங்களைப் பயன்படுத்தித் தம் வகுப்பறையின் சாதனைமட்டத்தை உயர்த்துவதற்கு எவ்வெவ் வழிகளைக் கையாள முடியுமோ அவற்றையெல்லாம் கையாளுவது வகுப்பாசிரியரது சாதுரியமாகும். பாடசாலையின் முகாமைத்துவக்குழு வகுப்பாசிரியர்களது கடமைகளைத் தெளிவுபடுத்தல் வேண்டும். அத்துடன் ஆசிரியர்களது கடமைகளில் இருந்து வகுப்பாசிரியர்களது கடமைகளை வேறுபடுத்திக் காட்டுதலும் அவசியம். பல வகுப்பாசிரியர்கள் சாதாரண ஆசிரியர்களது கடமைகளை நிறைவேற்றுவதுடன் நின்றுவிடும் நிலைமை பாடசாலைகளில் அவதானிக்கப்பட்டுள்ளது. இது பாடசாலையின் முன்னேற்றத்திற்கும் முகாமைத்துவத்திற்கும் தடையாகும். வகுப்பாசிரியர்களுக்கெனத் தனியான கூட்டங்களை ஒழுங்குசெய்வதும் அவர்களது பிரச்சினைகளைத் தீர்க்க வழிகளைத் தேடுவதும் அவர்கள் கடமைகளை மேற்பார்வை செய்வதும் மின்னூட்டல்களைப் பெறுவதும் ஊக்குவிப்பு நுட்பங்களைக் கையாள்வதும் பாடசாலை முகாமைத்துவக் குழுவின் பணியாகும்.

கற்பித்தல் என்பது பாடவிடயத்தை மாணவருக்குச் சொல்லிக்கொடுப்பது மட்டுமன்று. பாடவிடயத்தில் பாண்டித்தியம் பெற்ற பட்டதாரியாயினும் ஆசிரியர் அறிவை மாணவர்களுக்குப் புரியுமாறும், அவர்கள் ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் கற்குமாறும் கற்பிக்கும் ஆசிரியரே சிறந்த ஆசிரியராவார். அவர் முதலில் தனது பாடத்தில் சிறந்த தேர்ச்சியுடையவராகவும், அதில் நாட்டமும், கவர்ச்சியும் கொண்டவராகவும் இருந்தாலே அவர் பாடஅலகுகளையும், பயிற்சிகளையும் கொண்டு மாணவர்கள் அப்பாடத்தில் முழுமையான அறிவு பெறுமாறு கற்பிக்க முடியும். ஆசிரியர் தனது தொழிலில் விருப்பம் உடையவராகவும், தான் கற்பிக்கும் பாடங்களில் ஆக்க மனப்பான்மை கொண்டவராகவும், தனது சிரேஸ்ட வாண்மையுள்ள ஆசிரியர்களின் புத்திமதிகளை ஏற்று தனது வேலையை திருத்தமாகச் செய்தல். கற்பித்தலில் நிறைவைக் காணலாம். ஆசிரியர் தொழிலில் பொறுப்புணர்ச்சியும், மாணவர்களின் முன்னேற்றத்தில் கரிசனையோடு மாணவரிடம் கல்வியின் விருப்பை உண்டுபண்ணும் ஆசிரியரே சிறந்த முகாமைத்துவம் உடையவராவார்.

நல்ல ஆளுமைப் பண்புகளைக்கொண்டு மாணவர்களுக்கு முன்மாதிரியாகவும் உறுதியான மனவெழுச்சியுடையவராகவும், பிறரின் நலன்களைப் பேணுபவராகவும் இருப்பாரேயானால் மாணவர்களும் அவரைப் பின்பற்றுவர். மேலும் அவர் பொறுமை, அடக்கம், நேர்மை, நல்லொழுக்கம் ஆகிய பண்புகளைக் கடைப்பிடித்து மாணவர்கள் முன் தூய உடை அணிந்து சுத்தமாகவும், உற்சாகமாகவும் வகுப்பறையில் காட்சியளிப்பது அவசியமாகும். மாணவரில் எப்போதும் குறைகாணாது வெகுமதி, புகழ்ச்சி, உற்சாகப்படுத்தல் மூலம் மாணவர்களை ஊக்குவித்து அவர்களை ஆக்க பூர்வமான முறையில் முன்னேற்ற ஆசிரியர் வழிகாட்டவேண்டும். வகுப்பறையில் ஆசிரியர் ஒரு தலைவராகவும், மாணவர் மத்தியில் நீதியாளராகவும், கற்பிப்பதில் நல்லாசிரியராகவும், ஒழுங்கை நிலைநாட்டுவதில் நகர்காவலராகவும், சமயநெறிகளையும் நற்பண்புகளையும் கொண்ட சமயத்தலைவராகவும், அன்பையும் ஆதரவையும் வழங்குவதில் பெற்றோர் ஆகவும், புத்திமதி வழங்குவதில் நல்ல நண்பனாகவும் வழிகாட்டியாகவும் ஆசிரியர் வகுப்பறையில் நடந்துகொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைக்கு வழிகாட்டும் முதுமொழிகள்

தே. விமலேஸ்வரி
தரம் 13 கலை (2010)

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து மனிதனைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும் என்றால் புதை பொருள், கல்வெட்டு, நாடோடிப்பாடல், பழமொழி, விடுகதை முதலியன ஆதாரங்களாக அமைகின்றன. இவ்வகையில் சிறந்து விளங்குவது பழமொழியாகும். இது நாட்டுப்புற வியலார் கண்ட உண்மையாகும்.

புதைபொருள், கல்வெட்டு உயிர் இல்லாதவை. பேசாதவை ஆனால் பழமொழிகள் உயிர்த்துடிப்புடையவை. ஒளியுடையவை, நன்றாக விளக்கம் தருபவை. நம்பத் தகுந்தவை, பழங்கால மக்களின் பழக்கவழக்கங்களை அப்படியே நம் மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்தக் கூடிய ஆற்றல் பெற்றவை. இதனைத்தான்

"வையகம் ஒழியும் வானகம் ஒழியும்
வல்லார் வசனம் ஒழியாது"

என ஒரு பழமொழி எடுத்துரைக்கின்றது. இப் பழமொழிகளின் நம்பகத் தன்மையை வெளிப்படுத்த மேலும் பழ மொழிகளும் எழுந்துள்ளன. அதாவது "பழமொழி பொய்த்தால் பழம்சோறு சுடும்" எனவும் "வானம் இடிந்து விழுவதில்லை பழமொழியும் பொய்ப்பதில்லை" என ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த முதுமொழி கூறுகிறது. மேலும் "பழமொழி அனைத்தும் வாய்மை மொழிகளே" இவ்வாறு பல பழமொழிகள் பழமொழியை சிறப்பித்து நிற்கின்றன.

இப்படிப்பட்ட தமிழுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியரும் சிறப்பிக்க மறக்கவில்லை "இலக்கியம் கண்டதிக்கு, இலக்கணம் மறவு" என்பது ஒரு முதுமொழி. அந்த முறையில் தொல்காப்பியரும் தமிழகத்தில் வழக்கில் இருந்து வந்த பழஞ்சொற்களைக் கண்டு அவை குறித்து தம் நூலிலே இலக்கணம் வகுத்துள்ளார். தொல்காப்பியர் பழமொழிக்கு கொடுக்கும் விளக்கம் "நுண்மை, பண்பு" என்பதாகும் நுண்மை என்பதற்கு கூர்மை அல்லது நுட்பம் என்றும் பொருளை உணர்த்துவதாக பொருள் கொள்ளலாம். அதாவது பழமொழி கூர்மையாக அமைந்து நின்று நுட்பமாகத்தான் சொல்ல வேண்டும் இதனை மேலும் விளக்குவதென்றால்

ஒருவனுக்கு புத்திமதி கூறவேண்டும் என வைத்துக் கொள்வோம். நாம் அறிவுரை கூறுகிறோம் என்று அவன் தெரிந்து கொள்ளாத வகையிலே நம்முடைய புத்திமதியைக் கூறவேண்டும். அப்போதுதான் எதிர்பார்த்த பலனை அடைய முடியும். உதாரணமாக ஒரு முரடனை எடுத்துக் கொண்டால் அம் முரடன் நாம் சொல்லும் நல்லதை ஏற்று தன் மனதைமாற்றிக் கொள்ளவில்லை அப்போது நாம் "நாய்வாலை நிமிர்த்த முடியுமா" என மறைமுகமாகச் சொல்லும் போது அவன் அறிந்து கொண்டு திருந்தவேண்டும். இதனையே தொல்காப்பியர் நுண்மை என குறிப்பிடுகின்றார்.

தமிழில் "தந்தைபோலப் பிள்ளை" என்ற பழமொழியை தொல்காப்பியர் தம் நூலிலே

"தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதால்
அத்தமிழ் சிறப்பில் மகப்பழித்து நெருங்குதலும்'
என எடுத்துக் காட்டியுள்ளார்.

திருவள்ளுவர் தனது பொதுமறை நூலான திருக்குறளில் பழமொழியை அடியொட்டி திருக்குறளை அமைத்து செல்கின்றார் "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பதினைப்போல் வள்ளுவரும் பல குறள்களில் எடுத்துக் கூறுகின்றார். "இறைக்கின்ற கிணறு சுரக்கும்" "தொட்டணைத்தூறும் மணற்கேணி", எனும் வரிகளின் மூலம் எடுத்தியம்புகின்றார்.

எட்டுத்தொகை நூலான நற்றிணையிலும் பழமொழி கையாளப்பட்டுள்ளது. அதாவது "வெறும் வாயை மெல்லுகின்ற கிழவிக்கு அவல் கிடைத்தாற் போல்" எனக் கூறும் இப்பழமொழியை சீத்தலைச் சாத்தனார்

"அலாவாய்ப் பெண்டிர் ஆம்பலொடு ஒன்றிப்
புரையில் தீமொழி பயிற்றி உரை எடுத்து"
எனக் கையாளுகின்றார்.

ஐங்குறு நூறிலே வரும் செய்யுள் பல பழமொழியை அடியொட்டி வருவதைக் காணலாம். அதாவது "தாய்க்கு எமன் நண்டுக் குஞ்சுகள்" என்பதும் 'தன் குஞ்சினையே தின்னும் முதலை' என்னும் பழமொழியை ஓரம்போகியார் புலவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வனோடு
பிள்ளை தின்னும் முதலை"

மேலும் அகநானூற்றில் நெட்டையார் என்ற புலவர் "இருதலைக் கொள்ளி எறும்பு போல" என்ற முதுமொழியை பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"இருதலைக் கொள்ளி இடைநின்று வருந்தி
ஒரு தலைப்படா அ உவிபோன்றனம்"
என்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பல புலவர்களும் பழமொழியை தமது இலக்கியங்களிலே பல வழிகளிலும் கையாண்டு உள்ளார்கள்.

மேலும் மனிதனின் ஒவ்வொரு சமூகச் செயற்பாட்டை பற்றியும் இந்த பழமொழி எடுத்துக் கூறுகின்றது. பருவ மழை பெய்தல் கூறும்போது "தும்பி பறந்தால் தூரத்தில் மழை" "தட்டான் பறந்தால் கிட்டத்தில் மழை" "காலை செல் பூத்தால் அடுத்த மழையடங்கும்" என பருவமழைபற்றி பழமொழிகள் எடுத்துக் கூறுவதோடு மனிதனுக்கு சொல்ல வேண்டிய அறிவுரைகள் மிருகங்களை மையமாகக் கொண்டு எடுத்தியம்புகின்றது. அதாவது "ஈநுழையா இடமில்லை" எனவும் "அணில் வாயால் கெடும்" என்றும் "ஆந்தை சிறிது கீச்சி பெரிது" எனப்பல முதுமொழிகள் எம்மிடையே காணப்படுகின்றன.

இவற்றை விட தெரிந்த ஒன்றை வைத்துக் கொண்டு தெரியாத ஒன்றை விளக்கல் என்பது பழமொழிகளில் சிறப்பாக கையாளப்பட்டுள்ளது. இதனை உவமை எனவும் கூறலாம் அதாவது "அரிசி அள்ளிய காகம் போல" என்றும் "இஞ்சி தின்ற குரங்குபோல" என பல முதுமொழிகளில் உவமைகள் கையாளப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும்.

மனிதனின் அங்க அசைவினை வைத்துக் கொண்டு பல முதுமொழிகள் எழுந்துள்ளன. அவை ஒவ்வொன்றும் உண்மையை பற்றியே எடுத்தியம்புகின்றன. அதாவது உளவியல் நுட்பங்களை கூறுவனவாக காணப்படுகின்றது. அந்த வகையில் "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" எனவும் "குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்" எனவும் "கள்ள மனம் துள்ளும்" "மனம் இருந்தால் மார்க்கமுண்டு" எனவும் பல பழ மொழிகள் பறைசாற்றி நிற்கின்றன.

இப்பழமொழிகள் கல்வியை சிறப்பிக்கவும் தவறவில்லை. அதாவது கல்வியின் பெருமை பற்றி பல பழமொழிகள் எடுத்தியம்புகின்றது. "நானிலம் தன்னில் நாயகம் கல்வி" எனவும் "கல்வியழகே அழகு" என்றும் "எழுத்து இல்லாதவன் கருத்து இல்லாதவன்" "கண்டது கற்க பண்டிதன் ஆவான்" எனப் பழ மொழிகள் கல்வியின் சிறப்பை எடுத்தியம்புகின்றது. கல்வியை எடுத்துக் கூறிய முதுமொழிகள் கல்வியை கற்றுத் தந்தவனையும் சிறப்பிக்காமல் இல்லை அதாவது "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" "குருமொழி தெய்வமொழி" "குணம் கொடுப்பவன் குரு" "குருவாய் மொழியே திருவாய் மொழி" என எண்ணிலடங்கா முது மொழிகள் ஆசானை சிறப்பிக்கின்றன.

இவற்றோடு மனிதவாழ்வில் என்றும் ஒன்றி இருக்க வேண்டியது மகிழ்ச்சி அம்மகிழ்ச்சி பற்றி கூறுகையில்

"அரைப்படி அன்னதானம் விடிய விடிய செய்தானாம்"
என்றும்
"கடல் வற்றினால் கருவாடு தின்னலாம் என்று வயிறு பற்றி செத்ததாம் கொக்கு"
"இடாள், தொடாள், மகள் மீது உயிராம்"
என்றவாறு நகைச்சுவை மனித வாழ்வோடு ஒன்றிச் செல்கின்றது.

ஆகவே இம் முதுமொழி ஒவ்வொன்றும் பொன்மொழிகள் மனித வாழ்வை புதுப்பிக்க வந்த திருமொழிகள். இதில் உள்ள ஒவ்வொரு கருத்தையும் உள்ளார்ந்து உணர்ந்து அதன் வழி ஒழுகி வாழ்வில் உயருவோமாக.

## Learn

*S. Sivaroobini*
*11B*

Learn to think;
It develops your knowledge.
Learn to behave,
It develops your personality.
Learn to smile,
It expands your life time.
Learn to be patient,
It gives all success.
Learn to obey,
It reacts later.
Learn to work society
It makes you popular.

## Proverbs

- Live or let live.
- Do or Die.
- Forgive and Forget.
- Give and take policy.
- One flower can't make a garland.
- Set a thief to catch the thief.
- Luck never made a man wise.
- Death keeps no calender.
- Haste makes waste.
- East or west home is best.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடைபோல் காட்சியளிக்கும் காளான்

ச. சுதன்
13 கலைப்பிரிவு (2010)

ஆங்கில மொழியில் மஷ்ரும் என அழைக்கப்படுவதையே நாம் தமிழில் காளான் அல்லது நாய்குடை என்கிறோம். காளான்கள் கழிவுகளிலும் சிதைவடையும் பொருட்களிலும் உருவாகும். ஒரு வகை பங்கஸ் இனமாகும். காளான் தாவரப் பரிணாமத்தின் ஆரம்ப காலத்திலேயே தோன்றியதாக கருதப்படுகின்றது. இது புவியில் வாழும் சகல மிருகங்களுக்கும் மிகவும் விருப்பமான உணவாகும். காளானின் வாழ்க்கைச் சக்கரத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் மனிதனுக்கு உணவாகவும், நோய் தீர்க்கும் மருந்தாகவும் அரிய பல நன்மைகளை பெற்று கொடுத்துள்ளது. சூழலில் உள்ள சகல தாவரங்களும் தமக்கு தேவையான உணவை தாமே உற்பத்தி செய்து கொள்ளும். ஆனால் காளான்கள் வேறுபட்டுக் காணப்படுகின்றன. காளாண்களுக்கு அவ்வாறு சுய போசனையை உருவாக்கும் திறன் கிடையாது.

உலகில் பல்வேறு நாடுகளில் காளான் பற்றிய கதைகள் பல உள்ளன. அவற்றில் கிரேக்க நாட்டு கதை மிகவும் பிரபலமானது. முன்னொரு காலத்தில் பர்சியன் எனும் பெயர் கொண்ட வீரன் ஒருவன் கிரேக்கத்தில் வசித்து வந்தான். ஒரு நாள் அவன் நீண்ட பயணம் செல்வதற்காக புறப்பட்டுச் சென்றான். நீண்ட பயணத்தின் நடுவே பர்சியன் என்ற அந்த வீரனுக்கு பெரும் தாகம் ஏற்பட்டது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை ஒரு துளி நீரும் கிடைக்கவில்லை. பர்சியன் மிகவும் துன்பம் அடைந்தான். தாகத்தில் தவித்தான். இச்சந்தர்ப்பத்தில் அருகில் இருந்த பெரிய காளான் ஒன்று அவனது கண்களில்ப்பட்டது. அவன் எதுவும் சிந்திக்காமல் மறு கணம் அக்காளானைப் பிடுங்கி அதன் சாற்றை உறிஞ்சிக் குடித்தான். அவனது தாகம் தனிந்ததுமல்லாமல் அவனது உடலில் ஒரு தெம்பு ஏற்பட்டது. அவனுக்கு இந்தக் காளான் கிடைத்த இடத்தை மறக்கமுடியவில்லை. அந்த இடத்திற்கு மைசினே எனும் பெயரைச் சூட்டினான். அன்று முதல் காளானுக்கு "மைகஸ்" எனும் கிரேக்க பெயரும் சேர்ந்து கொண்டது.

காளான் சுவை தரும் உணவு மாத்திரமல்ல போசணை மிகுந்த உணவுமாகும். இந்த சுவை மிகுந்த உணவு இன்று உலக மக்களில் பெரும்பான்மையோர் சுவைத்து உண்ணும் உணவாக மாறியுள்ளது. புரதம், காபோவைதரேற்று, கொழுப்பு முதலிய போசாக்கு மிகுந்ததுதான் காளான் கறியாகவோ "சூப்" செய்தோ அல்லது வெவ்வேறு வகையான உணவு பொருளாகவோ தயாரித்து உண்ணலாம்.

காளான் அனைவருக்கும் ஒரே விதமாக ஒத்துப் போகும் ஒரு உணவல்ல அது சிலருக்கு வாந்தியையும் சிலருக்கு வயிற்றோட்டத்தையும் ஏற்படுத்தும். அது மாத்திரம் அல்ல சில காளான்கள் அதிகமாக உண்டால் உடலுக்கு தீங்கு ஏற்படும். இதனால் வைத்தியர்களின் கருத்துப்படி காளானை உணவில் சேர்த்துக் கொள்ளும் பொழுது மிக சிறிய அளவே உண்ண வேண்டும். சில காளான் வகைகளை பச்சையாக உண்பது சிறந்தது. வேறு சில காளான்களை நன்றாகக் கழுவி சமைத்து உண்பதன் மூலம் அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் குறைவடையும். சில காளான் வகைகள் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் பயனில்லை. அவை உடலுக்கு தீங்கு விளைவிக்கும் மதுபானத்துடன் அல்லது மதுசாரம் கலந்த செடி வகைகளுடன் காளானை உட்கொண்டால் உடலுக்கு தீங்கு ஏற்படும் நோய்களையும் ஏற்படுத்தும். சில வகையான காளான்களை உட்கொள்வதால் பெரும் தீங்கு ஏற்பட வாய்ப்புண்டு.

காளானை உணவாக பயன்படுத்தும் போது கவனத்திற்கு எடுக்க வேண்டிய பல முக்கிய விடயங்கள் இருக்கின்றன. சில காளான்கள் வளர்ச்சியடையாத பிஞ்சான காலத்திலும் புதியதாக இருக்கும் பொழுதும் உணவாக உட்கொள்ள தகுதியுள்ளதாகக் காணப்படும். ஆனால் அதே காளான் முற்றிய பின்னர் நாள் சென்றாலே விஷமாக கூடிய அல்லது நஞ்சாகிவிடும் தன்மையுடையது. இதனால் காளான் வகைகளை உணவிற்காக பயன்படுத்தும் போது அதிக கவனம் செலுத்த வேண்டும். நாம் வழமையாக உணவாகப் பயன்படுத்தி பழக்கப்பட்ட காளான்களையும் வர்த்தக நிலையங்களில் விற்கப்படும் காளான்களையும் தவிர ஏனைய காளான்களை உண்ணக் கூடாது என்பது மிக முக்கியமானது. காளான்கள் சிறு பிள்ளைகளுக்கும் நோயாளிகளுக்கும் நஞ்சாகி பாதிப்பை ஏற்படுத்தும் வாய்ப்புக்கள் மிக அதிகமாகும்.

காளான்கள் இரு வகைப்படும். அவை வட்டமடிப்பு மற்றும் மொல்வா எனப்படும். வைக்கோல் காளான்களில் மொல்வா மாத்திரமே இருக்கிறது. அதனால் அது உண்பதற்கு சிறந்தது. பல்வேறு நிறங்களில் உள்ள காளான்கள் அதிக வாசனை நிறைந்த காளான்கள். துர்நாற்றம் வீசும் காளான்கள். பழுப்பு நிறம் அல்லது அழுக்கடைந்த வெள்ளை நிறம், மஞ்சள் நிறம் போன்ற நிறங்களில் அதாவது ஒன்றுக்கு மாற்றமடைந்த காளான்களை உண்பதற்கு உகந்தவை அல்ல. இவைகளை ஒரு போதும் உண்ணக் கூடாது. இத்தகையவை உண்பதற்கு தகுந்ததல்ல என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும்.

வைக்கோல் காளான்களில் புற்றுநோயை ஒழிக்கும் இரசாயன குணாம்சம் காணப்படுவதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அது போலவே கிரிபின், எக்ரெண்ட் ஆகிய இரு விஞ்ஞானிகள் 1966 இல் மேற்கொண்ட ஆய்வுகளின் படி "லின்ட்" எனும் காளான் வகையில் புற்று நோயை அழிக்கும் இரசாயன நாசினி அடங்கியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Kinniya Bridge

**A. Sankeenthan**
Gr 9A

Kinniya is one of the eleven divisions of Trincomalee District. It is located in southern part of the District, about 16 km away from Trincomalee Town. Trincomalee District is the one of the three districts in the eastern province.

It is in the North the division borders with the Thambalakamam Bag in the west with the Thambalkammam Division, inthe South with the Kantale Division and inthe east Seruwila and Muthur divisions.

There are 31 Grama Niladhari Divisions and 99 Villages in Kinniya Division. The total population of the division was estimated at 75,507 people in 2005.

Currently, Kinniya can be accessed from the A6 (Colombo - Trincomalee) using the B541 via Thambalakammam or the A15 via Chinabay and futher vid a newly built bridge between Chinabay and Kinniya. This bridge is the longest bridge in Srilanka with the measure of 396m length. It was funded by the goverment Soudi Arabia and was opened on the 20th of October 2009 by the President of Srilanka his excellency Mahinda Rajapakshe.

## நலமாய் வாழ

ஆ. ஆதில்
தரம் 5B

நன்மை செய்யக் கற்றுக்கொள்
நலமாய் வாழக் கற்றுக்கொள்
உண்மை பேசக் கற்றுக்கொள்
உயர்வாய் வாழக் கற்றுக்கொள்
துயரைப் போக்கக் கற்றுக்கொள்
துணிந்து செயற்பட கற்றுக்கொள்
உழைத்து வாழக் கற்றுக்கொள்
உள்ளத் தூய்மையைக் கற்றுக்கொள்
இன்மொழி பேசக் கற்றுக்கொள்
இறை பக்தியை வளர்க்கக் கற்றுக்கொள்
வறுமை போக்கி வாழ்வினில்
வளமாய் வாழக் கற்றுக்கொள்
பண்பாய்ப் பழகக் கற்றுக்கொள்
அழியாய்க் கலைகளைக் கற்றுக்கொள்
ஐயம் திரிபுறக் கற்றுக்கொள்

## இலங்கையின் பிரதான இடங்கள்

றிஸ்ஸாலி முஹமட் இஹ்சான்
தரம் - 11A

1) புற்றுநோய் வைத்தியசாலை - மஹரகம
2) ஆயுள்வேத வைத்தியசாலை - நாவின்ன
3) பெற்றோலிய சுத்திகரிப்பு - சபுகஸ்கந்த
4) ஒட்டுப்பலகைத் தொழிற்சாலை - ஜின்தொட்ட
5) இரும்புருக்குத் தொழிற்சாலை - ஒருவல
6) சீமெந்துத் தொழிற்சாலை - புத்தளம், காலி, காங்கேயன்துறை
7) காகிதத் தொழிற்சாலை - வாழைச்சேனை எம்பிலிபிட்டிய
8) புடவைத் தொழிற்சாலை - பூ கொடை
9) பால் பதனிடல்த் தொழிற்சாலை - அம்பேவெல
10) சீனித் தொழிற்சாலை - கந்தளாய், ஹிங்குரான, செவனகல, பெல்வத்தை

**************************************

## அடியின் பெருமை

செ. மதன்
தரம் 11A

"அடி உதவுவது போல அண்ணன் தம்பி உதவ மாட்டார்கள்" என்று சொல்வது வழக்கம் "உதை" என்று குறிப்பிடும் அடியில் பொதிந்திருக்கும் கருத்து மிக உயர்ந்தது இந்த உத்தமமான உயர்ந்த செல்வத்தை அருளுகின்ற திருவடி இறைவனது பாதார விந்தங்களே! அப்பர் சுவாமிகள் திருவடிப் பெருமைகளைத் திருவடித் திருத்தாண்டவத்தில் உருகி உருகிப் பாடியிருக்கிறார்கள். அம்பாள் திருவடி மகிமைபற்றி மூதூர் "பாதார விந்தசதகம்" எனப் பாடியுள்ளார். கல்லைப் பெண்ணாக்கியதும் பதினான்கு வருடங்கள் பரதன் நாட்டை ஆண்டதும் திருவடிகளால் அல்லவோ சாத்தியமாயிற்று, மண்ணளந்து விண்ணளந்து மமதையையும் அடக்கியது திருவடிதானே. எனவேதான் யாரையும் நம்பவேண்டாம் திருவடியைப் பணிந்தால் பெறுகின்ற நன்மை பெரிது. உடன் பிறந்தோர் கூட இத்தகைய நன்மையைத் தரமாட்டார்கள் என்பதற்காகச் சொல்லப்பட்டதுதான் அந்தப் பழமொழி எனவே அடியின் பெருமையை உணர்ந்து செயற்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க. பொ. த உயர்தர பாடத் தெரிவும் Z புள்ளியும்

பா. சுதர்சினி
13 வர்த்தகம் (2010)

இலங்கையில் 2002 / 2003ம் கல்வியாண்டிற்கு முன்னர் க. பொ.தராதர (உ/தர)ப் பரீட்சையில் மொத்தப்புள்ளிகளின் அடிப்படையிலேயே மாணவர்கள் தரப்படுத்தப்பட்டு பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படும் முறை பின்பற்றப்பட்டு வந்தது. ஆனாலும் இம்முறை மூலம் பல குறைபாடுகள் உள்ளமை கண்டுபிடிக்கப் பட்டமையினால் Z அளவுத்திட்ட முறையே இன்றுவரை பயன்படுத்தப்பட்டு வருகின்றது. Z அளவுத் திட்டமுறை என்பது ஏற்கனவே மேலைத்தேய நாடுகளில் பின்பற்றப்படுகின்ற ஒரு முறையாகும்.

Z அளவுத் திட்ட முறை பயன்படுத்தப்பட்டு வருவதால் மொத்தப்புள்ளிகளின் அடிப்படையில் மாணவர்களைத் தரப்படுத்தும் முறையில் இருந்து வந்த பல குறைபாடுகள் நீக்கப்பட்டுள்ளன. Z அளவுத்திட்ட முறையை இலங்கைக்கு அறிமுகப்படுத்திய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கே முதல் நன்றிகள்.

மாணவர் பாடங்களிற்கு விடையளிக்கும் போது கடினத்தன்மை, இலகுத்தன்மை என்பவை மிகுந்த செல்வாக்குச் செலுத்தி நிற்கின்றன. இவ்விரு தன்மைகளும் பல்கலைக்கழக அனுமதியில் செல்வாக்குச் செலுத்துதலை இயன்றளவு குறைத்து விடுதலே Z அளவுத் திட்ட முறையின் நோக்கமாகும். அதாவது பாடங்களுக்கிடையே ஒரு சமச்சீரத்தன்மையை பேணுதலே இதன் நோக்கமாகும். Z அளவுத்திட்ட முறையானது கணித உயிரியல் வர்த்தகபிரிவு மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்வதற்கே முக்கிய பங்காற்றி வருகின்றது.

இனி நாம் Z அளவுத்திட்டத்தினை எப்படிக் கணிப்பது என்பது பற்றி பார்ப்போம். சத்தியன், வித்தியன் எனும் இரு மாணவர்களில் சத்தியன் பொருளியல் பாடத்திற்கு 85 புள்ளியும் வித்தியன் பொருளியல் பாடத்திற்குப் பதிலாக அளவையியல் பாடத்திற்கு 85 புள்ளியையும் பெற்றிருந்தால் அவர்கள் இருவரினதும் தராதரங்கள் சம அளவானவை என்று கருதிவிடமுடியாது. ஏனெனில் அவர்கள் விடை எழுதிய வினாத்தாள்களின் கடினத்தன்மை நிச்சயமாக ஒரே அளவானதாக இருந்திருக்க மாட்டாது. இதில் வினாத்தாள்களின் கடினத்தன்மையாக பாடத்திற்கு 85 புள்ளிகளைப் பெற்ற மாணவனே உண்மையான திறமைசாலியாக இருப்பான். இதுவே Z அளவுத்திட்ட முறையின் முக்கிய நன்மையாகக் கருதப்படுகின்றது.

Z அளவுத்திட்டம் கணிக்கும் முறை

$$Z = \frac{Xi - \bar{X}}{SD}$$ எனும் சூத்திரத்தினால் கணிக்கப்படுகின்றது.

$\underline{Xi}$ - குறித்த ஒரு மாணவனின் குறித்த பாடத்திற்கான புள்ளி

$\bar{X}$ - குறித்த பாடத்திற்கான சராசரி

SD - குறித்த பாடத்திற்கான நியம விலகல்

நியம விலகல் SD ஆனது $SD = \frac{\Sigma (Xi - \bar{X})^2}{\Sigma Fi}$ இனால் கணித்து அறியப்படும்.

ஒரு மாணவன் குறித்த ஒரு பாடத்தில் அவரின் Z புள்ளி 1இலும் அதிகமாக இருப்பதற்கு குறித்த பாடத்திற்கான சராசரிப்புள்ளியானதும் குறித்த பாடத்திற்கான நியம விலைகளினதும் கூட்டுத்தொகையானது குறித்த பாடத்திற்கான புள்ளியிலும் குறைவாக இருத்தல் வேண்டும்.

# World without war

A. Thivya
9B

A world without war would be a wonderful place,
That world would be like olden days,
When every where you could see a smiling face,
All filled with peace and grace
But, will this war ever end?

A world without war is what I wish for,
I wish it would be like the dream I saw,
Where everyone was like the moon and sun,
And together, the world was one,
But, when will that dream comestrue?

A world without war, filled with peace,
Harmony between the land and seas,
That is the world we all would love,
The world that is representing the dove,
I hope that world will soon come.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Quotes

**Dilani Fernando**
Teacher (English)

Nepoleon believed in punctuality once he said "I may lose bettles, but no one will ever see me losing minutes" How ever, he was more than two hours late for his own wedding.

"Like the dew on the mountain
Like the foam on the river
Like the bubble on the fountain
Thou art gone and forever"
- Walter Scott -

"only by the labouring hands of our fore fathers have we arrived at our present civilization. Only the toil of the men in the fields do the men in the towns get food and clothing."
- Mahatma Gandhi-

" We must keep our certainly that after the bad days the good time will come again we need great courage"
- Madame curie-

" Goverment of the people by the people and for the people'
- Abraham Lincoin -

"Our nation's children are our greatest asset and most precious treasure"
- Christopher Dodd-

"The mother's heart is the children's school room"
- Henry Bucher-

Thou art the potter I'm the clay mould and make me as to they will.

It is rather essential to do something concrete before it is entirely lost and undone beyond all repairs.

A teaher can never truly teach unless he stilll learns himself.

A lamp can never truly teach unless it continues to burn. Its own flame. Patience is bitter, butits fruit is sweet.

"A gold heart goes for many a day. A sad heart tires in amile.
They that sow in tears shall reap in joy"
- The Holy Bible-

"Mercy is above the sceptred sway"
- Shakespeare-

"Forget the wearings ever and Firet and fly in to the world of the nightingale keats"

****************************************************************************

# ஔவையார்

வ. டீடிகா
தரம் 7B

- ஔவையார் பெயரை அறியாத சிறுவர்களோ பெரியோர்களோ இருக்கமாட்டார்கள். அவர் அருளிய நூல்களில் எதையேனும் படித்திருப்பார்கள். ஔவையார் தமிழ் நாட்டிலே வாழ்ந்த பெண் புலவர். அவரைப் பற்றி கதைகள் வழங்குகின்றன.

- சங்க இலக்கியங்களிலே ஔவையார் பாடிய பாடல்கள் பல உள்ளன. எனினும், அந்த ஔவையார் வேறு கம்பர் காலத்து ஔவையார் வேறு என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். எப்படியோவானாலும் ஔவையார் என்ற புகழ் பெற்றுவிட்டது.

- அதியமான் என்னும் வள்ளல் பெருந்தகை அளித்த நெல்லிக்கனியை ஔவையார் உண்டு நீண்ட காலம் வாழ்ந்தார் எனச் சொல்லப்படுகிறது.

- அவர் இயற்றிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, ஞானக்குரல், அசதிக்கோவை ஆகிய நூல்கள் தமிழுக்குப் பெருமை அளிக்கக்கூடியன.

- பெரிய நீதிநூல்களில் காணப்படும் கருத்துக்களை எல்லாம் வடித்து எடுத்து எளிமை ததும்ப அளித்துள்ளார்.

- ஔவையாரின் ஆத்திசூடியும் கொன்றைவேந்தனும் அகரத்தில் தொடங்கிச் சூத்திரம் போல் அமைந்துள்ளன. ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, அந்த நான்கும் மனப்பாடம் செய்வதற்கு மிகவும் ஏற்றவை.

- தமிழ் உள்ளவரை ஔவையாருடைய நூல்கள் யாவும் நிலையான பெருமையும், சிறப்பும் தரும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Power of Education

*A.J.M. Inzam*
*12 Com (2011)*

Education is the key to success.
Education is the gold mine,
That will never runs out of gold.
Education is the most powerful weapon,
which we can use to change the world
It is an on going process.
Each day of existence,
Adds to our knowledge
Wisdom and experience.
We live in world where degrees matter
So many dreams does this
harsh reality shelter
Education is not easily accessible
in the over populated world
Where even basic amenities are not available
The same education support
the system of examination

# Some Advise

**K. Ayisha**
10B

- Try and try one day you can fly.
- Nothing is impossible.
- Do or die
- School life is jolly after that don't worry.
- Wasted time never return.
- Respect friendship avoid at the duty time.
- Always be smiling.
- Loyalty faiths progress.
- Show pity to poor.
- Calmness fetches success

# Be a Good Teacher

**Mrs.Manazira M. Hassan**
Teacher (English)

A teacher is an important person in a society. A community depends on teachers, because they are the backbones and real builders of the nations. Patience, tolerance, Kindness and confident are the best qualities for a teacher. According to the statements we have to analys what qualities are good teacher must have and must not have.

Be aware of .....................

- your needs and feelings.
- the superiority complex
- the adament argument
- Over expectation
- misunderstanding
- Comparative spirit
- narrow minedness
- worried fore - head and anxious eyes.
- too busy

A good teacher should have the best qualities .
They are .........................

- Be humble
- Be smart
- Be a brave and peaceful person
- Be a noble and sincere person among the students.
- Be a friendly and guiding light.
- Be a popular person with inner qualities
- Be a flexible person
- Know the students and accept them well.
- Integrate them - then you will be happy.
- Be a courtesy and forgiving person.
- keep a good relationship with all.
- plan your work.

The most important for a teacher is the apperance, because it gives smart and self confident. Good clothes are good investment.

"If you give your best,
the best will come back to you"
"The basis of good appearance is good health"

If a teacher keeps all these qualities, He / She should sare achieved the goal.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தனைத் துளிகள்

சஞ்ஜீகா ஸ்ரீகரன்
தரம் - 11B

- ஆலோசனை என்ற பெயரில் அடுத்தவரை ஆக்கிரமித்தவனே அறிவாளி.
- அறிவு என்னும் கதிர் அறுக்க கண்ணீர் மழை பெய்ய வேண்டும்
- அறிவில் போடும் முதலீடு அதிக இலாபம் தரும்.
- அறிவு தரும் செல்வம் நல்ல வாழ்வு.
- அறிவின் அடையாளம் இடைவிடாத முயற்சி
- அறிவாளி தன்னில் எதையும் பார்க்கின்றான். முட்டாள் எதற்கும் பிறரை எதிர்பார்க்கிறான்.
- தத்துவஞானிக்கு எலி கூட குருவாகும். தோண்டுவது பற்றி அறிவு இவைதான் அழகு.
- அறிவுள்ளவன் சிந்திக்கிறான். அறிவில்லாதவன் நிந்திக்கின்றான்.
- நல்ல செயல்களின் பின்னணியில் நல்லவையே நிழலாடும்.
- தந்தையின் வழிகாட்டலுக்கு இணை எதுவுமில்லை.

****************************************

## நூல்களும் ஆசிரியர்களும்

P. ஜனார்த்
தரம் 5B

| | |
|---|---|
| ஆத்திசூடி - | ஔவையார் |
| திருக்குறள் - | திருவள்ளுவர் |
| சத்தியசோதனை- | மகாத்மா காந்தி |
| நளவெண்பா - | புகழேந்திப்புலவர் |
| பெரிய புராணம்- | சேக்கிழார் |
| கந்தபுராணம் - | கச்சியப்பர் |
| இராமாயணம் - | வால்மீகி |
| மகாபாரதம் - | வியாசர் |



## எங்கள் வித்தியாலயம்

க. கிருபாலினி
தரம் 13 கலை (2010)

கிழக்கு பால் இலங்கையிலே
வளமோங்கும் திருகோணமலை
மாநகரிலே அமைந்துள்ள
விக்நேஸ்வரவே - நீ வாழி
கடமையுணர்வுடைய கண்ணியம் சேர்
அதிபர் ஆசிரியர்களுடன்
திடமாய் எமக்கு கல்வி புகட்டி
திறமையுடன் சித்திபெற வைக்கும்
களமான விக்நேஸ்வரவே நீ வாழி

வையகத்தில் நாம் வாழ்வாங்கு வாழ்ந்து
பாரினிலே மேன்மையுற
ஆழ்கடலில் முத்துப் போல
அறிவுக் கடலில் நாம் திகழ
எம் அனைவரையும் உருவாக்கிய
விக்நேஸ்வரவே நீ வாழி

சமயப் பணியும் சமூகப் பணியும்
சமமாக வளர்ந்திட
சகலருக்கும் இடமளித்து
சகலரையும் வாழ வைக்கும் நீ வாழி
இன்னும் பல நூறாண்டுகள்
எழில் கொஞ்சும் திருமலையில்
பெருமை கொள்ளும் பெருந்தெரு மத்தியில்
பேர் புகழ் பெற்று
பார் புகழும் மேதைகளை
உருவாக்க வேண்டும் என
விக்நேஸ்வர மகாவித்தியாலயம் தனை
நாம் போற்றிடுவோமே.

****************************************

## சிறந்தவைகள்

சு. பாத்திமா அப்ரின்
5A

| | |
|---|---|
| சிறந்த ஆசிரியர் | - அனுபவம் |
| சிறந்த புத்தகம் | - வாழ்க்கை |
| சிறந்த படிப்பு | - பொறுமை |
| சிறந்த நண்பன் | - புகழ் |
| சிறந்த ஆட்டம் | - கடமை |
| சிறந்த உணவு | - சிந்தனை |
| சிறந்த அணிகலன் | - புன்னகை |
| சிறந்த பாதுகாப்பு | - நேர்மை |
| சிறந்த ஊட்டம் | - கல்வி |
| சிறந்த பண்பு | - நன்றி |
| சிறந்த பொழுதுபோக்கு | - சேவை |
| சிறந்த மதம் | - சமத்துவம் |
| சிறந்த உறவு | - மனிதகுலம் |
| சிறந்த காப்புறுதி | - நற்செயல்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வித்தியாலய
பாண்ட்
வாத்தியக் குழுவினர்



வித்தியாலய
துடுப்பாட்டக்
குழுவினர்



வித்தியாலய
வலைப்பந்தாட்டக்
குழுவினர்



வித்தியாலய
உதைப்பந்தாட்டக்
குழுவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய நாடுகள் சபையும் ஸ்ரொக்கோம் மாநாடும்

சா. தாட்சாயினி
தரம் - 13 கலை (2010)

ஸ்ரொக்கோம் மாநாடு 1972ம் ஆண்டு ஜீன் மாதம் 5ம் திகதி நிகழ்ந்தது. முதன்முதல் கூடிய பூகோள சூழல் மாநாடு இதுவாகும். இந்த மாநாட்டில் பொருளாதார வளர்ச்சிக்கும் சூழற்பாதுகாப்புக்கும் இடையிலான தொடர்பாடலைச் சரிவரப்புரிந்து கொள்வதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. சுற்றாடல் அழிவுக்கான காரணிகள், இயற்கை வளங்களை பாதுகாத்தலிற்கான தேவை என்பன பற்றிக் கவனம் செலுத்தியதோடு உலகளாவிய ரீதியில் சுற்றாடல் கல்வியினை அபிவிருத்தி செய்வதற்கு தீவிரமுயற்சி எடுக்கப்பட்டது.

இந்த மாநாடு ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தினால் "மானிட சூழல் மாநாடு" (Conference on the Human Environment) என ஸ்ரொக்கோமில் நடத்தப்பட்டது. இந்த மாநாட்டில் சூழலியற் கல்வியின் முக்கியத்துவம் பற்றி ஆராயப்பட்டது. சூழலியற்கல்வியின் மூலமே சூழல்பிரச்சினைகளை புரிந்து கொள்ளவும் அவை உருவாகாமல் தடுக்கவும் முடியுமென வற்புறுத்தப்பட்டது. சூழலைப் புரிந்துகொள்ளாமல் சூழலியற் கல்வி மூலமே சாத்தியமாகுமென கூறப்பட்டது.

இந்த மாநாட்டில் "வாழ்க்கை ஒன்று உலகம் ஒன்று" என்ற கருத்தினை ஏற்று சூழலின் இயல்நிலையை பேணவும் சிதையாது இருக்கவும் உலகு இணங்கியது. சூழலின் முகாமைத்துவத்திலும் கட்டுப்பாட்டிலும் மக்களை ஈடுபடுத்தும் முகமாக சூழல் பற்றிய கருத்துக்களை தனிப்பட்டோருக்கு அறிமுகப்படுத்துவதற்காக தகவல் திட்டம் ஒன்றை நிறுவுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரொக்கோம் மாநாடு கூட்டப்பட்ட தினமாக ஜீன் 5ம் திகதி உலகச்சூழல் தினமாக கடைப்பிடிக்க வேண்டும் என அந்த மாநாட்டில் பங்குபற்றிய நாடுகள் முடிவுசெய்தன. அன்றிலிருந்து "உலக சூழல் தினத்தை" (World Environment day) ஜுன் 5ம் திகதி நாடுகள் கொண்டாடி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

# சிகரம் தொட்ட சச்சின்

K. சஞ்ஜீத்
12C (2011)

இந்தியா, பெப்ரவரி 24 குவாலியரில் தென்னாபிரிக்காவிற்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் சாதனை நாயகன் சச்சின் 200 என்ற சிகரத்தின் இலக்கினை அடைந்தார்.

சச்சின் ரமேஸ் டெண்டுல்கர் மும்பையைச் சேர்ந்த நடுத்தர குடும்பத்தில் 1973 ஏப்ரல் 24ந் திகதி பிறந்தார். இவர் குடும்பத்தில் நான்காவது பிள்ளையாவார். இவர் 1988ம் ஆண்டு தனது பள்ளிக்காக ஆடிய போட்டி ஒன்றிலே அபாரமாக வினோத் கம்பனியுடன் இணைந்து 664 ஓட்டங்கள் என்ற சாதனையை படைத்தார். இதில் சச்சின் மட்டும் 326 ஓட்டங்கள் ஆகும். டெண்டுல்கர் தனது 16ம் வயதில் 1989ம் ஆண்டு தனது முதல் டெஸ்ட் போட்டிகளில் இந்தியா சார்பாக விளையாடினார். அது பாகிஸ்தான் அணிக்கு எதிராக, இந்த தொடர் அவரால் ஒரே ஒரு அரைச்சதம் மட்டுமே அடிக்க முடிந்தது. இதில் குறிப்பிடத்தக்க விடயம் ஒரு போட்டியில் சச்சின் அப்துல் காதருக்கு எதிராக ஓர் ஓவரில் மட்டுமே 28 ஓட்டங்கள் எடுத்தமை தன்னால் மறக்க முடியாது என கிருஸ்ண மாச்சாரி ஸ்ரீகாந்த் கூறியதாகும்.

1990ல் இங்கிலாந்தில்தான் இவரது கன்னிச் சதம் பெறப்பட்டது. அன்று தொடக்கம் இன்றுவரை இந்தியா சார்பாக டெஸ்ட் மற்றும் ஒருநாளில் நிலைத்து சிறப்பாக ஆடிவருகிறார். இந்தியாவில் கிரிக்கெட் மதம் என்றால் அங்கு சச்சின் தான் கடவுளாக இருப்பார். டெஸ்ட் போட்டிகளில் 12 773 ஓட்டங்கள், ஒருநாள் போட்டியில் 17 378 ஓட்டங்கள் ஆகும். முதல்தர ஆட்டத்தில் 21662. 20-20 போட்டியில் ஒரே ஒரு போட்டி அதில் பத்து ஓட்டங்கள் மட்டும் டெஸ்டில் 42 சதங்கள் 53 அரைச்சதங்கள் ஒருநாள் போட்டியில் ஒரு இரட்டை சதம் 46 சதங்கள் 92 அரைச்சதங்கள் அதிகபட்ச டெஸ்ட் ஓட்டம் 248. ஒருநாள் போட்டியில் 200 என இமாலய ரன்கள் அதிகமான ஆட்டநாயகன், தொடர்நாயகன், அதிக டெஸ்ட் ஒருநாள் சதங்கள் ஒருநாளில் அதிகபட்ச ஓட்டம், டெஸ்டில் அதிக ஓட்டம் என சாதனைகள் குவிந்துள்ளன.

இது தவிர பத்மஸ்ரீ, பத்மவிபூஷன், விளையாட்டின் உயர் விருதான அர்ஜீனா ராஜீவ்காந்தி, கேல்ரத்ன என விருது மழை பொழிகிறது. மாஸ்டர் பிளாஸ்டர், லிட்டில் சாம்பியன், லிட்டில் மானிடர், டெண்டியா என இவரை செல்லமாக அழைப்பர். இத்தனை சாதனை செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் சச்சின் கடந்த பெப்ரவரி 26ம் திகதி அதிகபட்ச ஒருநாள் ஓட்டம் 200 பெற்றார்.

இதற்கு முன்பு பாகிஸ்தானை சேர்ந்த சாய்த் அன்வர் 1997ல் இந்தியாவிற்கு எதிராக 194 ஓட்டங்களை பெற்றிருந்தார். அந்த சாதனையை கடந்தாண்டு சிம்பாபே வீரர் கோவன்ட்ரி சமன் செய்தார். இந்த சாதனையைதான் உடைத்து புதிய உலக சாதனையை படைத்து சச்சினின் ரசிகர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியுள்ளார்.

அதுதான் 2010 பெப்ரவரி 24 குவாலியரில் தென்னாபிரிக்காவிற்கு எதிரான ஒரு நாள் தொடரில் ஆரம்ப ஆட்டக்காரராக களமிறங்கினார். இதில் குறைந்த ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தாலும் அதிரடியாகவும் நிதானத்துடனும் விளையாடிய சச்சின் 147 பந்துகளுக்கு 200 ஓட்டங்களை பெற்றார். இவர் அத்தோடு ஆட்டமிழக்காமல் இறுதிவரை விளையாடி இந்தியா வெற்றி பெற வழிவகுத்தார். இந்த இமாலய ரன்களை சச்சின் மிக எளிதாக பெற்றார். இதற்கு முன்பு, 186, மற்றும், 175, 169 ஆகிய ஓட்டங்களை அதிககூடிய ஓட்டமாக பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வளவு சாதனைக்கு சொந்தக்காரரான சச்சின் தனது கருத்திலே அனைத்து துடுப்பாட்ட வீரர்களும் சிறப்பாக ஆடி சாதனை 200 எனும் ஓட்ட இலக்கினை முறியடிக்க வேண்டும் என்றே தான் விரும்புவதாக குறிப்பிட்டார்.

அத்தோடு அவர் கூறியது சாதனைகள் எப்பொழுதும் முறியடிக்கப்படவேண்டும் என்றும் கூறினார். இத்தனை பெருமைகளைப்படைந்த சச்சின் அடுத்த சாதனையினை புரிவதனை கண்குளிந்து பார்ப்போம்.

*******************************************************************************

## நீரிழிவு நோயும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கான வழியும்

அ. ஜெயயகாந்தி
13 கலை (2010)

இன்று உலகம் முழுவதும் மானிட வாழ்வினை அச்சுறுத்தும் நோய்களில் ஒன்றாகவே நீரிழிவு நோய் காணப்படுகின்றது. காரணம் இந்நோய் பரவலாக அதிகமான மக்களிடம் காணப்படுவதுடன் அதன் தொடர்பு விளைவுகளும் பாரதூரமாகவே இருப்பதுமாகும்.

நீரிழிவு என்பது எமது இரத்தத்தில் இனிப்புச்சத்து (குளுக்கோசு) வழமையாக இருப்பதிலும் பார்க்க அதிகரிப்பதனாலயே நீரிழிவு நோய் ஏற்படுகின்றது. இக்குளுக்கோசானது நாம் உண்ணும் உணவிலுள்ள மாப்பொருள் சமிபாடடைந்து குளுக்கோசாக மாற்றப்பட்டு குருதியால் அகத்துறிஞ்சப்படுகிறது. குருதியிலுள்ள குளுக்கோசு உடற்கலங்களுக்குள் செல்ல உதவுவது உணவுப்பாதையுடன் தொடர்பாக இருக்கும்.

சதையி என்னும் சுரப்பியால் சுரக்கப்படும் "இன்சுலின்" என்னும் ஓர் ஓமோன் ஆகும். இவ் இன்சுலின் உடலில் தொழிற்படாது விடுவதனால் அல்லது சரியான அளவிற்கு உற்பத்தியாகாவிட்டால் நீரிழிவு நோய் ஏற்படலாம்.

நீரிழிவு நோயின் அறிகுறிகள் பற்றி பார்ப்போமானால்

1. அடிக்கடி பசி ஏற்படல்
2. உடலின் தசைகள் வெளுக்கும்
3. அடிக்கடி சிறுநீர் கழித்தல்
4. உடல்சோர்வாக இருத்தல்
5. உடல் நிறை குறைவடைதல்
6. தேகத்தில் பருக்களும் கட்டிகளும் ஏற்படல்
7. தலைசுற்றுதலும், மயக்கம் அடிக்கடி ஏற்படல்
8. கண்பார்வை மங்குதல்

இதன் தாக்கத்தினை பின்வரும் செயல்களினால் கட்டுப்படுத்த முடியும்.

1. நார்த்தன்மையான உணவுகள் (கீரை, முழுத்தானியம், பயறு)
2. சிறிய மீன் வகைகள் விரும்பிய அளவு உண்ணலாம்.
3. தவிடு நீக்காத அரிசிச் சோறு, உழுந்தமா, குரக்கன், வரகு, சோளம், ஆட்டாமா போன்றவற்றை உண்ணலாம்.
4. ஒரு நாளைக்கு சிறிதளவாக 4-5 தரம் உணவுண்பது நல்லது.
5. சாப்பிடாது விரதம் இருத்தல் கூடாது.
6. எண்ணெய், கொழுப்புடன் கூடிய மாமிசம் , சீனி, தேன், குளிர்பானம், தேங்காய் எண்ணெய், பட்டர், மாஜரின், நெய், தேங்காய்ப்பால், முட்டை மஞ்சள்கரு, வீவா, கோர்லீக்ஸ், நெஸ்டமோல்ட் போன்றவற்றை தவிர்க்கவும்.
7. சீரான உடற்பயிற்சிகளை ஒழுங்கான முறையில் மேற்கொள்ளுவது நல்லது.
8. ஒழுங்காக கிரமமாக மருந்துகளை பாவித்து குருதியில் குளுக்கோசின் அளவை தொடர்ந்தும் 80-140ல் வைத்திருத்தல் நன்மையளிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ந்து வரும் மாணவ சமுதாயத்தின் பண்பாடு பற்றிய கண்ணோட்டம்

திருமதி. சாந்தி பார்த்தீபன்
ஆசிரியர்

காலம் செய்யும் கோலங்கள்என்பர் சான்றோர் எதிர்காலத்தில் சிறந்த நட்சத்திரங்களாக தோன்றும் மாணவ சமுதாயத்தின் பண்பாடு நாளுக்கு நாள் அழிவு நிலைக்கு தள்ளப்படுவதை நாம் வெளி உலகில் கண்டு வருகின்றோம். இவ்வாறான நிலைக்கு மாணவ சமுதாயம் தள்ளப்படுவதினால் ஏற்படும் பிரச்சினைகள் அவர்களை அழிவு நிலைக்கு கொண்டு வரும் என்பதில் சந்தேகம் இல்லை.

இருள் நிறைந்த பாதையை நாடிச் செல்லாமல் அவர்களை பாதுகாக்க வேண்டியதும் அவசியமானதொன்றாகி விட்டது இதற்கு காரண கர்த்தாவாக இருப்பவர்கள் பெற்றோர்களும், ஆசிரியர்களும், பெரியோர்களுமாகும்.

நாம் ஒரு கனம் அன்றைய மாணவ சமுதாயத்தை பார்க்கும் பொழுது பெரும்பான்மையான மாணவர்கள் பண்பாட்டில் தேர்ச்சி பெற்றவர்களாகவே காணப்பட்டனர். இதற்கு அவர்கள் பெற்றுக் கொண்ட கல்வி மட்டும் அல்ல அவர்களை வட்டம் போட்ட பொழுதுபோக்குகளும், தொலைத்தொடர்புச் சாதனங்களின் வளர்ச்சி இன்மையுமாகும்.

அன்றைய நிலையில் மாணவர்களின் கைகளில் பொழுதுபோக்கு அம்சமாக புத்தகக்கட்டுக்களே பெரும்பான்மையாக காணப்பட்டன. இவை எல்லாம் பண்பாட்டில் எல்லை மீறிச் செல்ல இடம் கொடுக்கவில்லை. எந்த ஒரு குழந்தையும் பிறக்கும் பொழுது நல்லபிள்ளையாகவே பிறக்கின்றது. ஆனால் அப்பிள்ளை "நல்லவன் ஆவதும் தீயவன் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே என்ற திரைப்படப்பாடலடியும் சான்று பகிர்கின்றது. எந்த ஒரு தாய் தன்பிள்ளை தீயவனாக மாறுவதை பார்த்துக் கொண்டு இருக்கமாட்டாள். ஒரு மாணவனின் பண்பாடு மாற அவனின் அறிவு, திறன், மனப்பாங்கில் தீயனவற்றை பெற்றுக் கொள்ள அவனுக்கு சந்தர்ப்பம் கிடைத்தமையுமாகும்.

நவீன உலகில் இன்ரநெட் தொலைக் காட்சி எல்லாம் மனவெழுச்சியில் விரைவாக மாற்றத்தைக் கொண்டு வருவதனை நாம் அறிந்த விடயமாகும். அது குழந்தைகளின் பிழையல்ல. அவர்களுக்கு நாமே சந்தர்ப்பத்தை அளிக்கின்றோம். அவன் அதனை சிறந்த சாதனமாக அவன் மனதில் ஏற்று நல்ல விடயங்களை பெறுவதற்கு வழி அமைத்து கொடுப்பதும் எம் கடமையுமாகும் என்பதனை நாம் உணர வேண்டும்.

ஒவ்வொரு பெற்றோரும் ஒரு மாணவனின் பண்பாட்டில் தீயவற்றை பெறச் சந்தர்ப்பம் அளிக்காமலும் அவனை அன்பாக, பண்பாக மாற்றிக் கொள்ள சிறந்தவொரு சந்தர்ப்பங்களை அவனுக்கு வழங்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபடவேண்டும். அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும் பொழுது நாம் அச்சம் கொள்ளத் தேவை இல்லை.

"வீட்டுக்கு வீடு வாசற்படி" என்பார்கள் அவர்கள் கதைக்கும் சொற்பிரயோகங்கள் அவர்களின் நடை, உடை, நடத்தைக்கோலங்கள் எல்லாமே பெற்றோரை அச்சத்திற்கு கொண்டு வருகின்றது.

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனையவர்"

அறிவு விளக்கத்திற்குக் காரணமான நூல்களைக் கற்றவர்க்கும், கல்வியறிவு இல்லாதவர்க்கும் உள்ள வேறுபாடு பகுத்தறிவு படைத்த மக்களுக்கும் பகுத்தறிவு இல்லாத ஏனைய விலங்குகளுக்குமுள்ள வேறுபாட்டுக்கு ஒப்பானதாகும்.

கல்வியின் முதற்படியாக விளங்குவது சைவசமய விழுமியப் பண்புகள் ஆகும். வீட்டிலும் சரி பாடசாலையிலும் சரி ஆலயங்களிலும் சரி மாணவர்கள் திடமாக தமக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் அதற்கென்றே நேரம் ஒதுக்குவதும் குறைவாகவே காணப்படுகிறது. நாம் அனைவரும் சமய விழுமியங்களை கற்கின்றோம். ஆனால் அதனைப் பின்பற்ற வெட்கம் அடைகின்றோம். ஏனையோரை ஏமாற்றுதல், அறிவுரைகள், உபதேசங்கள் போன்றவற்றை ஏற்காமை ஏனையோரைத் தாழ்வாக கருதுதல் போன்ற தன்மைகள் அதிகரித்து பண்பாட்டு ரீதியான குணப்பண்புகளும் அருகிக் கொண்டே வருகின்றன.

நாம் சிறிய பிராணிகள் முதற்கொண்டு மனிதர்கள் வரை உயிர்களிடத்தில் அன்பு காட்டல் போன்ற மனப்பாங்கு இன்மையினால் உலகமே அழியும் நிலைக்கு தள்ளப்படுகின்றது. இன்று கொடிய யுத்தத்தின் விளைவுகள் எண்ணிலடங்காது. துச்சமாக மதிக்கப்பட வேண்டிய மனித இனம் கோரப்பசிக்கு உணவு போன்று அருகிக் கொண்டே வருகின்றது. பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்தப்பட வேண்டிய நிலம் புதை குழிகளாக மாறிக் கொண்டு வருகிறது.

போட்டோபோட்டிச் சூழலில், இருந்து, மாணவசமுதாயம் கட்டியெழுப்பப்படட வேண்டும். எனவே பண்பாடு பற்றிய தரவுகளை இனம்கண்டு மாணவபருவத்திலே சிறந்த விழுமியப் பண்புகளை ஊட்டி சிறந்த பண்பாடுடைய தலைவராக மாற்றுவது எம் ஒவ்வொருவரதும் பொறுப்புக்களில் ஒன்றாகும் என்பதை உணர்ந்து பண்பாட்டினை விருத்தி செய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Relationships

Miss : S. Tharsika
11B

Relationship is a bond between relations. It is built in different ways and different people. Earlier people built their relationship throught the letters and their presence. They built their relationships among the few people. They had a good relationship among their relations. They enjoy theirselves through relationship.

Nowa days relationships built through communication. Communication sources are telephones, cellphones, internet, e-mail etc. We can build our relationship world wide, through this modern communication.

Realtionship give many advantages for us. It's bring them to close, build good relations, bring happiness, good future and success. Relationships arise out living together in harmony with love, affection, caring and sharing.

We also have bad effect on this modern communication. It develops bad behaviours and hated habits among the young society. They spend lot of time in internet and message passing over the mobile phone. Most of the youngsters loose their life. We have to control them and change their manners and the parents should take care of their children on these communication.

"A good relationship builds a good Society".



# Healing Fruit Pears

Miss : S. Kajenthini
13 Com (2010)

Pears are an excellent source of water - soluble fibre |they contain vitamins A, B1, B2, C, E, folicacid and niacin and are also rich in copper, phosphorus and potassium, with lesser amounts of calcium, chlorine, iron, magnesium, sodium and sulfur. often recommended as a hypo - allergonic fruit which is high in fibre but less likely to produce adverse relations, pear juice is safe to be introduced to infants as it is mild. yot healthful.

Pears have anti - oxidant and anti - carcinogen glutathione which helpprevent high blood pressure and stroke. The high vitamin cand copper content act as goog antri - oxidants which protect of cells faom damage by free radicals. The high content of pectin in pears also makes them effective in helping lower cholesterol levels and the high level of boron helps the body retain calcium, helping to prevent osteoporosis.

# கற்றுக் கொள்

அ. றொபோட் ஹரிஷன்
தரம் 5A

பூக்களிடம் கற்றுக் கொள்
புன்னகை புரிவாய்
மரங்களிடம் கற்றுக் கொள்
வள்ளலாய் வளர்வாய்

பறவையிடம் கற்றுக்கொள்
உறவை இணைப்பாய்
விலங்கிடம் கற்றுக்கொள்
வீரமாய் நடப்பாய்

நதியிடம் கற்றுக்கொள்
நன்மைகள் பெறுவாய்
மலையிடம் கற்றுக்கொள்
மாண்புடன் இருப்பாய்

கடலிடம் கற்றுக்கொள்
ஞானத்தைப் பெறுவாய்
காற்றிடம் கற்றுக்கொள்
காலத்தை வெல்வாய்

உன்னிடம் கற்றுக்கொள்
விஞ்ஞானி ஆவாய்
மண்ணிடம் கற்றுக்கொள்
வாழ்வியல் பொழிவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசர நிலைக் கல்வி என்றால் என்ன?
## What is Emergency Education?

திருமதி. சி. சந்திரசேகரம்
(ஆசிரியர்)

இயற்கை அனர்த்தங்களின் போதோ அல்லது யுத்தம் போன்ற முரண்பாட்டு நிலைமைகளின் போதோ தேசிய ரீதியிலான கல்விச் செயற்பாட்டுகளில் சிறார்கள் ஈடுபடமுடியாது போகின்றது. அல்லது அக்கல்வி வாய்ப்புக்கள் குறைந்து முன்னெடுக்கப்படுகின்ற கல்விச் செயற்பாட்டினையே அவசர நிலைக்கல்வி எனக் குறிப்பிடலாம். இது முறைசார்ந்தும் முறைசாரததுமான கல்விச் செயற்பாடாக இருக்கலாம். ஏனெனில் இன்றைய முரண்பாடுகள் சிக்கலானதும் நீண்ட காலத்திற்கு இழுபட்டுச் செல்வதும் தான் வரலாறு. எனவே அவசர நிலைக்கல்வி என்பது இத்தகைய முரண்பாட்டு நிலைமைகளுக்கிடையில் ஒரு முறைசாராக் கல்விச் செயற்பாடாக மட்டுமல்லாது முறைசார்ந்த கல்வியை ஏற்படுத்துகின்ற செயற்பாடாகவும் உள்ளது. அதாவது முரண்பாடு அல்லது அனர்த்த நிலைமையின் பின்னரான சமூகத்தை மீள ஒழுங்குபடுத்துவதும் அதற்கூடாக அரசின் கல்விச்செயற்பாட்டுக்கு கட்டமைப்பை செயற்படுத்துவது ஆகும். இது ஒரு மாதத்திலோ அல்லது ஒரு வருடத்திலோ செயற்படுத்தி முடிக்கும் ஒன்றல்ல. இயல்பான கல்வி அபிவிருத்தி நிலைமை ஏற்படும் காலம் வரையில் செயற்படுத்துகின்ற ஒரு நீண்ட செயற்பாடாகும்.

**அவசர நிலையில் கல்வி என்பது சமூகத்தின் புனர்வாழ்விற்கான அடிப்படை மட்டுமல்லாது சிறார்கள் எதிர்நோக்கும் அச்சுறுத்தல் நிலைமையில் இருந்து பாதுகாக்கும் செயற்பாடாகும்.**

அவசர நிலைமைகளின் போது நிகழ்கின்ற கல்விச் செயற்பாடுகள் சிறார்களின் பாதுகாப்பையே அடிப்படையில் முன்னிலைப்படுத்தும் அனர்த்தங்களில் இருந்து உயிர் தப்பிக்கவும் உளப்பாதிப்புக்களில் இருந்து விடுபட ஆதரவைப் பெறவும் பலாத்காரமாக வீடுகளில் இருந்து வெளியேற்றப்படாதிருக்கவும் செயற்படுத்தப்படுகின்றது.

கல்விச் செயற்பாடுகள் சிறார்களின் கல்விக்கான வாய்ப்புக்களை கற்பதற்கான சூழலை அதிகரிப்பதுடன் தரமான கல்வி கிடைப்பதற்கும் முன்முயற்சி எடுக்கின்றது. அது மட்டுமல்லாது தொடர்ந்து பாடவிதான, கலைத்திட்ட அபிவிருத்தியையும் கல்வியின் தரத்தையும் சிறார்கள் எய்த வேண்டிய தேர்ச்சிகள் பற்றியும் கவனம் செலுத்துகின்றது. இக்கல்விச் செயற்பாடு அபாயகரமான முரண்பாட்டுச் சூழலில் இருந்து சிறார்களுக்கு பௌதிக உடலியல் ரீதியிலான பாதுகாப்பை வழங்க முடியும். அனர்த்தங்களினால் ஏற்படும் உளப்பாதிப்புக்களை குறைக்க முடியும். அத்துடன் விசேட தேவைகள் வழங்கப்பட வேண்டிய சிறார்கள் பற்றியும் அவர்களை அடையாளம் காணவும் இது உதவுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிகாட்டி

(சிறுகதை)

இ. ஜெகதாம்பிகை
12 கலை பிரிவு (2011)

பூந்தோட்டம் என்னும் அழகிய கிராமம் முழுவதும் பசுமை நிறைந்து காணப்படும். எங்கு நோக்கிலும் கண்ணுக்கு குளிர்ச்சி தரக்கூடிய நீர் வீழ்ச்சிகள், வயல்கள், மலைச்சாரல்கள் என்று அவ்வூரில் இயற்கை அழகை கூறிக் கொண்டே செல்லலாம். எங்கு பார்த்தாலும் அழகிய பூக்கள் வண்ண வண்ண நிறங்களில் பூத்துக் குலுங்குகின்றன. இதனாலே தான் இவ்வூருக்கு பூந்தோட்டம் என்ற பெயர் வைத்தார்களோ என்னவோ? அவ்வாறு பசுமை நிறைந்த கிராமத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அக் குடும்பங்களில் ஒன்றுதான் சின்ன முத்துக் குடும்பம். இவர்கள் நடுத்தரக் குடும்ப வகுப்பைச் சேர்ந்தவர்கள். சின்ன முத்துவுக்கு பார்வதி என்ற மனைவியும், விமலா என்ற ஒரு மகளும், ரவி என்ற ஒரு மகனும் இருக்கிறார்கள்.

சின்ன முத்துவோ அக்கிராமத்தில் உள்ள பண்ணையாரிடம் கங்காணியாக வேலை செய்து வருகிறார். பார்வதி சின்ன முத்துவுக்கு ஏற்ற பண்புள்ள குடும்ப மனைவி. விமலா அக்கிராமத்தில் உள்ள சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் தரம் எட்டில் கல்வி கற்கிறாள். ரவி தற்போது க. பொ.தர உயர்தரத்தில் கல்வி கற்று வருகின்றான். ரவி தோற்றி இருக்கும் துறை விஞ்ஞானத் துறை. அவன் கண்டு பிடிப்புக்களில் மிகுந்த ஆர்வம் கொண்டவன். புத்தகங்களை தனது நெருங்கிய நண்பனாக நினைப்பவன். வாசிப்பில் ஆர்வம் உண்டு. சின்ன முத்துவின் வருமானம் அவனது வீட்டுச் செலவுகளை பூர்த்தி செய்வதற்காக மட்டுமே போதுமானதாக உள்ளது. இருந்தும் தனது பிள்ளைகளை படிக்க வைத்து பெரிய பதவியில் அவர்களைப் பார்க்க வேண்டும் என்பதே சின்ன முத்துவின் கனவு. தனக்கு பின் தன் ஆண்பிள்ளை இருக்கிறான் என்ற இறுமாப்பு சின்ன முத்துவுக்கு எப்போதுமே இருப்பதுண்டு. தனது குடும்பத்துக்காக இரவு பகலாக கண்விழித்து உழைக்கிறான்.

பார்வதியும் சிறிது காலத்தின் பின் தனது குடும்ப வருமானத்துக்காக வீட்டு வேலைகளுக்கு போகத் தொடங்கினாள். தந்தையும், தாயும் இவ்வாறு வருந்துவதைக் கண்டு ரவி பல இரவுகள் தூங்காமல் கண்ணீர் விட்டுள்ளான். இப்போது ரவி தனது படிப்பின் இறுதி ஆண்டில் காலடி வைத்துள்ளான். ரவியின் படிப்புச் செலவே ஒரு மாதத்துக்கு ஆயிரத்துக்கு மேல் போகின்றது. இந்நிலையில் விமலாவையும் படிக்க வைப்பது சின்ன முத்துவுக்கு சிரமமாகத்தான் இருந்தது. எனினும் விமலா படிக்க வேண்டும் என்று ஆசைப்படுவதனாலேயே அவள் ஆசை நிறைவு பெற வேண்டும் என்று படிப்பை தொடர்ந்து கவனித்து வருகிறார். சில நேரங்களில் சாப்பாட்டுக்கு இல்லாவிட்டாலும் பிள்ளைகளின் படிப்புக்கு இருக்கும் பணத்தைச் செலவு செய்து விடுவார்கள். ரவி கேட்கும் புத்தகங்களை உடனே அவர்கள் வாங்கிக் கொடுத்து விடுவார்கள்.

விமலா இன்று காலை பாடசாலை சென்று வீட்டுக்கு திரும்பி வந்தாள். வந்தவுடன் "அம்மா நாளைக்கு மறு தினம் பள்ளி கூடத்தால் சுற்றுலா போறாங்க. எனக்கு இரண்டாயிரம் ரூபா பணம் வேண்டும்" என்று கேட்கிறாள். அன்று சின்ன முத்துவுக்கு காய்ச்சல் வேலைக்கும் போகவில்லை. பார்வதி உடனே "மகள் இண்டைக்குச் சோத்துக்கு கூட வழி இல்ல "இரண்டாயிரத்துக்கு எங்க போறது" என்று மகளை பார்த்து கூற விமலா நீங்கள் போன முறையும் "இதைத்தான்" கூறுனீங்க. இந்த முறை எல்லா மாணவர்களும் கட்டாயம் போக வேண்டும் அம்மா" என பணிவான குரலில் கூறினாள். சின்ன முத்து மகளின் ஆதங்கத்தை கண்டு மகளின் இந்த சின்ன ஆசையைக் கூட நிறைவேற்ற முடியவில்லை என்று மனம் வருந்தினான். தன் கணவன் மனம் வருந்துவதை பொறுக்காத பார்வதி. உடனே தங்கம் என்று தன் காதில் இருந்த தோட்டைக் கழற்றி அடகு வைத்து தன் மகளை சுற்றுலா அனுப்பினாள். இதைப் பார்த்தும் பார்க்காதது போல் ரவி தன் மனதுள் வருந்தினான். தான் படித்து தன் குடும்பத்தை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் அவன் மனதில் "பசு மரத்து ஆணி" போல் பதிந்தது.

தற்போது சின்னமுத்துவின் நிலை நாளுக்கு நாள் மோசமானது. அவனின் வைத்திய செலவுக்கு கூட பணம் இல்லை. பார்வதி வீட்டு வேலை செய்து கொண்டு வரும் பணம் படிப்புச் செலவுக்கு மட்டுமே போதுமானதாக இருந்தது. வீட்டு வேலை செய்து அவர்கள் கொடுக்கும் உணவை உண்டு காலம் கழித்து வருகிறார்கள். சின்ன முத்துவின் உடல் நிலை திடீர் என அன்று இரவு மேலும் மோசமானது. நாட்டு வைத்தியரும் அவரை உடனே பட்டணத்து ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகச் சொன்னார். அவர்ளும் சின்ன முத்துவை அழைத்துச் சென்றனர். அங்கு உடனே மருந்துச் செலவுக்கு மூவாயிரம் ரூபா கட்டுமாறு வைத்தியர்கள் கூறினார்கள். ரவியும், விமலாவும் கண்ணீருடன் பணம் தேடி உறவினரிடம் சென்றார்கள். ஒருவரும் உதவவில்லை. இறுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதி கணவன் உயிரை காப்பாற்ற தன் கழுத்துத் தாலியைக் கழற்றி கொடுத்து அதை விற்று விட்டு பணம் கட்டுமாறு ரவியிடம் கொடுத்தாள். ரவியும் வேறுவழியின்றி அவ்வாறே செய்து முடித்தான். இருந்தும் என்ன பயன்? சின்ன முத்து அக்குடும்பத்தை கண்ணீரில் விட்டு சென்றார்.

பார்வதியும் அவளது பிள்ளைகளும் மிகவும் ஆறாத துயரத்தில் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தனர். ஒருவாறாக தந்தையின் இறுதிச் சடங்கை பண்ணையாரிடம் பணம் பெற்று செய்து முடித்தார்கள். இப்போது ரவிக்கு தன் படிப்பை விட குடும்பத்தை காப்பாற்றுவதே முக்கிய கடமையாக இருந்தது. ரவியும், விமலாவும் படிப்பதை நிறுத்தினார்கள். பார்வதி வீட்டு வேலைக்குச் செல்வதைத் தொடர்ந்து செய்து வந்தாள். மனம் உடைந்து போன ரவி இந்நிலையில் தனது கவலையை மறப்பதற்காக அடிக்கடி நூலகத்திற்குச் செல்வான். நல்ல நூல்களை வாசிப்பான் உடனே அவனது மனக்கவலை பறந்துவிடும். தன் குறைகளைக் கூட புத்தக நண்பனிடமே கூறுவான். அவன் படித்த புத்தகங்களில் உள்ள நல்ல சிந்தனைகள் அவனை திடப்படுத்தின. அதில் ஒன்று நீ படித்ததைக் கொண்டு செயல்படு என்பதை அது வலியுறுத்தியது. அவன் தன் தந்தை செய்து வந்த கங்காணித் தொழிலை அவன் செய்யத் தொடங்கினான். விமலா புத்தகத்தைப் படித்து தையல், அலங்கார வேலைகளைப் பழகினாள். அதை தொழிலாகவும் செய்யத் தொடங்கினாள். இதனால் அவளுக்கு நிறைய வருமானம் வரத்தொடங்கியது. அத்துடன் சிறு பிள்ளைகளுக்கு மாலை நேர வகுப்பும் எடுத்தாள். இதனால் வருமானம் கூடியது. விமலா தன்னுடைய வருமானம் மூலம் குடும்பத்தை பார்த்தாள். ரவி தன்னுடைய வருமானத்தில் ஊரில் உள்ள கடன்களை அடைத்து புது வீடும் கட்ட ஆரம்பித்தான்.

ரவி தான் வேலைக்கு சென்ற போதிலும் நூலகம் சென்று வாசிப்பதையும் ஆராய்ச்சியில் ஈடுபடுவதையும் கைவிடவில்லை. ரவி ஓர் நாள் தன் பாடசாலை நண்பனை சந்திக்க நேர்ந்தது. அவன் ரவியின் ஆராய்ச்சி, திறமையை ஞாபகம் ஊட்டினான். இதனால் ரவி அவ் ஆராய்ச்சி மூலம் கண்டு பிடிப்புக்களை நிகழ்த்த வேண்டும் என்பதே அவன் நண்பனின் அவாவாக இருந்தது. ரவி தன்னுடைய ஆராய்ச்சியில் கண்டு பிடிப்புக்களை மேற்கொண்டு உயர வேண்டும் என்பதை நிலை நிறுத்தி ஆராய்ச்சியில் ஈடுபட தேவையான புத்தகங்களை நூலகங்களிலும், நண்பர்களிடத்தில் இருந்தும் பெற்றுக் கொண்டான். அப் புத்தகங்கள் மூலம் வீட்டுத் தோட்டம் செய்யும் இலகுவான முறைகளை அறிமுகம் செய்தான். இதன் விளைவு அவனுக்கு புகழையும், செல்வத்தையும் கொடுத்தது. அத்துடன் அவன் கடல் நீரை நன்னீராக மாற்றும் முறையை நூல்களை வாசித்து அதனையும் செய்து காட்டினான். இது அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அவனுக்கு புகழ் பன்மடங்கு பெருகி செல்வம் அவனிடம் பெருகியது.

ரவியை ஒரு நாள் நேர் முக பேட்டியில் உங்கள் உயர்வுக்கு யார் காரணம் என்று கேட்க . அவன் கூறிய பதில்கள் என் உயர்வுக்கு "நண்பர்களாக இருக்கும் நூல்களே காரணம்" என கூறினான். இப்பதில் உலகத்தாரை வியப்பில் ஆழ்த்தியது. இறுதியாக அவன் கூறிய வார்த்தை "வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைவான்"

# Good Manners

**R. Rasamani**

A person's behaviour speaks a lot about him or her. Good manners are nothing more than being kind, polite and considerate to others. It simply means that we should respect for of the people around us and our environment.

Good manners reveal a person's breeding. They speak not only about that particular person but also about his or her family. Because home is the place where we acquire most of our habits. Children always copy the behaviour of their parents and elders. As a result, through a person's behaviour we can tell a lot about his or her family.

We should try not to hurt others by our speech or action. We should always try to be kind and polite to every one. It is important to listen, when the other person is talking. Littering the road, Spitting in public, playing, loud music in car and homes, etc ........... are all examples of poor manners.

"A truly educated person will be well mannered"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களின் மனஎழுச்சி சுயஊக்க மனனச் சபதம்

உங்கள் குழந்தைகள் அதிகாலையில் துயில் எழுந்ததும் மீண்டும் இரவில் துயில்கொள்ள முன்னரும், தினம் தினம் மனதில் எடுக்க வேண்டிய சுய ஊக்க மனவளச் சபதம்.

- இன்று இனிய நன்நாள்! கல்வியிலும் கலைகளிலும் சிறந்திடும் உயர்நாள்.
- நான் இன்றும் என்றும் நல்விருப்புடனும் நல் எதிர்பார்ப்புகளுடனும் பாடசாலை செல்வேன்.
- நான் இன்றும் என்றும்கல்வியில் மிகநல்ல புத்திகூர்மை உடையவனாகவும் புதுமை ஆக்கம் நிறைந்தவனாகவும் விளங்குவேன்.
- நான் இன்றும் என்றும் கல்வியில் மிகநல்ல உயர் உன்னத உச்ச சாதனைகளை நிலைநாட்டுவேன்.
- நானே திறமையானவன்: நானே முதன்மையானவன்: இன்றும் திறமையானவன் என்றும் திறமையானவன்.
- எனக்கு ஒளிமயமான எதிர்காலம் அமையும்.
